விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து எட்டு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


WESTERN UNION WU
moving money for better
(C-1242)
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு நரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S. ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 04 புதன்கிழமை (17.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

# தமிழ்த் தலைமைகள் தவறிழைத்து விட்டனர்

## திரண்டு எழுந்த மக்கள் மத்தியில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை





(யாழ்ப்பாணம்)
புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமிழ்த் தலைமைகள் தவறிழைப்பதாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் ஓரிருவர் கொழும்பில் இருந்து கூறுவது மக்களின் மனோநிலை இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (27ஆம் பக்கம் பார்க்க)

## பல தடைகளை தாண்டி
## பேரவையின் கலந்துரையாடல் சிறப்பாக நடைபெற்று முடிந்தது

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடலுக்கு ஒரு சில சக்திகள் திட்டமிட்ட வகையில் தடைகளை ஏற்படுத்தியிருந்த போதும் தடைகளையும் தாண்டி நூற்றுக் கணக்கான மக்கள் பங்களிப்புடன் நேற்றைய கலந்துரையாடல் கருத்தமர்வு நடைபெற்று முடிந்துள்ளது. 27☛

### மீசாலையில் ரயில் மோதியதில்
## மாணவி படுகாயம் இரு பசுமாடு பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதத்துடன் மோதுண்டு இரு பசுமாடுகள் உயிரிழந்ததுடன் பாடசாலை மாணவியொருவர் படுகாயமடைந்துள்ளார். 27☛

## அரசியல் விவாதத்தை தடுப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்
### சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன்

(யாழ்ப்பாணம்)
அரசியல் விவாதத்தை தமிழ் மக்கள் மத்தியில் நடத்த விடாமல் தடுப்பது என்பது தமிழர் மத்தியில் ஒரு ஜனநாயக ரீதியான நீரோட்டமும் ஆழமான ஜனநாயக கலாசாரமும் தோற்றம் பெறுவதனை தடுப்பதற்கே என யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை தலைவரும் விரிவுரையாளருமான சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற 04☛

## இன மதங்களை பயன்படுத்தி வடக்கில் தேர்தல் பிரசாரம்
### பப்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)
உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் இன, மதங்களைப் பயன்படுத்தி பிரசாரம் செய்யும் பகுதிகளில் வடமாகாணம் முன் 27☛



### அமைச்சரவை கூட்டத்தில் குழப்பம்
## கூட்டத்தின் இடைநடுவே வெளியேறினார் ஜனாதிபதி

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போது சலசலப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சரவை கூட்டத்தின் ஆரம்பத்திலேயே விசேட 27☛



## தபால் மூலவாக்கு திங்கள் ஆரம்பம்

(கொழும்பு)
உத்தேச உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொலிஸார் தபால் 27☛

### கிளிநொச்சியில்
## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(மல்லாவி)
கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சியில் உள்ள பன்னங்கண்டி பாலத்தின் கீழிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இளை 28☛

## பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை
### 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் களத்தில்

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இதுவரையிலும் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியின் அங்கத்துவம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 27☛

### பிணைமுறி அறிக்கை
## நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)
பிணைமுறி ஆணைக் குழுவின் அறிக்கை இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் மஹிந்த சமர 28☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**உங்கள் பழமை வாய்ந்த பொருட்கள்**

புதிய அல்லது பாவித்த மாணிக்கக் கற்கள், இரத்தினக் கற்கள், கைக்கடிகாரம், பழமை வாய்ந்த சிலைகள் தகுந்த விலைக்கு வாங்கும் ஒரே ஸ்தாபனம்.

**உடனடித் தொடர்புகளுக்கு :**

**071 059 9971**

(2425)

# நானே தனிப்பட்ட முறையில் குற்றவாளிகளை தண்டிப்பேன்

## பிணைமுறி குறித்து மைத்திரி அறிவிப்பு

மத்திய வங்கி பிணைமுறி விசாரணை அறிக்கை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. பாராளுமன்ற இணையத்தளத்தின் ஊடாக அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் குற்றவாளிகளை தண்டிக்கும் பொறுப்பை நானே தனிப்பட்ட முறையில் ஏற்றுக கொள்வேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த 2015-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்றதாக கூறப்படும் மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் ஊழல் விவகாரம் குறித்து பாரிய சர்ச்சை எழுந்த நிலையில் உண்மைகளை கண்டறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

**2018ஆம் ஆண்டிற்கான நிரந்தரமான வேலைவாய்ப்பு**

**O/L & A/L இன் பின்னர் நிரந்தர வருமானத்துடன் தொழில் தேடுபவரா?**



- முதல் 3 மாதம் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
- பயிற்சியின் பின்னர் உங்கள் நகரங்களில் ஆரம்பிக்கவுள்ள எமது கிளைகளில் நிரந்தர தொழில் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது மாதாந்த வருமானம் 20000/-, பயிற்சியின் பின் 55000/- மேல்

(2436)



**தங்குமிடம், உணவு, மருத்துவம் இலவசம் ஆண்/ பெண் இருபாலாருக்கும்**

**குறிப்பு:இந்த வாய்ப்பு முதல் 20 பேருக்கு மாத்திரமே**

**தொடர்புகளுக்கு:-0766048878, 0771056848, 0772881162**

# மரண அறிவித்தல்

## பரராஜசிங்கம் விக்கினேஸ்வரன்



**(ஓய்வுபெற்ற இலங்கைக் கடற்படை உத்தியோகத்தர்)**

பரராஜசிங்கம் விக்னேஸ்வரன் கடந்த (15.01.2018) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கமலமணி அவர்களின் அன்புக் கணவரும், சர்மினி (சட்டத்தரணி) அவர்களின் அன்புத் தந்தையும், ஜனனி (யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) அவர்களின் பேரனும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் - தெய்வானைப் பிள்ளை (கண்டி) தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற முருகேசு - பாக்கியம் தம்பதியினரின் (நெல்லண்டை, தும்பளை) மருமகனும், பாக்கிய லஷ்மி, ஆனந்தசந்திரா (கனடா), புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான T.பரராஜசிங்கம், பரமேஸ்வரி, ராஜபூபதி, ராஜசேகரன், ஜெயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் சகலனும், பேராசிரியர் ச.மனோன்மணி, தயாபரன் ஆகியோரின் மைத்துனரும், வசந்தி அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரனும், கலைச்செல்வி (அவுஸ்திரேலியா), திருநங்கை (கனடா), செந்தூரன் (லண்டன்), டிலக்ஷன் (கனடா), நிவாஷன் (கனடா), சுகாஷன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், பிரதீபன் (அவுஸ்திரேலியா), சுரேஷ் (அமெரிக்கா), ருமேஷ் (கனடா), டிரேஷ் (நோர்வே), ஆதவன் (அமெரிக்கா), ஸ்ரீரமணீகரன் (அமெரிக்கா), யதுகுலன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2018) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33/3, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2472)

தகவல் :
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



கலாநிதி **விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கெனடி**

(எதியோப்பிய பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர், கிழக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்)

அன்பு கனிந்த முகத்தினன்
ஆறுதல் தரும் வார்த்தைக்கு நிகரானவன்
இனிதே உரித்தான மென்மை உள்ளம் படைத்தவன்
ஈடுஇணையற்ற ஆங்கில புலமையாளன்
உரிமையான எமது தம்பியுமானவன்
ஊடகத்து விளக்கம் சொல்லும் புலமையாளன்
எதுவாக இருந்தாலும் கவி சொல்லும் ஆற்றல் உள்ளவன்
ஏற்றமிகு எம் ஆங்கில பேராளன்
ஊர் மக்கள் மனங்களில் கெனடி என்னும் நாமம்
வளர்த்தவன் / நிறைந்தவன்
எம் குடும்பத்தின் ஏற்றத்திற்கு அறிவூட்டியவன்
எம் பொக்கிஷம் இன்று எம்மோடு இல்லை
அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கை ஆக்குகின்றோம்.

746, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(வண்- மேற்கு வைத்தியசாலை
வண்ணார்பண்ணை) (2437)

தகவல் :
தனபாலசிங்கம்
குடும்பத்தினர்

# கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



| சி.வில்லரசன் | தி.கீர்த்தனா | ந.தமிழினியன் | பெ.மேனன்மதுசன் | க.கஜானன் |
|---|---|---|---|---|
| கலைப்பிரிவு 3-A | வர்த்தகப்பிரிவு 3A | பொறியியற் தொழில்நுட்ப பிரிவு 3B | கலைப்பிரிவு - 3A | உயிரியல் விஞ்ஞானப்பிரிவு - 3A |
| மாவட்ட நிலை- 01 , தேசிய நிலை- 253 | மாவட்ட நிலை- 01, தேசிய நிலை- 110 | மாவட்ட நிலை- 01, தேசிய நிலை- 175 | மாவட்ட நிலை- 04, தேசிய நிலை- 549 | மாவட்ட நிலை- 04, தேசிய நிலை- 474 |
| Merit Pass | Merit Pass | Merit Pass | Merit Pass | Merit Pass |

2017-ம் ஆண்டின் க.பொ.த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் மூன்று துறைகளிலும் முதல்நிலை பெற்றுக் கொண்ட மாணவர்களையும், சிறந்த பெறுபேறுகளை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த சாதனையாளர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**01. கலைப்பிரிவு**

இ.சிவகுமார்: 2AB - 28, ச.கபிலன்: A2B - 31, சி.லக்சிகா: ABC - 47, மொ.கிரிஸ்ரி: 2BC - 48, ச.சாந்தினி : ABC - 50, சு.தமிழினி : 3B - 55

**02. வர்த்தகப்பிரிவு**

கோபினா: A2B - 31, உ.லக்சனா: 2AB - 28, வி.சாரங்கன்: A2B - 34, த.பிரதினா: ABC - 40

**03. பொறியியல் தொழில்நுட்ப பிரிவு**

கே.கோபிசாந்: 2CS - 12, கு.துளிர்சன்: 2CS - 13, பி.கயன்: C2S - 19, க.தூயவன்: 3S- 21, பொ.பீற்றர்: C2S - 21, சி.யூட் ஜனோஜன்: 3S - 40

**04. பௌதிக விஞ்ஞான பிரிவு**

வி.விதுஷன்: 2AC-8, த.ஜெயவேந்தன்: ABC-10, ஆ.டக்சன்: C2S-18, ர.ரேணுஜா: A2C-29, யூ.சங்கீதா: ACS-34, ம.டிலோஜன்: B2C-36, கோ.ஜெயஅர்ச்சனா: BCS-23, பொ.டசிகரன்: 2CS-52

**05. உயிரியல் விஞ்ஞான பிரிவு**

பா.அரவிந்தன்: B2C - 23, நா.கஜமுகன்: 3C - 36

**06. உயிரியல் தொழில்நுட்ப பிரிவு**

இ.துஷாந்தி: B2C-04, ஞா.ஜனதர்சி: BCS-09, வி.துஷ்யந்தினி: 2CS-10, ர.லக்குவன்: 2CS-15, பி.கஜன்: C2S-19, ச.கோவர்த்தன்: 2CS-18, ச.டயசா: C2S-24, ர.ஜர்சிகா: 3S-27, ஜெ.கீர்த்திகா: C2S-28, ஆ.தர்சிகா: C2S-42, சு.சங்கீதா: 3S-44, அ.கஜீபன்: C2S-37

**கல்லூரிச் சமூகம், கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.**

(கி-1247)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற மோதல் திட்டமிட்ட சதி!

## சபாநாயகர் அலுவலகம் அறிவிப்பு



(கொழும்பு)

கடந்த 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவமானது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கை என்பது உறுதியாகியுள்ளதாக சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

குறித்த தினத்தில் நாடாளுமன்ற அமர்வுகளைக் குழப்புவதற்காக திட்டமிடப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற பாதுகாப்பு பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளதாக சபாநாயகர் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விசாரணை அறிக்கையை அன்றைய தினம் சமர்ப்பிக்க முடியாதெனவும், இன்று 17 ஆம் திகதி அதனைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி செயலாளர் அறிவித்துள்ளதாக சபாநாயகர் கருஜெயசூரிய அறிவித்த பின்னரும், நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபாநாயகரிடம் தொடர்ந்தும் குறித்த அறிக்கையை கோரி நச்சரித்ததுடன், நாடாளுமன்ற அலுவல்களுக்கு தடையை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டார்.

அத்துடன், தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட உறுப்பினர்கள் சிலரின் நடவடிக்கை திட்டமிடப்பட்ட ஒன்றெனவும், இதன் காரணமாகவே பிரதமர் உரையாற்றும்போதும் தடைகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## யாழ்.பல்கலை.கலைப்பீட விரிவுரைகள் மீள ஆரம்பம்

(யாழ்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைவதற்காக விதிக்கப்பட்ட பொதுவான தடை உடனடியாக செயற்படும் வண்ணம் நீக்கப்பட்டுள்ளது. 18.01.2018 ஆம் திகதி வியாழக்கிழமையிலிருந்து அனைத்து விரிவுரைகளும் ஆரம்பாகும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## இலங்கை வருகிறார் சிங்கப்பூர் பிரதமர்

(கொழும்பு)

சிங்கப்பூர் பிரதமர் லீ சியேன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இவர் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## வடக்கிலுள்ள உயர் மின்னழுத்த மார்க்கங்களின் காவலிகளை பராமரிப்பு செய்ய புதிய இயந்திரம்

### இலங்கை மின்சார சபை மக்களிடம் வேண்டுகோள்

(யாழ்பாணம்)

இலங்கை மின்சார சபையின் பிரதான பொறியியலாளர் (பரிவர்த்தனையும் பராமரிப்பும்) பிரிவான வட மாகாணத்தின் நுகர்வோருக்கு தடையற்ற மின்சாரத்தினை வழங்கும் நோக்கோடு உயர் மின்னழுத்த மார்க்கத்தின் காவலிகளை சுத்தம் செய்வதற்கான புதிதாக வடிவமைக்கப்பட்ட இயந்திரம் ஒன்றினை ஐரோப்பாவில் இருந்து கொள்வனவு செய்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இயந்திரமானது மின் தடையினை மேற்கொள்ளாமல், மின்சாரம் உள்ள போதே உயர் மின்னழுத்த மார்க்கத்தின் காவலிகளை சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு மின்மார்க்கத்தின் காவலிகளை சுத்தமாக்குவதற்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பயன்படுத்தப்படுகின்றது.

இத் தண்ணீரானது சுன்னாகம் மின்சார நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள விஷேடமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரங்களினூடாக பெறப்படுகின்றது. மற்றும் சுத்திகரிப்பாளர்கள் உரிய பாதுகாப்பான முறைமையினை மேற்கொண்டே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

எனவே அனைத்து மின் பாவனையாளர்களுக்கும் விடுக்கப்படும் வேண்டுகோளானது மின்சார சபை ஊழியர்களினால் செயற்படுத்தப்படும். இச் சேவையினைப் போன்று மின் பாவனையாளர்களாகிய நீங்களும் இவ்வாறு முயற்சிக்க வேண்டாம் எனவும் உயர் மின்னழுத்த மார்க்கங்களுக்கு அருகாமையிலோ அல்லது அவற்றினை தொடுகையுறும் வகையிலோ எந்த ஒரு மனித தலையீட்டினையும் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் டி.கே.பி.யு குணதிலக வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## சம்பந்தனுக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி எந்த சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக?

### பிள்ளையான் கட்சி பிரசாந்தன் கேள்வி

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியினை ஒரு போராளிக்கு கொடுப்பதை போன்று சர்வதேசத்திற்கு காட்டுவதற்காகவே பிள்ளையானுக்கு வழங்கியதாக சிலர் விமர்சிக்கின்றனர் என சுட்டிக்காட்டிய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசா ந்தன்,



அப்படியாயின், சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமித்தது எந்த சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு - மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்காடு, தேற்றாத்தீவு வட்டாரத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளர் அலுவலகம் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கேள்வியெழுப்பினார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எமது தலைவர் சந்திரகாந்தனின் தலைமையில் எல்லா மக்களும் படகை ஆதரிக்கின்ற நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாத தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தூர நோக்குடைய சிந்தனையினை விமர்சிக்கின்ற நிலைக்கு வந்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியினை ஒரு போராளிக்கு கொடுப்பதாக சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக பிள்ளையானுக்கு வழங்கியதாக யோகேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

அவர் அரசியல் ஞானம் இல்லாமல் பேசியிருக்கின்றார். 2008ஆம் ஆண்டு 43,000 வாக்குகளைப்பெற்று சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாண முதலமைச்சரானார்.

அவர் முதலமைச்சராக இருந்து கிழக்கு மாகாணத்தில் பாரிய அபிவிருத்திகளை செய்து காட்டியதுடன் மாற்று சமூகத்திடம் சோரம் போகாமல் மாற்றுதலைவர்களிடம்கையேந்தாமல் தமிழர்களை தலை நிமிர்ந்து வாழ வைத்தார்.

ஆனால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் 45 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் வைத்திருக்கின்றவேளையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு சம்பந்தனை நியமித்திருக்கின்றார்கள்.

சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமித்தது எந்த சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக? என நான் அவர்களிடம் ஒரு கேள்வியை கேட்க விரும்புகின்றேன்.

தமிழர்களின் வாக்குகளையும், ஆணையையும் பெற்று 16 ஆசனங்களை வைத்து கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கொடுத்தது எதற்காக?

தமிழர்களுக்கு எது நடந்தாலும் சத்தம் போடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவா அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுக்கப்பட்டது? நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சொந்த சிறிய தந்தை.

2010ஆம் ஆண்டு முதலமைச்சராக சந்திரகாந்தன் இருந்த போது அவரிடம் வந்து உங்களுக்கு தேர்தலில் நூறு வீதம் ஆதரவு வழங்க தயாராக இருக்கின்றேன் எனக்கு ஒரு வாகனம் தாருங்கள் என கேட்டிருந்தார். பிள்ளையான் ஒரு வாகனம் கொடுக்கவில்லையென் பதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அரசியலுக்கு வந்தார். இன்று இரண்டு வாகனங்கள் ஓடிக் கொண்டுள்ளார். இது யார் [illegible] (இ-7)

## தபால்மூலமான முதலாம்கட்ட வாக்களிப்பு திங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் தபால்மூல வாக்களிப்பில் கலந்துகொள்ள உள்ளனர். 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் ஏனைய அரச நிறுவனங்கள்மற்றும்திணைக்களங்களில் இடம்பெறவுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் பணிகளுக்கான அதிகபடியான தபால்மூல வாக்காளர்கள் எண்ணிக்கை குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பிரதித் தலைவர் எச். எம். மொஹமட் தெரிவித்தார்.

இதன்படி குருநாகல் மாவட்டத்தில் தபால்மூல வாக்காளர்கள் தொகை 67 ஆயிரமாக பதிவாகியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக கண்டி மாவட்டத்தில் 48 ஆயிரம் பேரும், அநுராதபுர மாவட்டத்தில் 45 ஆயிரம் பேரும் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, இம்முறை தேர்தலில் 5 இலட்சத்து 60 ஆயிரத்து 20 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பிரதித் தலைவர் எச். எம். மொஹமட் தெரிவித்தார். (இ-7)


**வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை**

**Special Treatment for Rheumatism**

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த- ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கருத்தமர்வும் கலந்துரையாடலும் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றபோது...

## தமிழ்த் தலை...

நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டு வருகின்றோம். இடைக் காலவரைபுகள் ஒற்றையாட்சியினையே மையமாகக் கொண்டு வரையப்பட்டதால்தான் சர்வதேச நாடுகள் போதிய அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. இப்பொழுது இன்றைய பேச்சாளர்களின் பேச்சுக்களின் கருப் பொருட்களின் ஒன்றுக்கொன்றான தொடர்பானது உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

சர்வதேசச் சட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் நிலைமாற்ற நீதிமுறைகள் என்று எதிர்பார்க்கும் அதிகாரப் பரவலும் போர்க்குற்ற விசாரணையும் எமக்கு முக்கியமாகியுள்ளன.

இரண்டையும் தட்டிக்கழிக்கவே இலங்கை அரசாங்கம் முற்பட்டுள்ளது. அதிகாரப் பரவலில் நாம் எதிர்பார்க்கும் சுதந்திரம் எமக்கு மறுக்கப்பட விருக்கின்றது. மத்தியின் மையத்தினுள் மாகாணத்தை தொடர்ந்து வைத்திருக்கவே அரசாங்கம் மும்முரம் காட்டுகின்றது. ஆனால் எம்முட் சிலரோ அதற்கென்ன நாங்கள் கொழும்பில்தானே வசிக்கின்றோம், மத்திய அரசாங்கம் இங்கு தானே இருக்கின்றது. நாம் இங்கு சுதந்திரமாக எப்படியும் வலம் வரலாம்.

ஆனால் மக்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் எமது சுதந்திரம் பறி போய் விடும், எனவே அரசாங்கம் சாட்டையைத் தன்கைவசம் வைத்திருப்பதை நாம் வரவேற்கின்றோம் என்ற பாணியில் நடந்து வருகின்றார்கள். அவர்களின் நடவடிக்கை காலாகாலத்தில் வடகிழக்குத் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடும் என்பதை அவர்கள் உணர்கின்றார்கள் இல்லை.

ஒற்றையாட்சியால் எமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்கள் பறிபோகப போகின்றன. படைகள் தொடர்ந்து எம் மாகாணங்களில் நிலைநிறகப் போகின்றன. எம் காணிகளின் வருமானங்கள் அவர்கள் கைவசம் செல்லவிருக்கின்றன. மகாவலி சட்டத்தின் கீழ் மேலும் மேலும் வெளியிலிருந்து மக்களை எமது மாகாணத்தினுள் கொண்டு வந்து குடியேற்ற இருக்கின்றார்கள்.

சுற்றுலாவை தமக்குச் சாதகமாக வளர்த்துக் கொள்ளவிருக்கின்றார்கள். எம் மக்களின் தொகைக் குறைவினால் திணைக்களங்களில் தென்னவரை நிலைநிறுத்தி வருகின்றார்கள். இந்த நிலை தொடரும். முன்னேற்றம் என்ற போர்வையில் எமது காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இன்னும் பலதையுங் கூறலாம். சமஷ்டி அரசியலின் கீழ் சுயாட்சிச் சுதந்திரம் அதிகாரப் பரவலாக்கல் மூலம் எமக்குக் கிடைத்தால் இவற்றைத் தடுத்து நிறுத்தலாம். ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் அவை தடுக்கப்படமுடியாது.

ஐக்கியநாடுகள் முன்தாமே முன்வந்து செய்வதாக ஏற்றுக் கொண்டவற்றை, இன்று செய்யப் பின் நிற்கின்றது எம் நாட்டின் அரசாங்கம்.

அடுத்து போர்க்குற்ற விசாரணைகளையும் நிலைமாற்ற நீதி முறைமைகள் வலியுறுத்துகின்றன. அதைத் தட்டிக்கழிக்கப் பார்க்கின்றது எமது அரசாங்கம். போர்க்குற்றங்கள் எத்தகையன என்பது பற்றியெல்லாம் பேராசிரியர் சுவர்ண ராஜா அவர்கள் விளக்கப்படுத்தினார்.

போரை அநியாயமான முறையில் வேண்டுமென்றே நடத்துவது போர்க் குற்றம். அடுத்து மனித குலத்திற்கெதிரான செயல்களில் ஈடுபடுவது போர்க்குற்றம். மூன்றாவது வேண்டுமென்றே இன அழிப்பில் ஈடுபடுவது போர்க்குற்றம். மூன்றிலும் எமது அரச படைகள் ஈடுபட்டிருந்தன. அக்குற்றவாளிகளை இனங் காண எமது மத்திய அரசாங்கம் பின் நிற்கின்றது.

இனப்படுகொலை பற்றிய விளக்கமும் அண்மைக் காலங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பர்மாவில் றோகின்தியா கொலைகள், ஈராக்கில் யாசிடியரின் வன்புணர்வு நிகழ்ச்சிகள் இனப்படுகொலையின் அம்சமே என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-4,9)

## அரசியல்...

தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடல் கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடலும் கருத்தமர்வும் எனும் தொனிப் பொருளிலான கலந்துரையாடலொன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும் அங்கு அரச சொத்துக்கள் அல்லது அரச வளங்கள் பயன்படுத்துவதாக கூறி அங்கு நடத்த முடியாதென தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இக்கருத்தமர்வு கலந்துரையாடலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது அங்கு அரசியல் கலப்பற்றதாக நடைபெறுவதனை உறுதிப்படுத்த வேண்டும் என யாழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் நேற்று கடிதம் அனுப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-4,9)

# வீதி விபத்தில் படுகாயமடைந்த மாணவன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த மாணவன் ஒருவன் இரண்டரை மாதங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்

கோப்பாய் மத்தியை சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் சிவானந்தன் மதுசன் (வயது-18) என்ற மாணவனே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம 2ஆம் திகதி கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்துள்ளார். கொழும்பில் உள்ள ஒரு இடத்தில் உணவு அருந்துவதற்காக வாகனத்தை நிறுத்தியுள்ளனர். உணவு அருந்திவிட்டு வாகனத்தில் ஏறுவதற்காக குறித்த மாணவன் வீதியை கடந்துள்ளார்.

அப்போது கொழும்பில் இருந்து யாழ் நோக்கி சென்ற வாகனம் இவரை மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை குறித்த மாண வன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்

இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# யாழில் கடந்த மூன்று நாட்களில் நான்கு குடும்பஸ்தர்கள் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த மூன்று நாட்களில் நான்கு குடும்பஸ்தர்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து தாய்நாட்டை சுற்றிப்பார்க்க வந்த குடும்பஸ்தர் ஒருவர் கொக்குவில் பகுதியில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியை சேர்ந்த ராசையா மகாதேவா (வயது-83) என்பவரே மேற்படி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கனடா நாட்டில் இருந்து தாய் நாட்டுக்கு வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு படுக்கைக்கு சென்றுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த நபரை மனைவி எழுப்ப சென்றபோது, பேச்சு மூச்சின்றி கிடந்துள்ளார்.

உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் இன்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

கடந்த 3 நாட்களில் இதேபோன்று நான்கு நபர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

யாழ் மக்களுக்காக HONDA வழங்கும்
மாபெரும் சலுகை
HONDA
விலைக்கழிவு
ரூபாய்
20,000/=
வரை

அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிளுக்கும்
புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்
குறைந்த ஆவணங்களுடன் லீசிங் விசேட விலைக்கழிவுகள் உடன்


FREE
- SLS தலைக்கவசம்
- யக்கெட்
- காப்புறுதி
- பதிவுக்கட்டணம்
- இலவச சேவைகள் ஐந்து
- இரண்டு வருட உத்தரவாதம்
(நிபந்தனைக்குட்பட்டது)
(C-1249)
மாற்றீட்டுக்கான உடன் காசுக்குரிய விசேட சலுகைகள் பலவும்
பழைய ஒன்றுக்கு புதிய ஒன்று
தை 17,18,19 ஆம் திகதிகளில்
மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் அருகாமை காலை 9 முதல் மாலை 6 மணி வரை

R.R.S.C மோட்டோர்ஸ், மானிப்பாய்.
077 310 7549, 076 833 9898, 021 492 7627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு விரைவில்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் சகல மக்களும் எதிர்பார்க்கும் தீர்வுகள் அனைத்தையும் புதிய அரசியல் அமைப்பின் மூலமாக பெற்றுக் கொடுக்கவே நான் முயற்சித்து வருகின்றேன். சகல அரசியல்கட்சிகளின் ஒத்துழைப்புடன் இந்த செயற்பாட்டை வெற்றிகொள்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு விரைவில் பெற்றுத் தரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் இடம் பெற்றது. இதில் உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தைப் பொங்கல் நிகழ்வை தமிழ் மக்களின் முக்கியமான நிகழ்வாக கருதுவதாக முதலில் உரையாற்றிய சிலர் கூறினர். எனினும் தைப்பொங்கல் நிகழ்வு ஒரு தேசிய விழாவாக நான் கருதுகின்றேன். தமிழ் மக்களின் இந்த கலாசாரம் நூற்றாண்டு காலமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மன்னர்ஆட்சியின்போதும் அதன் பின்னரும் தமிழர் கலாசாரம் பாதுகாக்கப்பட்டு இன்று எமக்காக வழங்கப் பட்டு வருகின்றது.

அதேபோல் சிங்கள, தமிழ் மக்களின் மத்தியில் கூட சில ஒற்றுமையான தொடர்புகள் காணப்படுகின்றன. ஆகவே அதனை முன்னெடுத்து செல்ல வேண்டும். மேலும் இந்த நாட்டில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். எனினும் கடந்த மூன்று தசாப்த யுத்தத்தில் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர். எமது நாட்டில் காணப் பட்ட யுத்தத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகவும் பாரிய அழிவுகளை சந்தித்தன. இன்று அவற்றை மீள கட்டியெழுப்பி மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதேபோல் மலையக தமிழ் மக்களின் உரிமைகளையும்நாம்பேணி வருகின்றோம்.

மேலும் இலங்கையில் காணப்படும் அனைத்து சமயங்களும் சமமாக பேணப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதியும் நானும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். மேலும் சம்பந்தன் கருத்துரைக்கும் போது சில விடயங்களை கூறினார். அவற்றை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மேலும்நாம் தீர்வுகள் வழங்கும் நகர்வுகளை ஆரம்பித்து முன்னெடுத்து சென்றுகொண்டுள்ளோம். அரசியல்அமைப்பு விவகாரத்தில் நாம் ஆரம்பித்த சில விடயங்கள் பூரணப் படுத்தப்பட வேண்டும். அரசியல் அமைப்பின் மூலமாக சகல மக்களுக்கும் தீர்வுகளை பெற்றுத்தரும் முயற்சிகளை நான் முன்னெடுத்து வருகின்றோம். அவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். அரசியல் அமைப்பு குறித்து ஆராயும் குழுக்கள் நியமித்து அதன் மூலமாக அறிக்கை தயாரிக்கப்பட்டு இன்று அதனூடாக கட்சிகளின் எண்ணங்களை பெற்று ஒருதீர்வை பெற்றுத்தர பாடுபட்டு வருகின்றேன். அவற்றில் வெற்றி கிடைக்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனநாயக ரீதியாக செயற்படும் முதல் சந்தர்ப்பம் என நான் கருதுகிறேன்.

மத கலாசாரங்களை பாதுகாத்து நாட்டினை மீளக்கட்டியெழுப்பும் பொறுப்பு எமக்கு உள்ளது. வடக்கு, கிழக்கு பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் மக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வந்தனர். ஆகவே அவற்றை கட்டியெழுப்ப வேண்டும். அதே போல் அரசியல் தீர்வும் விரைவில் பெற்றுத்தரப்படும்.

அரசியல் தீர்வு என்பது சகல விடயங்களிலும் இணைந்து செல்லக்கூடியது. கலாசாரம், மதம், இனம் அனைத்தும் இணைந்து செல்லக் கூடியவையாகும்.

ஆகவே அவற்றை கருத்திற் கொண்டும் வடக்கு, கிழக்கின் பொருளாதாரத்தை இலக்கு வைத் தும் கல்வி, சுகாதாரத்தை இலக்கு வைத்தும் நல்லிணக்க தீர்வுகளை பெற்றுத்தரும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் நான் அரசியல் தீர்வை பெற்றுத் தருவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விசேட தேவையுடையவர் வேறொருவரின் ஒத்துழைப்புடன் வாக்களிக்க முடியும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில்வாக்களிக்க விசேட தேவையுடையோர், மாற்றுத் திறனாளிகள் வேறொருவரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விசேட தேவையுடையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியாளராக இருப்போர் 18 வயதை பூர்த்தி செய்தவராக இருப்பதுடன் அவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக இருக்கக்கூடாதென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த நபர் அரசியல் கட்சியின் அங்கீகாரம் பெற்ற முகவராகவோ, வாக்குச் சாவடிக்கான பிரதிநிதியாகவோ இருக்கவும்கூடாது. இந்நிலையில், உதவியாளரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு மாற்றுத்திறனாளியோ, விசேட தேவையுடையவரோ உரிய காரணங்களை சமர்ப்பிப்பது அவசியம்.

மேலும், இதற்கான விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப்பகுதி கிராம உத்தியோகத்தர்களிடமிருந்தும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்தும் இது தொடர்பான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ-7)

## இராசி பலன்

17.01.2018
தை 04, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 06.33 மணிக்கு
அமாவாசை காலை 8.26 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 10.49 மணிவரை
சுபநேரம் 05.05-6.35 மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை
அமிர்தசித்தம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | ராகு |
| கேது சூரி சுக், சந் | சந்திராஷ்டமம் திருவாதிரை, புனர்பூசம் | | |
| சனி, புத | | குரு, செவ் | |

வளவன்

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், இனிமையான நாள் உற்சாகமான நாள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், இனத்தார் பகை மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடன்பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், ரோக பயமுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி நீடிக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை

## யாழ்.கடற்றொழில் கூட்டுறவு சம்மேளனம் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சி அரசு நீடிக்கும்என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் தவச் செல்வம், ஆட்சியாளர்கள் தமது அரசியலை தக்கவைக்கவும் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காகவுமே செயற்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு ச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில், நல்லாட்சி என்று அழைக்கப்படும் இந்த அரசு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தெரியவில்லை. அரசின் வர்த்தமானியில் இழுவைப்படகுகளை தடைசெய்வதாக தெரிவித்திருந்த போதிலும் அது இதுவரை நடைமுறை ப்படுத்தப்படவில்லை. அதாவது சட்டமூலம்கொண்டுவந்து 6 மாதங்கள் கடந்த் நிலையிலும் இன்னும் அந்த சட்டமூலம் நடைமுறைக்கு வரவில்லை. அதை நடைமுறைப்படுத்த அரசு பின்னடித்து வருகிறது.

வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் அரசு பேச்சளவில் மாத்திரம் தெரிவிக்கிறதே தவிர நடைமுறையில்எதையும் சாதித்ததாக தெரியவில்லை. வடக்கு மக்கள் பல துன்பங்களை சந்தித்த போதும் மாற்று நடவடிக்கை ஏற்படுத்தி கொடுப்பதாக தெரியவில்லை. ஆழ்கடல் மீன்பிடி தொடர்பாக அரசு பேச்சளவில் கருத்து தெரிவிக்கிறதே தவிர வடபகுதியில் நடைமுறைப்படுத்த தவறி வருகிறது.

தென்பகுதியில் இந்த மீன்பிடியை ஊக்குவிக்கும் அரசு வடபகுதியில் ஊக்குவிக்க பின்னிப்பது வேதனை அளிக்கும் விடயமாக உள்ளது.

பேச்சளவில்தான் அதிகாரிகளும் அமைச்சர்களும் வடக்குக்கு வந்து செல்கி றார்கள்.

ஆனால் வடக்கின் அபிவிருத்தி மேற்கொள்வது என்பது சிறிதும் நிறைவாக நடைபெற்றதாக தெரியவில்லை. 30 ஆயிரம் மீன்பிடி குடும்பங்களுக்குரிய அபிவிருத்தியில் கரிசணையுடன் செயற்படுவதாக தெரியவில்லை.

தாம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என தெரிவித்த அரசு நல்லிணக்கத்துக்கு மாறான செயற்பாடுகளை தான் செய்கிறது. தனது சுய அரசியலுக்கான மக்களை நம்ப வைத்து ஏமாற்றுகிறது.

கடற்தொழிலாளர் அமைப்புக்களை பலப்படுத்துவதை விடுத்து அவற்றை உடைக்கும் செயற்பாடுகளையே அரசு மேற்கொண்டு வருகிறது.

விடுதலைப்புலிகள் காலத்தில் கூட்டுறவுத்துறை மேலோங்கி இருந்தது. ஆனால் இன்று இந்த அரசு கூட்டுறவு துறையை முழுமையாக உடைத்து நசுக்குகிறது. ஒட்டுமொத்தமாக தமிழர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற சிந்தனை சிங்கள அரசியல்வாதிகளிடம் மேலோங்கி இருப்பதை காண்கிறோம். அவர்கள் வடக்குக்கு சுற்றுலா பாணியில் வந்து செல்கிறார்களே தவிர மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியில் கரிசனை இல்லை.

நல்லாட்சி அரசு நீடிக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள்தமது அரசியல் செயற்பாட்டுக்காகவும் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்கும் வடக்கில் அபிவிருத்தி நடப்பதான மாயை ஏற்படுத்தும் அரசு தனது ஆட்சிக்காலம் முடியும் வரை இவ்வாறு இழுத்தடிப்பு செய்கிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மீனவ சமூக மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான எந்தவொரு நகர்வும் வடக்கில்இடம்பெறவில்லை. இது எமக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலை இலக்குவைத்து இழுவைமடித் தடைச்சட்டம் கிடப்பில் போடப்பட்டதா?

(யாழ்ப்பாணம்)

இழுவை வலை மீன்பிடி முறையைத் தடைசெய்வது தொடர்பாக இணக்கப்பாட்டு அரசியல் எனக்கூறி பிழைப்பு நடத்திவரும் வட பகுதி தமிழ்த் தேசிய கூட்டாளிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் தடல் - புடலாக ஓடித் திரிந்து கடைசியில் கடந்த வருடம் நடுப் பகுதியில் பாராளுமன்றத்தில் இம் மீன்பிடி முறையைத் தடைசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அந்த மீன்பிடி முறைக்கான தடையும் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. எல்லோரும் அதனை வரவேற்றிருந்தனர். இப்போது பல மாதங்கள் கடந்து விட்டன. ஆயினும் அது நடைமுறைக்கு இன்னும் வந்ததாகத் தெரியவில்லை. அதனை அமுல்படுத்துவதற்கான முனைப்புக்களை எடுத்திருப்பதாகவும்தெரிய வில்லை. அதற்கான காரணம் இதுவரையில் மர்மமானதாகவே உள்ளது. இந்தியாவின் அனுமதி பெற்றே சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் அன்று செய்திகள் வெளியாகியிருந்தன. ஒரு வேளை சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அனுமதி பெறப்பட வேண்டுமோ? என எண்ணத் தோன்றுகிறது.

மாகாண சபையிலே இந்த மீன்பிடிமுறைக்கு ஆதரவாக பக்கப்பாட்டுப் பாடுபவர்களுக்கும் குறைவில்லை. அத்துடன் மாகாண சபையினருக்கு கடலில் எந்தவித அதிகாரமும் கிடையாது எனவும் கையை விரிக்கின்றனர்.

தொடர்ந்தும் இந்திய மற்றும் உள்ளூர் மீனவர்களால் இழுவை மடிமூலம் வடபகுதி கடல்வளம் தாராளமாக சூறையாடப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. சிற்றளவு மீன்பிடியாளர்களோ தொடர்ந்தும் மோசமாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். பாதிப்புறும் மீனவர்களைப் பற்றியோ அல்லது கடல்வளச் சூறையாடலின் தாற்பரியம் பற்றியோ கூட்டாளி கட்சிக் காரர்களுக்கு எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்குரிய கவலைகள் எல்லாம் இப்போது தமிழ் மக்களின் வாக்குகளை எவ்வாறு சூறையாடுவது? பதவிகளை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்பதுதான். இதற்கிடையில் உள்ளூர் தேர்தலும் வந்தாயிற்று. இந்த தேர்தல் முடியும் வரை நிச்சயமாக இந்த தடைச்சட்டம் அமுலுக்கு வராது போலவே தெரிகிறது.

அவ்வாறு சட்டம் அமுல் படுத்தப்படுமானால் சம்மாட்டிமார்களிடம் அகப்பட்டுள்ள வாக்குகள் உரியவர்களுக்கு கிடைக்காமலும் போகலாம். அது சில வேளைகளில் மாநகர சபை முதல்வர் பதவிக்கே ஆப்பு வைக்கப்படவும் வழி வகுக்கலாம்.

ஆகவே தடைச் சட்டம் இப்போதைக்கு அமுலுக்கு வரச் சாத்தியமில்லை எனத் துணியலாம்.

கடல்வளச் சூறையாடலோடு போதைவஸ்துக் கடத்தல்களுக்கும் பஞ்சமில்லை. தடைச்சட்டம் அமுலுக்கு வரும்வரை கடத்தல்காரர்களுக்கும் கொண்டாட்டம் தான்.

தடை அமுலுக்கு வராமல் கடல்வளச் சூறையாடலையும் போதைவஸ்துக் கடத்தலையும் முடிவுக்கு கொண்டு வருவதென்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை போலும்.

சூசை ஆனந்தன்
பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# கொலையாளிகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதியின் வாள்வீச்சு விந்தை

## அமைச்சர் அனந்தி விசனம்




தமிழினப் படுகொலை நடத்தியவர்களை பாதுகாக்கும் ஜனாதிபதி ஊழல் மோசடிகளுக்கு எதிராக வாளைச் சுழற்றுவதானது உண்மையில் விந்தையாக உள்ளது என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யார் தவறு செய்தாலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அனைவருக்கும் கட்சி பேதமின்றி உச்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளது குறித்து அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்தி, முன்னேற்றங்களை பெரிதும் பாதிக்கும் விடயமான ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. இலங்கையைப் பொறுத்தவரை அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றின் பெருந்தடையாக நாட்டில் நீடித்துவந்த யுத்தமே காரணமாகும்.

தமிழர்களை அழித்தொழித்து அடிமைப்படுத்தி சிங்கள பௌத்த மேலாதிக்கம் மிக்க நாடாக இலங்கையை உருவாக்கும் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தமே, நாட்டையும் நாட்டு மக்களையும் பேரழிவுகளுக்கு இட்டுச்சென்ற கொடிய யுத்தத்தின் தோற்றுவாயாகும்.

இந்நிலையில், இலங்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றத்திற்கு உரிய நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்புக் கூறலை முற்றுமுழுதாக மறுத்து வரும் ஜனாதிபதி ஊழல் விடயத்தை முன்னிலைப் படுத்துவதானது உண்மையில் விந்தையாக இருப்பதுடன் இனப்படுகொலைக் குற்றவாளிகளை பாதுகாப்பதுடன் அவற்றை மூடிமறைக்கும் தந்திரமாகவும் அமைந்துள்ளது.

ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் மறு கண்ணில் வெண்ணெயையும் வைக்கும் விதத்தில் தமிழர்கள் விடயத்தை அணுகிய முன்னைய ஆட்சியாளர்களின் வழியேதான் மைத்திரிபால சிறிசேனவும் பயணித்து வருவதனை அவரது செயற்பாடுகள் உணர்த்தி வருகின்றன.

மின்சாரக் கதிரை பற்றிய அச்சம், சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைப் பொறிமுறை மற்றும் சர்வதேச நீதிபதிகளை நாட்டிற்குள் வரவழைத்தல் போன்ற விடயங்கள் நல்லாட்சி காலத்தில் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக பகிரங்கமாக கூறிவருவதன் மூலம் தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட தலைவர்களையும் இராணுவத்தினரையும் காப்பாற்றுவதில் உறுதியாக இருப்பதனை மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தனது வாள் வீச்சுக்கு தப்பமுடியாது என்று முழங்கும் மைத்திரிபால சிறிசேன தமிழினப் படுகொலையாளிகள் மீதும் அதே வேகத்தை காட்ட வேண்டும். கட்சி, பதவி, அந்தஸ்து என்பவற்றை பொருட்படுத்தாது இன்ப்படுகொலையாளிகள் மீதும் உடனடியான நடவடிக்கையினை எடுப்பதன் மூலமே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அதுவே இலங்கைத் தீவில் நீடித்து நிலைத்து நிற்கும் சமாதானத்திற்கான ஒரே தீர்வாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யா/ வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் தரம்-06 மாணவர்களை வ்ரவேற்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் திரு மதி வே.சண்முகட்ரணம் தலைமையில் பாடசாலை யின் தம்பையா மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி. ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். (இ-7)






நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மெழுகுவர்த்தி சின்னத்தில் போட்டி யிடவுள்ள தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நேற்று யாழ். வை. எம்.சி.ஏ.மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. (படங்கள் : உ_சாளின்)





தென்மராட்சியின் புகழ்பூத்த சிற்பக் கலைஞர் மட்டுவில் கி.கலாமோகனின் மணிவிழா அண்மையில் சாவகச்சேரி கம்பன் கல்லூரி தமிழ்க்கோட்ட அரங்கில் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இவ் விழாவில் சிற்பமும் கலாமோகனும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் ச.லலீசன் சிறப்புரை ஆற்றினார். நிகழ் வில் விழா நாயகர் தொடர்பான ஆவணப் படம் ஒன்று வெளியிடப்பட்டது. இதனை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் வெளியிட்டு வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் வரும்போது களமிறக்குவோம்

## கெஹலிய அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அறிவிக்கப்படவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு கூட்டு எதிரணி தயாராகவே இருக்கின்றது. வெற்றிபெறும் ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் மட்டுமேயாகும் என்று உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே கூட்டு எதிரணியின் முக்கியஸ்தர் ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுக்கப்படவேண்டும்.

அதன்படி நாங்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகிவிட்டோம். அதாவது வெற்றிபெறக் கூடிய ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். குறிப்பாக சிங்கள மற்றும் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய வேட்பாளரை களமிறக்குவோம்.

நாங்கள் ஏற்கனவே ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானித்துவிட்டோம். அவரை நேரம் வரும்போது களமிறக்குவோம். அதாவது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளரை நாங்கள் களமிறக்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேராசிரியர் புஷ்பரட்ணம் எழுதிய இரண்டு நூல்கள் நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் எழுதிய "இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு" மற்றும் "ஈழத்தமிழர் மரபுரிமை அடையாளங்கள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தொல்லியல் ஆய்வு வட்டத்தலைவர் கந்தசாமி கிரிகரன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் மூலம் ஈழத்தமிழர் வரலாறு, பண்பாடு, தமிழர் மரபுரிமை தொடர்பான விடயங்களை முதன்மைப்படுத்தி தமிழரின் இருப்பு பற்றிய விடயங்களை அறிவியல் சார்ந்தும், தொல்லியல் ஆய்வுகள் முன்வைத்த முடிவுகள் சார்ந்தும் "இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு" என்ற நூலையும், இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து ஈழத் தமிழரின் மரபுரிமைகள் மறைந்து போகின்றன. அவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற ஆதங்கம், கோரிக்கைகளின் அடிப்படையில் மரபுரிமைச் சின்னாங்களை எவ்வாறு கண்டறிந்து ஆவணப்படுத்துவது என்பது தொடர்பாக "ஈழத் தமிழர் மரபுரிமை அடையாளங்கள்" என்ற நூலும் எழுதப்பட்டுள்ளது. (இ-9)




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய

## 2017 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தர சாதனையாளர்கள்

### விஞ்ஞானப்பிரிவு



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Jeyaratnam Kajeepan** | **Jeyasegaram Sathiyatharanya** | **Arutchelvan Kapilan** | **Ambalavanar Thanujan** | **Purusothman Puruhasiny** | **Rajhmohan Susmitha** | **Sivapalan Gowthaman** | **Nagulakumar Samanthy** |
| Bio 3A | Bio 3A | Bio A2B | Bio 2AB | Bio A2B | Bio 2AC | Bio A2B | Bio A2B |
| Rank 1(59) | Rank 3 (305) | Rank 5 | Rank 6 | Rank 7 | Rank 8 | Rank 9 | Rank 10 |
| Medicine | Medicine | Medicine | Medicine | Medicine | Medicine | Medicine | Dental |

### கணிதப்பிரிவு / வர்த்தகப் பிரிவு / கலைப்பிரிவு



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Pathmanathan Thenukan** | **Baskaran Sarathkumar** | **Jeyapalan Poovallal** | **Mageswaran Linusan** | **Sivalingam Jeyapperagas** | **Thavaravi Deniskumar** | **Doras Annfustina** | **Siluvairasha Melki** |
| Maths 3A | Maths 3A | Maths A2B | Maths A2B | Maths A2B | Commerce 3A | Commerce 3A | Art 3A |
| Rank 1(98) | Rank 2(136) | Rank 5 | Rank 7 | Rank 9 | Rank 3 | Rank 14 | Rank 6 |
| Engineering | Engineering | Engineering | Engineering | Engineering | | | |

**Bio:** T.Vinusiya 3B, S.Kirushanthi A2B, P.Inthusha 3B, S.Anusiya ABC, S.Hirosan B2C, K.Pavithira A2C, K.Tharmila B2C, T.Jeevitha B2C, V.Thilaxana B2C, N.Yathanky B2C, N.Akalya 3C, T.Vithuya 2CS, K.Kiruththika 2CS, K.Thursika 2CS, J.priyanthan 3C, M.Narmiya 2CS, Y.Keerthika 2CS, L.Kiyuripowstina 3S, S.Umathey 3S,U.Januya 3S, A.KoKulraj 3S, N.Nagaruby 3S, N.Sagana 3S.

**Maths:** B.Kasthuri ABC, T.Dilakshan A2B, P.Thajalan A2C, S.Ragory ABC, S.Pranavy ABC, N.Mithusiya ACS, V.Thajan B2C, V.Sinthujan 2CS, P.ayilavan 3C, S.Babilaksan 2CS, V.Suvethiga C2S,S.Keerththana 3C, T.Dilakshakan-B2S,

**Commerce:** A.Jinthusan 2AC, R.Arivanban A2B, M.Tharsika ABC, K.Thadshajiny 3B, P.Sujeeba 3C, S.Lojithan 2BC, R.babishan B2C, R.Rajavi 2BS, V.Dayani 3C, A.Thevakajan BCS, M.Dinojitha 3C, S.Kalaimathy 2CS.


**Arts:** A.Kirusanthiny 3B, N.Ketharany 2BC, R.Thugaska 2BC, R.Kajenthiny A2C, S.Lajiny 3B, A.Nalina ABC, K.Punitha B2C, R.Tharmini A2C

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.**

(C-1241)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்கக்கடலில் வீரகாவியமான
# தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரமறவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் புதுக்குடியிருப்பில்



(பனிக்கன்குளம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து வீர மறவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கைவேலியிலுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் அலுவலகத்தில் நினைவுகூரப்பட்டது.

வங்கக் கடலில் வீரகாவியமான தளபதி கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மகளிர் பிரிவைச் சேர்ந்த ராதா தலைமையில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது.

நினைவேந்தல் நிகழ்வில் தளபதி கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர் மாலைகள் அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் நினைவுரைகளை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் புதுக்குடியிருப்பு பகுதி வேட்பாளர் ஜனமேனத் ஆகியோர் கருத்துக்களை நிகழ்த்தியுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தியுள்ளார்கள். (2-281)

## உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை முன்னிட்டு
# சட்டங்கள், விதிமுறைகள் தொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சியில் இன்று
## மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய 3 பிரதேச சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுயேட்சை கட்சிகள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருடனான தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் விதிமுறைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்கள தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 9, அரசியல் கட்சிகளும், அங்கீகரிக்கப்பட்ட 3 சுயேட்சை கட்சிகளும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இந்தக் கலந்துரையாடலின் போது, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களில் இருந்தும் தலா ஒவ்வொரு கட்சிகளிலும் இருந்தும் பெண் வேட்பாளர் ஒருவர் உட்பட இருவர் கலந்து கொள்வதுடன், கட்சிகள் சார்பில் தலா இரண்டு பேரும் கலந்து கொள்கின்றனர்.

அத்துடன், அங்கீகாரம் பெற்ற முகவர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-15)




# இரணைதீவு காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்யப்பட்ட இறுதியறிக்கை கிடைக்கவில்லை
## பூநகரி பிரதேச செயலகத் தகவல்படி



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவு மக்களின் காணிகள் விடுவிப்பது தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றங்களும் இடம்பெறவில்லையென போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைதீவு பகுதியை விடுவித்து அங்கு குடியேறி தொழில் செய்வதற்குரிய அனுமதியைப்பெற்றுத் தருமாறு கோரி கடந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் இரணைதீவு மக்கள் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஒன்பது மாதங்களாக இந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றபோதும், தங்களது நிலங்கள் விடுவிக்கப்படுவதாக பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் இதுவரை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தொழில் வாய்ப்புக்களின்றி தாங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் மேற்படி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு காணிகளை விடுவிப்பது தொடர்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து காணிகளை அடையாளப்படுத்துகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் அவற்றை விரைவாக விடுவிப்பது தொடர்பில் எந்தவித முன்னேற்றங்களும் இருப்பதாக இலலையென போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச செயலகத்திடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த காணிகளை அடையாளப்படுத்தி நில அளவைத் திணைக்கள அதிகாரிகளினால் அளவீடு செய்யப்பட்ட இறுதியறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவ்வறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னரே குறித்த பிரதேசத்தை விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் விடுவிப்பது தொடர்பான கோரிக்கையை முன்வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-315)

# கோமாதா பொங்கல்

இந்து மக்களினால் உழவர் திருநாளான தைத் திருநாளுக்கு அடுத்து வரும் நாளில் கால்நடை உரிமையாளர்களினால் தங்கள் பட்டிகளிலுள்ள மாடுகளுக்கு பொங்கி நன்றி செலுத்தும் முகமாக இக்கோமாதா பூசை இடம்பெற்று வருகின்றது.

நெடுங்கேணி ஒலுமடு கிராமத்தில் நேற்று முன்தினம் காலை கால்நடை உரிமையாளர்கள் தங்கள் மாடுகளுக்கு கோமாதா பூசை செய்தனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சகல பட்டிகளிலும் கோமாதா பூசை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வவு. ஸ்ரீகந்தசுவாமி கோவில் மஹோற்சவம்

(வவுனியா)

அருள்மிகு வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறுவதுடன் காலை, மாலை பூசைகளை அடுத்து எம்பெருமான் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 9 மணிக்கு நடைபெறும். (2)

# மஞ்சு விரட்டு விளையாட்டு மீண்டும் நேற்று கிளிநொச்சியில் களைகட்டியது



(பரந்தன்)

இவ்வருடம் மீண்டும் மஞ்சள் விரட்டு விளையாட்டு நிகழ்வு கிளிநொச்சி பெரிய பரந்தன் பிரதேச இளைஞர்களால் நடத்தப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போன்று மஞ்சு விரட்டு பாரம்பாரிய விளையாட்டாக இடம்பெற்று வந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலும் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பல கிராமங்களில் மஞ்சு விரட்டு விளையாட்டு இடம் பெற்று வந்தது.

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் உழவர் திருநாளான பொங்கல் தினத்தை முன்னிட்டு இடம்பெறுகின்ற மஞ்சு விரட்டு விளையாட்டு இடம்பெறாது இருந்த நிலையில் இவ் வருடம் மீண்டும் மஞ்சு விரட்டும் நிகழ்வு கிளிநொச்சி பெரிய பரந்தன் பிரதேச இளைஞர்களால் நடத்தப்பட்டுள்ளது.

தாங்கள் வளர்க்கும் மாடுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒன்றின் கழுத்தில் துணி ஒன்றில் பணம் அல்லது பிடிக்கப்படும் மாட்டின் உரிமையாளரால் தனது மாட்டை பிடித்து கழுத்தில் கட்டப்பட்ட துணியை கழற்றினால் இவ்வளவு தொகை பரிசு என அறிவிக்கப்பட்டு மாடுகள் வெடிகொளுத்தி விரட்டப்படும், விரட்டப்படும் மாடுகளை இளைஞர்கள் மடக்கிப் பிடிக்க வேண்டும். இதுவே மஞ்சு விரட்டு விளையாட்டாக ஆண்டுதோறும் இருந்து வருகிறது. குறித்த இந்த விளையாட்டு நேற்று கிளிநொச்சி யில் இடம்பெற்றது. இதில் பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் நிலவுகின்ற வரட்சியால்

# 1,433 ஏக்கர் நெற்செய்கை அழிவு

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக ஆயிரத்து 433 ஏக்கர் நெற்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

தொடர்ந்து நிலவுகின்ற வரட்சி காரணமாக வடக்கு மாகாணத்தின் விவசாயச் செய்கை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர்ச்செய்கைகள் கடந்த இரு ஆண்டுகளில் நிலவிய கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

2017, 2018ஆம் ஆண்டுகளில் காலபோக செய்கையில் பல்வேறு இடங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையின் பாதிப்புக்கள் தொடர்பில் விவசாய போதனாசிரியர் பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆயிரத்து 433 ஏக்கர் நெற்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதாகவும் 170 ஏக்கர் வரையான நெற்செய்கை 75 வீதமான பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன், 182 ஏக்கர் நெற்செய்கை 50 வீதமான பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் 93 ஏக்கர் நெற்செய்கை 25 வீதமானவை பாதிப்புக்களுக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)

## அழகுத் தாவரங்களின் உற்பத்தியை ஊக்குவிக்க பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கி வைப்பு

(முல்லைத்தீவு)

2016 ஆம்ஆண்டுமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் அழகுத்தாவரங்களின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒரு பயனாளிக்கு 25000/= வீதம் எட்டு பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2015 ஆம் ஆண்டும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 02 பயனாளிகளுக்கு இத்திட்டத்தில் வலை இல்லங்கள் அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கைவேலி கிராமத்தில் வன்னி மலர் சோலை வெற்றிகரமாக இயங்கி வருகின்றது.

மேலும் ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் நிலோஜன் பூங்கா விஸ்தரிக்கப்பட்டு நாளைய தினம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. மேலும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

மேலும் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாக பேராதனை தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் அனுசரணையில் "சுவகஸ் மல்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுவகஸ் முல்லைமலர் அழகுத் தாவர உற்பத்தியாளர் சங்கமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார். (2)




# பூநகரி கல்விக்கோட்டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளைத் திறப்பதற்கு தாமதம் ஏற்படும்

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகக்காணப்படுகின்றமையால் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை திறப்பதை காலதாமதப்படுத்தியிருப்பதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கல்விக்கோட்டத்திற்குட்பட்ட கௌதாரிமுனை வித்தியாலயம், பல்லவராயன் கட்டு அ.த.க பாடசாலை, அத்தாய் முத்துத்தம்பி வித்தியாலயம், தம்பிராய் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் பல்லவராயன்கட்டுப் பாடசாலையை மீள இயங்க வைப்பதற்கு கடந்த ஆண்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்வாண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட போது இப்பாடசாலை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

கிளிநொச்சி கல்வி வலயத்தில் மூடப்பட்ட பாடசாலைகளை மீளத்திறப்பதற்கு வலயக்கல்வித் திணைக்களம் முயற்சி எடுத்து வருகின்றது.

இந்நிலையில் பல்லவராயன்கட்டுப் பாடசாலையை மீள ஆரம்பிப்பதாக தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த போது இதனையண்டிய அயற் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்படுவதுடன், இவ்வாண்டில் தரம் ஒன்றில் இணைத்துக்கொள்ளப்பட்ட சிறார்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர்.

இப்பாடசாலையை ஆரம்பிக்கும் போது அயற்பாடசாலைகளும் பாதிக்கப்படும். இப்பாடசாலையை மீள இயக்குவதில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் இப்பிரதேசத்தில் சனத்தொகை மிகக்குறைவாக காணப்படுவதனால் இப்பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகைகளை தாமதப்படுத்தியிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# 98ஆவது வருட பூர்த்தி இரணைமடுவில் பொங்கல்



(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடு குளம் உருவாக்கப்பட்டு நீர்பாசனத்திற்கு திறந்து விடப்பட்டு 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பொங்கல் நிகழ்வொன்று இடம்பெற்றது.

இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் இரணைமடு விவசாய சம்மேளன விவசாயிகள் பொங்கலிட்டு கொண்டாடினர்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம், மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# கோவனக்குளக்காட்டுப் பகுதியில்

# மக்கள் மீள்குடியேறாத காணிகளில் பனை, மா மரங்கள் வெட்டி கடத்தல்

## பாதிக்கப்பட்ட மக்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட முகமாலையின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள கோவனக் குளக் காட்டுப் பகுதியில் சட்ட விரோத பனை, மா ஆகிய பயன்தரும் மரங்களை வெட்டி கடத்தி வருவதுடன், மணல் கடத்தலும் நடைபெற்று வருவதாகவும் இதனை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என முகமாலையில் மீள் குடியேற்றியுள்ள மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முகமாலையின் தெற்குப் பகுதியில் அண்மையில் வெடிபொருட்களை அகற்றிய நிலையில் மக்களிடம் கையளிக்கப பட்ட கோவனக் குளப் பகுதியில் மக்கள் இன்னமும் மீள் குடியேறாத காணிகளில் உள்ள 150, இற்கு மேற்பட்ட பனை மரங்களையும், மா ஆகிய மரங்களை வெட்டி கடத்தப்படுகின்ளதுடன், தொடர்ச்சியாக இந்த மரக் கடத்தல் நடைபெற்று வருகின்றது.

அத்துடன், பெருமளவான காணிகளில் உள்ள மணல் மண் கடத்திச் செல்லப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளனர். (2-15)

# இரண்டு வருடகால வரட்சியால் உபவுணவு பயிர்ச் செய்கை பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள உபவுணவுப் பயிர்ச்செய்கையானது கடந்த இரு வருடங்கள் மிக குறைவாகவே நடைபெற்றுள்ளது.

வருடாவருடம் பெரும்போகத்தின் போது 3 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை நடைபெறுவது வழமையாகும்.

இந்நிலையில் கடந்த இரு ஆண்டுகளில் நிலவிய வரட்சி காரணமாககடந்தாண்டு குறைந்தளவிலேயே பயிர்ச்செய்கை செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்கிளிநொச்சிமாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்ற விவசாயமக்களின் 60 வீதமானோர் விவசாயத் தொழிலை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர்.

கடந்த இரு வருடங்களில் ஏற்பட்ட வரட்சி ,காரணமாக இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)



கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோருடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு இருந்த போது...

(படம்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் விவாதத்திற்கு நான் தயார்

## பிரதியமைச்சர் அமீர்அலி தெரிவிப்பு



(ஏறாவூர்)

அமைச்சர் ரவூப் ஹக்கீம் எமது சமூகத்தை அடகு வைத்து, எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியுமோ சம்பாதித்தார், இவற்றையெல்லாம் தைரியமாக ஏன் செய்தார் என்று கட்சியில் யாரும் கேட்டால் அவர்களை துரோகிகளாக வெளியேற்றி விடுவார் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

வாழைச்சேனை - கோறளைப்பற்று பிரதேச சபைக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் யானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிறைந்துறைச்சேனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

17 வருடங்களாக எமது கல்வியை நேர்த்தியான கல்வியாக கொண்டு செல்வதற்கும், எமது காணிகளை மீட்டெடுக்கவும் அதிக தூரம் பயணம் செய்து கொண்டிருக்கின்றேன்.

கோறளைப்பற்று மத்தி விடயம் சம்பந்தமாக பேசுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். முடியும் என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அல்லது அவரது ஆட்களை என்னோடு மூன்று மணிநேர விவாதத்திற்கு வர முடியுமா? என்று கேட்கின்றேன்.

கல்குடாப் பிரதேசத்தில் உள்ள மக்களிடத்தில் உள்ள மிக முக்கிய தேவையான கோறளைப்பற்று மத்திக்கு தனிப் பிரதேச சபை பெற்றுக் கொள்வதும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு எல்லைகளை மீட்டிக் கொள்கின்ற விடயமும், கல்வி ரீதியாக எமது சமூகம் முன்னேற வேண்டும் என்கின்ற விடயத்தில் தான் நாம் பயணிக்க வேண்டும்.

உங்களது பிள்ளைகள் சிறந்த கல்வியாளர்களாக மிளிர வேண்டும், நாங்கள் இழந்து நிற்கின்ற எல்லைக் காணிகளையும் எங்களிடத்தில் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களையும் நாங்கள் மீட்டுக் கொள்வதற்கு எனது உயிர் இருக்கும் வரை போராட்டம் தொடரும்.

80% பணத்தை வாழைச்சேனை பிரதேச சபைக்கு வரியாக மக்களாகிய நீங்கள் செலுத்துகின்றீர்கள். ஆனால் உங்கள் பகுதிக்கு 20% கூட செலவு செய்யப்படுவதில்லை.

இந்த மண்ணை நேசிக்கும் எங்களுக்கு இருக்கின்ற வலி ரவூப் ஹக்கீமை போன்றவர்களுக்குத் தெரியாது. இதனை கல்குடா பிரதேச முஸ்லிம் மக்கள் யோசிக்க தவறுவார்களாக இருந்தால் ஏமாற்றி விட்டுத்தான் போவார்கள்.

எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களின் குரலாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஒலிக்கும்.

எதிர்காலத்தில் கல்குடாப் பிரதேசத்தில் எல்லா விடயங்களிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும். இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் ஏதும் பிரச்சினைகள் ஏற்பட்டால் முதலில் நிற்பது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தலைமை என்பதை யாரும் மறுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

கல்முனை நகரில் தனியார் பேருந்து நிலையத்தை ஏற்படுத்தித் தருமாறும், இணைந்த சேவையை உறுதிப்படுத்துமாறும் கோரி நேற்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

கல்முனை நகரிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கான பேருந்து நிலையபகுதியில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (இ-7)

# மதுபான நிலையம் தீக்கிரை



(கொழும்பு)

வத்தளை, மாபோல பிரதேசத்தில் மதுபான விற்பனை நிலையமொன்றில் நேற்றுக் காலை திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயினால் குறித்த மதுபான விற்பனை நிலையம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வெலிசர கடற்படையின் தீயணைப்பு பிரிவினர் தீயிணை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் குறித்த மதுபானசாலை முற்றாக எரிந்து தீக்கிரையானது. (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# 'உணவே மருந்து'



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

"மாறுபாடில்லாத உண்டி
மறுத்துண்ணின் ஊறு
பாடில்லை உயிர்க்கு"

என்றார் வள்ளுவர். இந்த உடலில் உயிர்க்கு ஊறுபாடு வேண்டாம் எனில் மாறுபட்ட உணவை மறுத்து, மாறுபடாத உணவை உண்ண வேண்டும் என்பார். மாறுபாடில்லாத உணவைப் பொருந்தா உணவு எனவும் நாம் இங்கு குறிப்பிடலாம்.

நாம் உண்ணும் உணவோடு பொருந்தியவை, பொருந்தாததை, கால இயல்போடு பொருந்தியவை, பொருந்தாதவை, சுவை, வீரியங்களால் பொருந்தியவை, பொருந்தாதவை என வகுத்துரைக்கலாம். உடலின் கூறினை பிரக்ருதி அல்லது யாக்கையின் இலக்கணம் என வகுத்து வாத உடலினர், பித்த உடலினர், கப உடலினர், வாதபித்த உடலினர், வாத கப உடலினர், பித்தவாத உடலினர், பித்த கப உடலினர், கப வாத உடலினர், கப பித்த உடலினர், சன்னிவாத உடலினர் என பத்து வகையான மனித persanality என வகுத்து, அவரவர்களுக்குப் பொருந்திய, பொருந்தாத சுவை உணவுகள் பற்றியும் சித்த மருத்துவம் விளக்குகின்றது. நல்லுடல் வாழ்வை விரும்புகின்றவர்கள் கைப்பு, இனிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, உப்பு ஆகிய பல் சுவை கலப்புணவை மேற்கொள்ள வேண்டும். எல்லோரும் எல்லாக் காலத்திற்கும் பொருந்திய அறுசுவை உணவுகளை அளவோடு உண்ணுதலே உடல் நலத்திற்கு நன்மை பயக்கும். நோயற்று வாழ நினைப்பவர்கள் அவரவர்களுக்கு குற்ற நோய்க்கேற்றவாறு தேவையான சுவை உணவுகளைகூட்டியும், தேவையற்ற சுவை உணவுகளை குறைத்தும் உண்ணுதல் வேண்டும். சாத்வீகமான உணவே சிறந்தது. ஏனெனில் எமது உடல் மட்டுமல்ல, மனம்கூட உண்ணும் உணவின் தன்மையிலேயே தங்கியிருக்கின்றது. உணவு எமது உடலிற்கு அத்தியாவசியத் தேவையாகும். நன்றாகப் பசித்த பின்பு அளவாகஉண்ண வேண்டும்

"நாம் அருந்திய உணவு நன்றாக செரிமானம் அடைந்த பின்பு உண்போமாகில் எமக்கு மருந்து எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவே மாட்டாது என்பதாகும். எமக்கு சம்பவிக்கும் கூடுதலான நோய்கள், துன்பத்திற்கு எமது உணவு தொடர்பான பழக்க வழக்கங்களே பின்னணி கொண்டதாக அமைவதைக் காணலாம். ஆனாலும் சரியாக தெரிவு செய்யப்பட்ட உணவு அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சக்தியைக் கொடுக்கின்றது, உடலை வளர்ப்பதற்கும், அழியும் கலங்களை புதுப்பிப்பதற்கும் உதவுகின்றது, நோய்கள் ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கின்றது, நோய் மாறுவதற்கு அவசியமாகின்றது. அன்றாட நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதாவது கழிவு அகற்றல், சுவாசம், நித்திரை, ஓய்வுபெறல் முதலானவற்றுக்கு உணவு அவசியமாகிறது.



உடலிற்கு தேவையான சக்தியில் 60-70 வீதம் வரையில் மாப்பொருளில் இருந்தும் 10-20 வீதம் புரதமாக வேண்டும். 20-25 வீதம் கொழுப்பின் ஊடாக கிடைக்க வேண்டும்.

கனியுப்புக்கள், உயிர்ச் சத்துக்கள், நார்ப்பொருட்களில் சக்தியில்லை. ஆனால் உடலின் பல்வேறு செயற்பாடுகளுக்கு இவைகள் அத்தியாவசியமாகின்றன.

இந்த விகிதாசாரமும் சரியாக அமையாவிடின் பல தரப்பட்ட உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றது.

சுவைகளின் அடிப்படையின் நோக்கின், இனிப்பு நெய்புத்தன்மை பொருந்தியது, இளக்கமானது செரிமான காலம் மிகுவது, குழந்தைப் பருவம் தொட்டு பழக்கப்பட்டிருப்பது, என்பு, சதை, கொழுப்பு, சுக்கிலம் ஆகிய உடற்தாதுக்களுக்கு ஊட்ட மளிக்கின்றது. உடலை வளர்த்து உயிரை நிலைக்க வைக்கின்றது. வாத, பித்த, கபங்களின் தீய செயல்களை தடுத்து உடலுக்கு பாதுகாப்பளிக்கின்றது.

இனிப்பை மிகுதியாக உட்கொள்வதால் கொழுப்பும், கபமும் மிகுதியாகின்றன. உடல் பெருக்கிறது. பசியும் செரிப்பும் குறைகின்றன. சிறுநீர் மிகுதியாக கழியும்,

ஆனாலும் புளிப்புச் சுவை பசியை தூண்டும், செரிமானத்தை மிகைப்படுத்தும். உணவின்பால் வேட்கையையும், சுவை உணர்வையும் ஏற்படுத்தும். வெப்பத்தை கூட்டும்.

புளிப்புச்சுவையை மிகுதியாக உட்கொண்டால் உடனுறுப்புக்கள் தளர்ச்சியடையும்.

இவ்வாறு ஒவ்வொரு சுவையும் அவசியமாகின்றது. ஆனால் மிகுதியாகவோ குறைவாகவோ எடுக்கக்கூடாது. உதாரணமாக கைப்பு சுவையை யாரும் விரும்புவதில்லை. ஆனால் கைப்பு சுவை உடலிற்கு உறுதுணையாகின்றது. அத்துடன் உடற்கலங்களின் தேய்மானங்களை புதுப்பிக்க கைப்பு சுவையும் அத்தியாவசியமாகின்றது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்காநல்லூரில் சீறிப்பாய்ந்த காளைகள்



## ஜல்லிக்கட்டு காளைகளுக்கு சிறு தீங்கு கூட நடக்காது

### முதல்வர் பழனிச்சாமி தெரிவிப்பு



(அலங்காநல்லூர்)

ஜல்லிக்கட்டு விளையாட்டு மூலம் காளைகளுக்கு சிறு தீங்கும் நடைபெறுவது இல்லை என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிச் தெரிவித்தார்.

உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்ச்செல்வம் ஆகியோர் நேற்றுக்காலை தொடங்கி வைத்தனர்.

மதுரை மாவட்டம், அவனியாபுரம், பாலமேடு ஆகிய இடங்களில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றுள்ளன.


உலகப்புகழ் பெற்ற அலங்கா நல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான இந்த ஜல்லிக்கட்டை தமிழக மக்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்.

ஜல்லிக்கட்டு விளையாட்டு மூலம் காளைகளுக்கு சிறு தீங்கும் நடைபெறுவது இல்லை. காளை வளர்ப்பவர்கள் குழந்தைகளை நாம் எப்படி பேணி வளர்ப்போமோ அது போல தாங்கள் வீட்டு குழந்தை போல வளர்க்கிறார்கள்.

வீர விளையாட்டான இந்த ஜல்லிக்கட்டு உலகமே போற்றும் அளவுக்கு சிறக்க வேண்டும் என பழனிச்சாமி தெரிவித்தார். (இ-8)

## ஜல்லிக்கட்டு இருக்கும் வரை ஜெயலலிதா புகழ் இருக்கும்

### ஓ.பி.எஸ்.தெரிவிப்பு



(மதுரை)


ஜல்லிக்கட்டு இருக்கும் வரை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகழ் இருக்கும் என ஜல்லிக்கட்டு போட்டியின்போது துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு நேற்று தொடங்கி நடைபெற்று வருகிறது. போட்டியை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்ச் செல்வம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இருவரும் தனி மேடையில் அமர்ந்து போட்டியை ரசித்தனர்.

போட்டியின் இடையே முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, "ஜல்லிக்கட்டு விளையாட்டை தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டாக நாம் கருதுகிறோம் என்றார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் உரையாற்றும் போது தடைகளை உடைத்து சட்டப் போராட்டம் நடத்தி ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருவதாக கூறினார். மேலும், ஜல்லிக்கட்டு இருக்கும் வரை ஜெயலலிதாவின் புகழ் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-8)

## மஞ்சு விரட்டில் காளைகள் முட்டி 2 பேர் உயிரிழப்பு-50 பேர் காயம்



(சிவகங்கை)

சிவகங்கை அருகே சிராவயல் பகுதியில் நடந்த மஞ்சு விரட்டில் காளைகள் முட்டித் தள்ளியதில் வேடிக்கை பார்த்த 2 பேர் உயிரிழந்தனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தின் பல் வேறு பகுதிகளில் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள மாடுபிடி வீரர்கள், ஆர்வத்துடன் காளைகளை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் சிராவயல் பகுதியிலும் நேற்று மஞ்சுவிரட்டு தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் சிவகங்கை மட்டுமின்றி மதுரை, இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான காளைகள், மாடுபிடி வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், மைதானத்தில் அவிழ்த்துவிடப்பட்ட காளைகளை அடக்குவதற்காக மாடுபிடி வீரர்கள் துரத்திச் சென்றனர். அப்போது சில காளைகள் பார்வையாளர்கள் பக்கம் சீறிப் பாய்ந்து ஓடியது.

இதில் வேடிக்கை பார்க்க திரண்டிருந்த பொதுமக்களை மாடுகள் முட்டி தூக்கி வீசின. இதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானத்தால் வந்த சிக்கல்

# மங்களவின் பதவியைப் பறிக்க மைத்திரி அதிரடித் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படவுள்ளதாகவும் நிதியமைச்சர் மங்கள சமரவீரவை பதவியில் இருந்து நீக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள் ள்தாகவும் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மதுபான விற்பனை நிலையங்களில் பெண்கள் பணியாற்ற அனுமதியளித்தும் இரவு 10 மணிவரை மது விற்பனை நிலையங்கள் திறந்து வைக்க அனுமதியளித்தும் வெளியான வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக ஜனாதிபதி அதிருப்தியடைந்த காரணத்தினாலேயே இந்த தீர்மானத்தை அவர்மேற்கொள்ளவுள்ளதாக தெரியவந்துள்ளது.

மங்கள சமரவீரவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியதன் பின்னர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு நிதிய மைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர், சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேபோன்று, தேர்தலின் பின்னர் ஐக்கியதேசிய கட்சியை ஒதுக்கிவிட்டு, சுதந்திரக்கட்சி தனித்து புதிய அரசாங்கம் ஒன்றினை அமைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் மங்கள சமரவீர பதவி நீக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள காரணத்தினால் தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்படவுள்ளதா? என்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மதுபான விற்பனை குறித்த சுற்றுநிருபத்தை இரத்துச்செய்ய அமைச்சரவை அனுமதி-சு.க.

(கொழும்பு)

பெண்களுக்கு மதுபானம் விற்பனை செய்தல் மற்றும் மதுபான விற்பனை நிலையங்கள் இரவு 10 மணி வரையில் திறந்து வைத்தல் ஆகியன தொடர்பிலான சுற்றுநிருபத்தை இரத்துச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த சுற்றுநிருபத்தை இரத்துச் செய்ய அமைச்சரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில்நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெண்களுக்கு மதுபானம் விற்பனை செய்தல், மதுபான விற்பனை நிலையங்களில் பெண்களை பணிக்கு அமர்த்துதல் மற்றும் இரவு 10 மணி வரையில் மதுபான விற்பனை நிலையங்களை திறந்து வைத்தல் ஆகிய தொடர்பில் நிதி அமைச்சினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படும் என அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## ரோயல் கல்லூரி மாணவர்கள் கின்னஸ் உலக சாதனை!





(கொழும்பு)

கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர்கள் கின்னஸ் உலகை சாதனை ஒன்றை படைத்துள்ளனர்.

குறித்த கின்னஸ் சாதனை சான்றிதழை கல்வி அமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் இணைந்து ரோயல் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கினர்.

ஒரே நேரத்தில் ஏராளமான மாணவர்கள் தண்ணீர் ரொக்கெட் (water rockets) ஐ வெற்றிகரமாக செலுத்தி இந்தச் சாதனையை படைத்துள்ளனர்.


இதற்கு முன்னர் ஒரே நேரத்தில் 1056 தண்ணீர் ரொக்கெட்டுக்களை செலுத்தி படைத்த சாதனையை கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர்கள் முறியடித்துள்ளனர்.

இவர்கள் 1950 தண்ணீர் ரொக்கெட்டுக்களை செலுத்தி சாதனை படைத்துள்ளனர். இந்த தண்ணீர் ரொக்கெட்டுக்கு தண்ணீரே எரிபொருளாகும். உரிய சாதனத்தில் பொருத்தப்பட்ட தண்ணீர் ரொக்கெட்டுகளை, காற்றில் ஏவி விட்டு, அது கடக்கும் தூரத்தை கணக்கிடுவதே தண்ணீர் ரொக்கெட் ஆகும்.

பிளாஸ்ரிக் போத்தலை ரொக்கெட்டாக பாவித்து தண்ணீரை எரிபொருளாக வைத்து அதை நீண்ட தூரம் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





யாழ்.வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தைப்பொங்கல் விழாவும் கால்கோள்விழாவும் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெற்றிலைக்கேணி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிவதர்சினி மற்றும் வெற்றிலைக்கேணி விநாயகர் முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள் -2018

## ஒக்டோபரில் குரு மாற்றம்! அதற்குப் பின்னால் வரும் ஏற்றம்!



### நினைத்ததை முடிக்க நிதானம் தேவை என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!



**மகரம்**
உத்திராடம் 2,3,4-ம் பாதம்
திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்

பிறக்கும் புத்தாண்டு ஏழரைச் சனியின் ஆதிக்கத்தோடு பிறக்கிறது. சனி ஆதிக்கம் செலுத்தும் அந்த ஏழரை வருட காலமும் உங்களுக்கு அனுபவங்கள் நிறையக் கிடைக்கும். உறவு பகையாகும். பகை நட்பாகும். மாற்றங்களும், ஏற்றங்களும் மனதிற்கு பிடித்தபடி வருவது மந்தனின் ஆதிக்க காலத்தில் தான்.

ஆண்டு தொடங்கும் முன்னதாகவே உங்களுடைய ஜாதகத்தைப் புரட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள். சனி பக்வான் முதல் சுற்றில் வருகிறாரா? இல்லை இரண்டாம் சுற்றில் வருகின்றாரா? அல்லது மூன்றாவது சுற்றில் வருகின்றாரா? என்பதை கவனித்துப் பார்த்து வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு ஏற்ற விதத்தில் பரிகாரங்களைச் செய்து கொள்ளலாம். பொதுவாக சனி பிடிக்காத தெய்வம் என்று அழைப்படுகின்ற விநாயகர், அனுமன் இருவரையும் இந்த ஆண்டு முழுவதும் வழிபட்டு வரவேண்டும். அதுமட்டுமல்லாமல் சனியின் சந்நிதியில் எள்தீபம் ஏற்றி சனி கவசம் பாராயணம் செய்து வழிபாடு செய்யலாம்.

சனிபகவானை பூஜித்து வழிபட்டால் பொன்னான எதிர்காலம் உங்களுக்கு அமையும். வாசமலர் சூட்டி வழிபட்டால், பாசம் மிக்கவர்களின் பழக்கம் கிடைக்கும். விரயச்சனியின் ஆதிக்கத்தால் சுப விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் ஒரு சிலருக்கு உருவாகலாம். சனி உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் இருப்பதால், பணப் புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. ஆனால் அதே சமயம் வந்த பணம் வாசலுக்கு வரும் பொழுதே, முழுவதும் செலவாகிவிடும். எனவே இதுபோன்ற காலங்களில் சேமிப்பை உயர்த்த வேண்டுமானால் சிக்கனத்தைக் கையாள வேண்டும். பூமி விற்பனை, இட விற்பனை, பூர்வீகச் சொத்து விற்பனை போன்றவற்றில் யோசித்து முடிவெடுப்பது நல்லது. நிம்மதி கிடைக்க வேண்டுமானால் ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதோடு, அருகில் இப்பவர்களை அரவணைத்தும் செல்லுங்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை!

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில்ராகுவும்சஞ்சரித்து காலசர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதில் தடைகள் ஏற்படும். தொழிலில் பழைய பங்குதாரர்கள் விலகிக் கொள்வர். புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். நம்பிக்கைக்குரிய பணியாளர்கள் உங்களை விட்டு விலகலாம். நாணயப் பாதிப்புகள் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கும். சேமிப்பு கரைகிறதே என்று கவலைப்படுவீர்கள். குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய இயலாமல் குழப்பம் காண்பீர்கள். எனவே ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு மாத காலத்திற்குள் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறைப்படி செய்து கொள்வது நல்லது.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிகின்றது. குரு சஞ்சரிக்கும் இடம் 10ஆம் இடமாகும். 10இல் குரு சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் கவனமுடன் செயற்படுவது நல்லது. உங்கள் திறமைக்கு உரிய மதிப்பு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். குருவின் பார்வை பலத்தால் மூன்று இடங்கள் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, தாய்வழி ஆதரவு கிடைக்கும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும். பழுதாகிக் கிடந்த வாகனங்களைப் புதுப்பிப்பீர்கள். கட்டடம் கட்டும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

12இல் சஞ்சரிக்கும் சனி பார்க்கும் இடங்கள் 2,6,9. இந்த பார்வை பலத்தால் பலவித மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். குறிப்பாக குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளக் கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி அளிக்காது. என்றாலும் திடீர் வருமானங்கள் வந்து சேரும். வெளிநாட்டு தொடர்பு அனுகூலம் தரும். ஆன்மீகச் சுற்றுலாக்களை அதிகம் மேற்கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் சொல்லிற்கு கட்டுப்படவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உயர் அதிகாரிகள் உங்களுக்குத் தரும் சலுகைகளை தாமதப்படுத்தலாம். இதுபோன்ற காலங்களில் வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது. அவரது படத்திற்கு 'ஸ்ரீராமஜெயம்' எழுதிய மாலை கட்டி அணிவித்தால் நற்பலன்கள் கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்!

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான். சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான அவர், ஒக்டோபர் 4ஆம் திகதி 10ஆம் இடத்திலிருந்து 11ஆம் இடத்திற்கு செல்லப்போகிறார். அங்கிருந்து கொண்டு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். எனவே மனதிற்கு பிடித்த பணி உங்களுக்கு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புனிதப் பயணங்களை அதிகம் மேற்கொள்வீர்கள். புதிய திருப்பங்கள் வந்து கொண்டே இருக்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர். சலிக்காத உழைப்பிற்குத் தகுந்த சன்மானம் கிடைக்கலாம். உணர்ச்சிவசப்பட்டு பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. குருவின் பார்வை பதியும் இடங்களைப் பொறுத்து நல்ல பலன்கள் வந்து சேரும். அதன்படி 3,5,7ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிவதால் சகோதர சச்சரவுகள் அகலும். வழக்குகள் சாதகமாக அமையும். தாழ்வு மனப்பான்மையை அகற்றிக்கொள்ளுங்கள்.

### குருவின் அதிசார காலமும், வக்ர காலமும்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு விருச்சிக இராசியில் அதிசாரம் பெறுகிறார். 7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை விருச்சிக இராசிக்குள் குரு-செவ்வாய் சேர்க்கை ஏற்படுகின்றது. இதனால் குரு-மங்கல யோகம் உருவாகின்றது. இக்காலத்தில் இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும்.

குருவின் அதிசார காலமும், வக்ர காலமும் ஏற்ற இறக்கத்துடன் இருக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்திணைவர். வழக்குகள் சாதகமாக அமையுமா என்பது சந்தேகம்தான். விரயங்கள் அதிகரிக்கும். கடன்சுமை கூடிக்கொண்டே போகின்றதே என்று கவலைப்படுவீர்கள். வெளிநாடு சென்றவர்கள் வேலை கிடைக்காமல் தாய்நாடு திரும்பலாம். புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம். நிர்ப்பந்தத்தின் காரணமாக வைத்துள்ள சொத்துகளை குறைந்த விலைக்கு விற்க நேரிடும்.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை மூலநட்சத்திரக் காலில் தனுசு இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். இக்காலத்தில் உங்களுக்கு உடல் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். மருத்துவம் பலனளிக்கவில்லையே என்று கவலைப்படுவீர்கள். முன்கோபத்தால் சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். புதிய ஒப்பந்தங்கள் வருவதை ஏற்றுக் கொள்ள இயலாமல் போகலாம். வியாபார விரோதங்கள் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களால் உபத்திரவங்கள் அதிகரிக்கும். கடன்சுமை கூடிக்கொண்டே போகின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

இரண்டாமிடத்திற்கும் சனி அதிபதியாக விளங்குவதால் குடும்பப் பிரச்சினைகள் கொடி கட்டிப் பறக்கும். உறவினர்கள் உங்களை உதாசீனப்படுத்தலாம். வரவைக்காட்டிலும் செலவு கூடும். வருமானத்தில் பாதி வீண் விரயமாகலாம். புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. சனி- செவ்வாய் சேர்க்கை காலத்தில் மிகமிக கவனம் தேவை. வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிகமிக கவனமுடன் செயற்படுவது நல்லது. சக ஊழியர்களால் தொல்லைகள் உருவாகும். அதிகாரிகளின் ஆதரவு குறையும். தஞ்சை பெரிய கோவிலில் உள்ள விஸ்வரூப நந்தி, வாராஹி போன்றவற்றை வழிபடுவதோடு பழனியில் ராஜ அலங்காரத்தோடு காட்சியளிக்கும் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு!

'ஸ்ரீராமஜெயம்' எழுதிய மாலையை அனுமனுக்கு அணிவிப்பது நல்லது. தினமும் குறிப்பிட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் ராமஜெயம் எழுதுங்கள். சேமிப்பு உயரும். சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

### செவ்வாய் பெயர்ச்சியும், உச்சமும்!

உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதி செவ்வாய். சுக லாபாதிபதியான செவ்வாய், ஜனவரி 20ஆம் திகதி முதல் மார்ச் 10 ஆம் திகதி வரை தனது சொந்த வீடான விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார்.

இக்காலத்தில் லாப ஸ்தானம் பலமடைகின்றது. எனவே தொழில் வளர்ச்சி கூடும். இலாபம் இருமடங்காகும். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளின் வழியே தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 26 ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். சுக லாபாதிபதி உங்கள் இராசியில் உச்சம் பெறும்பொழுது ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நெருக்கடி கொடுத்தவர்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வர். பணப்பற்றாக்குறை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இக்காலம் ஒரு பொற்காலமாகவே அமையும். வீடு வாங்கும் யோகம் கைகூடும்.

### பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

புத்தாண்டு தொடக்கத்தில் குருவின் பார்வை, தன ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே செல்வநிலை உயரும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். ஏழரைச் சனியின் ஆதிக்கம் தொடங்குவதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்லவும். விரயங்கள் கூடும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவது நல்லது.

கல்யாணம், மகப்பேறு போன்றவை, குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் ஏற்படும். குருபார்வை சகாய ஸ்தானத்தில் பதிவதால் உடன்பிறப்புகளாலும், உறவினர்களாலும் நன்மை கிடைக்கும். பிள்ளைகளின் படிப்பு மற்றும் உத்தியோகத்தை முன்னிட்டு வைத்தீஸ்வரன் கோவில் சென்று தையல் நாயகி அம்மன், வைத்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை தோறும் ஜோடி தீபமேற்றி சனிபகவானை வழிபாடு செய்யுங்கள்.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியா-இஸ்ரேல் இடையே 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

### மோடி புரட்சிகர தலைவர்– நெதன்யாகு



(டில்லி)

இந்தியா - இஸ்ரேல் இடையே பாதுகாப்பு, ஹோமியோபதி மருந்து உற்பத்தி, விவசாயம், திரைப்படத் துறை, சைபர் துறை உள்ளிட்ட 9 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 6 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். அரசுமுறை பயணமாக நேற்று முன்தினம் இந்தியா வந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் முப்படையினரின் அணிவகுப்புடனட சிறப்பான சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்துக்கு சென்ற பெஞ்சமின் நேதன்யாகு அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்

இதன்பிறகு, இரு தரப்பினருக்கும் நடுவே உயர் மட்ட பேச்சுவாரத்தை நடைபெற்றது. பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் இந்திய பிரதமர் மோடி சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இரு நாடுகள் இடையே பாதுகாப்பு, ஹோமியோபதி மருந்து உற்பத்தி, விவசாயம், திரைப்படத்துறை, அறிவியல்-தொழில்நுட்பம், சைபர் துறை உள்ளிட்ட 9 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியா வந்துள்ள எனது நல்ல நண்பரை வரவேற்கிறேன். அவரது வருகை புத்தாண்டு கலண்டரில் சிறப்பான தொடக்கமாக குறிக்கப்படும். இருநாட்டு நட்புறவை மேம்படுத்துவதுடன், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வுகளை நடைமுறைப்படுவதற்கான வாய்ப்பாகவே இந்தச் சந்திப்பு அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நான் இஸ்ரேல் சென்றேன். அப்போது 1.25 பில்லியன் இந்தியர்களின் வாழ்த்துக்களையும், நட்புறவையும் அங்கு எடுத்துச் சென்றேன். திரும்பி வந்த போது இஸ்ரேலிய மக்களின் அன்பு, 'மரியாதை ஆகியவற்றை பெஞ்சமின் நெதன்யாகு மூலம் எடுத்து வந்தேன்.

இரு நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து இரு நாட்டு உறவை தூண்களை போன்று உறவை பலப்படுத்துவோம். விவசாயம், அறிவியல் - தொழில்நுட்பம், பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மூலம் விவசாயத்திற்கு இஸ்ரேலிடமிருந்து சிறப்பான ஒத்துழைப்பு கிடைக்கும். பாதுகாப்பு ஒப்பந்தம் மூலம், இஸ்ரேலிய நிறுவனங்களின் நேரடி அந்நிய முதலீட்டை இந்திய நிறுவனங்கள் பெற முடியும் என்றார்.

பெஞ்சமின் நெதன்யாகு பேசுகையில், மோடி புரட்சிகரமான தலைவராக உள்ளார். மோடியால் வருங்காலத்தில் புரட்சிகரமான இந்தியா உருவாகும். இஸ்ரேலுக்கு வந்த முதல் இந்திய தலைவர் மோடி. அவரின் வருகையால் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. மற்ற நாடுகளை போல் இல்லாமல் இந்தியாவில் வாழும் யூதர்கள் நிம்மதியாக உள்ளனர். இந்தியாவின் மிகப் பெரிய நாகரிகம், சகிப்புத் தன்மை, ஜனநாயகம் ஆகியவற்றின் சிறப்பால்தான் இது சாத்தியப்பட்டது.

மும்பையில் நடந்த தீவிரவாதிகளின் பயங்கர தாக்குதல் எப்போதும் எங்கள் நினைவில் உள்ளது. எனவே, இந்தியாவுடன் இணைந்து தீவிரவாதத்திற்கு எதிராக போராட தயாராக உள்ளோம். இவ்வாறு பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். (இ-8)

## தற்கொலைப் பட... பலி எண்ணிக்கை 38...

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பயங்கரவாதிகள் நடத்திய இரட்டை தற்கொலைப் படை தாக்குதலில் 38 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 90 பேர் படுகாயமடைந்தனர்.



ஈராக் நாட்டில் பல பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளாக ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். மொசூல் உட்பட பல நகரங்கள் அவர்களின் பிடியில் இருந்தது. ஆனால் ஈராக் இராணுவம் பல மாதங்களாக முற்றுகையிட்டு மொசூல் நகரை கடந்த ஆண்டு மீண்டும் கைப்பற்றின. இதே போல் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த சிறுசிறு நகரங்களும் மீட்கப்பட்டன.

கடந்த மாதம் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த அனைத்து பகுதிகளும் மீட்கப்பட்டு விட்டன என்று ஈராக் அரசு அதிகாரபூர்வமாக அறிவித்து வெற்றிக் கொண்டாட்டங்களிலும் ஈடு... பட்டது என்ற போதிலும் பயங்கர... வாதிகளின் தாக்குதலை ஈராக்... இராணுவத்தால் இன்னும் முழுமையாக தடுக்க இயலவில்லை. ...ந்த ...

பயங்கரவாதிகள் தொடர்ந்து பல்... வேறு நகரங்களில் ஊடுருவி தாக்கு... தலை நடத்தி வருகின்றனர். இந்... நிலையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள்... ஈராக் தலைநகரான பக்தாத்தில் நேற்று... முன்தினம் காலை 2 இடங்களில்... தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்... தினர்.

பக்தாத் நகரின் வர்த்தக பகுதி 90... யான ஏவியேஷன் சதுக்கத்திற்கு உட...

## அவா புயலுக்கு ...

(அன்டனானரிவோ)

ஆபிரிக்காவின் தென் கிழக்கே இந்திய பெருங் கடலில் அமைந்துள்ள தீவு நாடான மடகாஸ்கரில், கடந்த 5 மற்றும் ஆம் திகதிகளில் 'அவா' புயல் தாக்கியது. இதனால் மணிக்கு 119 கி.மீ. வேகத்தில் காற்று வீசியது. இதில் நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதிகள் கடும் சேதத்துக்கு உள்ளாகின.

இந்த புயலில் சிக்கி 29 பேர் வரை பலியானதாக கடந்த வாரம் செய்திகள் வெளியானது. ஆனால் தற்போது இந்த பலி எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 22 பேரை காணவில்லை என அரசு அறிவித்துள்ளது.

இதைப்போல 54 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.


புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய விபத்து மற்றும் பேரிடர் மேலாண்மை துறையினர் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மடகாஸ்கர் தீவு அடிக்கடி புயலால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் தாக்கிய 'எனாவோ' புயலுக்கு 78 பேர் பலி யாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)



## இந்தோனேசியாவில் கட்டடம் சரிந்து வீழ்ந்தது

### 7 பேர் காயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பங்குப் பரிவர்த்தனை நிலையம் இயங்கிவரும் கட்டடம் சரிந்து வீழ்ந்ததில், காயமடைந்தோரின் எண்ணிக்கை சுமார் 77ஆக உயர்வடைந்துள்ளதாக, அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்தாவில், இரட்டைக் கோபுரங்களைக் கொண்டதும் பல மாடிகளைக் கொண்டதுமான கட்டடத் தொகுதியின் இரண்டாவது மாடியில் பங்குப் பரிவர்த்தனை நிலையம் இயங்கி வருகின்றது.

இந்தக் கட்டடத் தொகுதியின் இரண்டாவது மாடி நேற்று திங்கட்கிழமை எவரும் எதிர்பாராத வகையில் திடீரென்று சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன் போது, கட்டடத்திலிருந்த சுமார் 28 பேர் காயமடைந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆளும் கட்சியின் ஆதரவு இல்ல... ரோமானிய பிரதமர் இராஜினாம...

(புச்சாரெஸ்ட்)

ரோமானியா பிரதமர் மிஹாய் டுதோஸுக்கு அளித்து வந்த ஆதரவை ஆளும் கட்சி திரும்ப பெற்ற நிலையில், அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடான ரோமானியாவில் மிஹாய் டுதோஸ் கடந்த ஆண்டு ஜூலை மாதம் பிரதமராக பொறுப்பேற்றார்.

சமூக ஜனநாயக கட்சியின் நீண்டகால உறுப்பினராக உள்ள டுதோஸ் மீது கட்சி அதிருப்தியில் இருந்ததாக கூறப்படுகிறது.



இந்நிலையில், ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தி டுதோஸுக்கு அளித்த ஆதரவை திரும்ப பெறுவதாக அறிவித்தனர்.

இதனையடுத்து, டுதோஸ் பதவியை இராஜினாமா செய்தார். ... ஜனாதிபதி பால் ஸ்டானெஸ்கு தற்... பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## டைத் தாக்குதலில் க 38 ஆக உயர்வு



லில் வெடிகுண்டுகளை கட்டிக் கொண்டு வந்திருந்த 2 பயங்கரவாதிகள் அதை மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்த வெவ்வேறு பகுதிகளில் வெடிக்கச் செய்தனர்.

அப்போது அங்கே கூடியிருந்த கட்டுமானத் தொழிலாளர்கள், பாது காப்பு படை வீரர்கள், அப்பாவி பொது மக்கள் நாலாபுறமும் தூக்கி வீசப்பட் டனர். இந்த தாக்குதலில் 16 பேர் பலியான நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள் ளது. 90 பேர் படுகாயம் அடைந்தனர். தாக்குதல் நடத்திய பயங்கரவாதி களும் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்த னர்.

கூடுதல் இராணுவத்தி னர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக ளில் சேர்த்தனர்.

இதில் பலத்த காயம் அடை ந்தவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிட மாக உள்ளதால் பலி எண் ணிக்கை இன்னும் அதிகரிக் கும் என்று அஞ்சப்படுகிறது.

இந்த இரட்டை தற்கொ லைப்படை தாக்குதலை ஈராக் சுகாதாரத்துறை அமைச்ச ரும் உறுதி செய்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பக்தாத் நகரின் முசாயிப் பகுதியில் தற்கொலைப் படை யைச் சேர்ந்த பயங்கரவாதி நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்ட நிலை யில் பயங்கரவாதிகள் இந்த இரட்டைத் தாக்குதலை நடத் தியுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-8)

# இந்திய இராணுவத் தளபதியின் பேச்சு ஆக்கப்பூர்வமானதல்ல

## சீன வெளியுறவு அமைச்சகம் கண்டனம்

(பீஜிங்)

சீனாவுடன் நமக்கு டோக் லாம் பிரச்சினை இருக்கிறது என்ற இந்திய இராணுவத் தளபதியின் பேச்சு ஆக்க பூர்வமானதல்ல என்று சீன வெளியுறவு அமைச்சகம் கண் டனம் தெரிவித்துள்ளது.

இந்திய இராணுவ தளபதி பிபின் ராவத் அண்மையில் நடந்த நிகழ்வில் பேசும் போது, மேற்கு எல்லையில் பாகிஸ்தான் மீதும், வடக்கு எல்லையில் சீனா மீதும் நமது இராணுவத்துக்கு மிகு ந்த கவனம்தேவைப்படுகிறது. சீனாவுடன் நமக்கு டோக்லாம் பகுதியில் பிரச்சினை உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு சீன வெளியுறவு



அமைச்சகம் கண்டனம் தெரி வித்துள்ளது. அந்த அமைச் சகத்தின் செய்தி தொடர் பாளர் லூ காங்க் தெரிவிக் கையில், "இந்திய தளபதி யின் கருத்து, கடந்த செப்டெம் பர் மாதம் பிரிக்ஸ் மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜின்பிங்- பிரதமர் மோடி இடையே எல்லையில் அமைதியை பேணுவதற்கு ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை க்கு எதிரானது. டோக்லாம் பிரச்சினை குறித்து அவர் கூறியிருப்பது, ஆக்கபூர்வ மானதல்ல. இது எல்லை யில் அமைதியை பராமரிக்க எவ்விதத்திலும் உதவாது. டோக்லாம் என்றைக்குமே சீனாவுக்கு உரிய பகுதிதான்" என்றார்.

இந்த நிலையில் இந்தியா வின் வடக்கு பிராந்திய இரா ணுவத் தளபதி அபய் கிரு ஷ்ணா தெரிவிக்கையில், "நாங்கள் நன்கு தயார் நிலையில் இருக்கிறோம். டுடிங் (அருணாசல பிரதேசம்) பகுதியில் அண்மையில் சீன இராணுவத்தினர் வந்தனர். அங்கு நமது படைகளும் இருந்ததால் அவர்கள் தங்க ளது எல்லைக்குள் மீண்டும் சென்றுவிட்டனர். இதுபோ ன்ற நடவடிக்கைகளில் இனி சீனா இறங்காது என்றே கருதுகிறேன்" என்று தெரி வித்துள்ளார். (இ-8)

# 51 பேர் பலி



# கொலம்பியாவில் பாலம் உடைந்து வீழ்ந்ததில் பத்துப் பேர் உயிரிழப்பு

(போகோடா)

கொல்ம்பியாவின் தலை நகர் போகோடாவில் பாலமொ ன்று உடைந்து வீழ்ந்ததில், கட்டுமானத் தொழிலாளர் கள் 10 பேர் உயிரிழந்துள்ள துடன், பலர் படுகாயமடைந் துள்ள நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக, அந்நாட்டு தேசிய உட்கட்டமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இடிபாடுகளில் சிக்கி சுமார் 11 பேர் காணா மல் போயுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடு மெனவும், அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



இந்தப் பாலத்தின் வடிகால மைப்புப் பணி நேற்று முன் தினம் இடம்பெற்றுக்கொண்டி ருந்தபோதே, திடீரெனப் பாலம் உடைந்து வீழ்ந்துள்ளது.

சம்பவ இடத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், இதில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்ட நிலையில் உயிரி ழந்துள்ளார். 446 மீற்றர் நீளமான இந்தப் பாலம், கடந்த மார்ச் மாதம் அங்குரார்ப்ப ணம் செய்துவைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

## லை மா!



தனது துணை ற்காலிக (இ-8)

# இந்தோனேசிய நூலகத்தில் தீ! அரிய கலைப்பொருட்கள் நாசம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவி லுள்ள பாரம்பரிய கடல்சார் நூலகத்தில் நேற்று திடீரெ ன்று தீ பரவியதன் கார ணமாக, அந்நூலத்திலிரு ந்த அரிய கலைப்பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

கடல் சார்ந்த வரலாற்று நூல் மற்றும் அரிய கலைப் பொருட்களும் தீக்கிரையா கியுள்ளன.

மேற்படி நூலகத்தில் தீ பரவ முற்பட்டபோது, அந் நூலக ஊழியர்களும் பார் வையாளர்களும் பாதுகாப் பாக வெளியேற்றப்பட்டதால், அனைவரும் எந்தவித ஆபத்துமின்றி தப்பியுள்ள தாக, தீயணைப்புப் படை



யினர் தெரிவித்துள்ளனர்.

நூலகத்தில் பரவிய தீயைத் தொடர்ந்து, நூலகக் கட்டடத்தில் பாரிய கரும் புகை படிந்து காணப்படுவதா கவும், தீயணைப்புப் படை யினரின் உதவியுடன் தற்போது தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள் ளது. இந்நிலையில், நூல கத்தில் தீ பரவியமைக் கான விசாரணையைப் பொலிஸார் ஆரம்பித்துள்ள னர். (இ-8)

# கசினோ சென்ற படகு தீக்கிரை 50 பயணிகள் கடலில் குதிப்பு

புளோரிடாவின் கல்ப் கடற்பகுதியில் பயணிகள் படகொன்றில் நடைபெறும் கசினோவிற்கு ஆட்களை ஏற்றிச்சென்ற படகொன்று தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த படகு தீப்பற்றி யதை அடுத்து அதில் பய ணித்த 50 இற்கும் மேற்பட்ட பயணிகள் கடும் குளிரான கடற்பகுதிக்குள் குதித்ததை அடுத்து ஒருவர் உயிரிழந் துள்ளதுடன் அதில் காயம டைந்த 15 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

குறித்த படகு (Tropical Breeze Casino Cruise) என்ற கசினோ அமைந்துள்ள பயணிகள் படகை நோக்கி செல்லும் வேளையில்



நேற்று முன்தினம் 3.30 மணியளவில் தீப்பற்றியு ள்ளது.

புளோரிடா பகுதியில் கசினோ சூதாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டதை அடு த்து மெக்சிகோ வளைகுடா வில் பயணிகள் படகுகளில் நடைபெறும் கசினோ சூதாட் டத்திற்கு கடந்த 1995 முதல் இவ்வாறு சிறிய கசினோ படகுகளில் பயணிகள் அழை த்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்பொக்கெட் திருடர்கள் விவகாரம்

## ஜனாதிபதியை பகிரங்கமாக விமர்சித்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

பிக்பொக்கெட் ஜனாதிபதி என்று மைத்திரிபால சிறிசேனவை விமர்சித்துள்ள ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மரிக்கார், மகிந்த ராஜபக்ஷவின் முதுகில் குத்தியது போன்று அவர் ஐ.தே.கவின் முதுகிலும் குத்த முனைவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி நடந்த மோதல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐ.தே.கவினரும் கூட்டு எதிரணியினரும் மாறி மாறி திருடர்கள் என்று குரல் எழுப்பினர். மக்களுக்கு திருடர்கள் யார் என்று தெரியும் எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார்,

ஜனாதிபதி எம்மை பிக்பொக்கெட்காரர்கள் என்று அழைத்துள்ளார். ஆம் நாங்கள் பிக்பொக்கெட்காரர்கள்தான்.

மகிந்த ராஜபக்ஷவின் சட்டைப் பையில் இருந்த அவரை, நாங்கள் தான் பிக்பொக்கெட் அடித்து வெளியே கொண்டு வந்தோம் என்பதை ஜனாதிபதி மறந்து விடக் கூடாது. அவரும் ஒரு பிக்பொக்கெட் ஜனாதிபதிதான்.

எமது ஆதரவுடன் ஜனாதிபதியான பின்னர், அடுத்த தேசிய தேர்தல்களில் எம்முடன் இணைந்து செயற்படாமல் இருப்பதற்கு அவர் திட்டமிட்டார்" என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

### ஜனாதிபதி மைத்திரியின்

## பேச்சு அதிகாரத்தை விடுவது செயல் அதிகாரத்தை காப்பது

### ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் விசனம்

(கொழும்பு)

அதிகாரத்தைக் கைவிடுவது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசினாலும், அந்த அதிகாரத்தை தக்கவைக்கும் வகையிலேயே செயற்பாடுகள் அமைந்திருப்பதாக ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி முறையை ஒழிக்கின்றேன் எனக் கூறிக் கொண்டு அதிகாரத்துக்கு வந்தவர், ஆட்சியின் நடுவில் தனது பதவிக்காலம் ஐந்து வருடங்களா? அல்லது ஆறு வருடங்களா? எனக் கோரியிருப்பது முன்னுக்குபின் முரணாக உள்ளது.

உச்சநீதிமன்றம் நடுநிலையாக இருந்து ஐந்து வருடங்கள் எனக் கூறியிருப்பதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

இருந்தபோதும் அவர் தனது பதவிக் காலம் குறித்துக் கேள்வியெழுப்பியிருக்கும் காலம் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

பதவிக்காலம் தொடர்பில் சந்தேகம் இருந்திருந்தால் 19 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னர் நீதிமன்றத்திடம் கோரியிருக்க வேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் எனது பதவிக்காலத்துக்கு என்ன நடக்கும் என்பதை ஐந்து வருடங்கள் முடிவடைந்த பின்னர் கேட்டிருக்கலாம்.




இதனைவிடுத்து, உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் உச்சநீதிமன்றத்தின் வியாக்கியானம் கோரி, மேலும் ஒரு வருடத்துக்கு பதவியில் இருக்க முடியும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டால் தமக்கான பலமாக அதனைக் காண்பிக்க முடியும்.

கட்சியின் தலைமைத்துவத்தை தம்மிடமே வைத்துக் கொள்வதற்கான முயற்சியாகவே இதனைப் பார்க்க வேண்டியிருப்பதாகவும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## மிகவும் கஷ்டப்பட்டு உயிரைக் காத்தோம்



### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இன்னும் கொஞ்ச நேரம் ஆகாயத்தில் இருந்திருந்தால், விமானம் கடலுக்குள்ளேயோ அல்லது வேறெங்கேயோ விழுந்திருக்கும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மிகவும் கஷ்டப்பட்டு உயிரை காப்பாற்றிக்கொண்டு வந்தோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் சென்ற போது, விமானம் திசைமாறி பயணித்தமை தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் சம்பவம் தொடர்பில் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் தைப் பொங்கல் விழாவில் பங்கேற்க நான் தனியார் விமானமொன்றில் பயணித்தேன்.

போகும் வழியில் பலாலி விமான நிலையத்தை விமானிக்கு கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால், மேலதிகமாக 30, 45 நிமிடங்கள் ஆகாயத்திலேயே பயணிக்க வேண்டி ஏற்பட்டது.

மிகவும் கஷ்டப்பட்டு உயிரைக் காப்பற்றிக் கொண்டு வந்தோம். தவறு நேர்ந்து விட்டது. அவர்களின் வரைபடத்தில் பலாலி என, தலைமன்னாரை நோக்கி பயணித்துள்ளது.

பின்னர் அவர்களும், நிலைமையை அறிந்ததால், உயிரைக் காப்பாற்றிக் கொண்டோம். இறுதியில் எரிபொருள் பிரச்சினையொன்றும் வந்தது. எனினும், அந்த இடத்திற்கு (பலாலி)செல்லும்வரை இருந்தது.

இன்னும் கொஞ்சநேரம் இருந்திருந்தால், கண்டுபிடிக்க முடியாதிருந்திருந்தால், எங்கேயாவது கடலுக்குள்ளேயோ அல்லது வேறெங்கேயோ விழுந்திருப்போம்" என அமைச்சர் மகிந்த அமரவீர விளக்கமளித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### திட்டமிட வேண்டாமா?

குடும்ப நண்பர் ஒருவரின் வீட்டிற்கு போனேன். அங்கே அந்தக் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூடி ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள். சரி நுழைந்தது சரியான சந்தர்ப்பம் அல்ல என்று முடிவு செய்து நழுவப் பார்த்தேன்.

அவர்கள் வீட்டில் நடக்க இருந்த சீமந்த விழாவை எப்படி நடத்துவது என்பது பற்றித்தான் விவாதம்.

விடயம் மட்டுமல்ல, விவாதமே அசத்தலாக இருந்தது. யார் யாருக்கு என்ன பொறுப்பு? எவ்வளவு செலவு வரும்? யார் யாரை அழைப்பது என்னென்ன இடைஞ்சல்கள் வரும்? அவற்றையெல்லாம் எப்படிச் சமாளிக்கலாம்? இன்னும் கூடத் துல்லியமாக விவாதித்தார்கள். எழுதினால் கட்டுப்படியாகாது! தாங்கவும் மாட்டீர்கள்.

அந்த விழா எவ்விதக் குழப்பமும் குறைவும் இன்றி இனிதே நடைபெற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பெரும்பாலான வீட்டு விசேடங்களில் அப்பாவே தன்னிச்சையாக முடிவெடுப்பார். வேறு எவரும் கண்டு கொள்ளவும் மாட்டார்கள். தலையிட்டால் நீ என்ன சொல்லுவது, நான் என்ன கேட்பது என்கிற கேள்விகள் அம்பாய்ப் புறப்படும். என்னத்திற்கு வம்பு என்று மற்றவர்கள் ஒதுங்கிவிடுவார்கள். அல்லது பெயருக்கு ஆர் வமிருப்பது போல் கலந்து கொள்வார்கள்.

முடிவில் விழா ஏகப்பட்ட குளறுபடிகளுடன் நடந்தேறும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. திட்டமிடுவதாவது? எல்லாம் நல்லபடியா அதுவா நடக்கும் சார் என்று திண்ணை வேதாந்தம் பேசுகிறவர்களை ஓரங்கட்டிவிட்டு நவீனப் பார்வைகளுடன் எதையும் அலச வேண்டும். அரசாங்கத்திற்கும் தொழில் செய்பவர்களுக்கும் தான் திட்டமிடல் அவசியம். நமக்கெதற்கு என்று எவரும் எண்ண வேண்டாம். எல்லோருக்கும் அவரவர் மட்டத்தில் திட்டமிடல் அவசியம்.

என் பிரான்ஸ் நண்பர் ஒருவர் தன் வீட்டில் ஒரு சிறு நோட்டு புத்தகம் வைத்திருப்பார். அதில் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஒருவரை வரவேற்கச் சென்றால் என்ன என்ன கொண்டு செல்ல வேண்டும்? விமானத்தில் வருகிறவர்களை வரவேற்கச் சென்றால் என்னென்ன கொண்டு செல்ல வேண்டும்? குடும்பத்துடன் பிக்னிக் சென்றால் என்னென்ன எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு பட்டியலே வைத்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் அதைப் பார்த்துக் கொண்டுதான் புறப்படுவார்.

திட்டமிடுவது என்றால் சிலர் மலைக்கிறார்கள். அது வேறு ஒன்றுமில்லை. நடக்கப் போகும் நிகழ்வுகள் குறித்து ஒரு பத்து நிமிடம் முதல் ஒரு மணி நேரம் வரை அது குறித்துச் சிந்திப்பது. அவ்வளவுதான்.

திட்டமிடத் தவறினால் தவறு செய்வதற்கு நாம் திட்டமிட்டு விட்டோம் என்று பொருள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் திட்டம்



## மகிந்தானந்த எம்.பி.விசனம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையம், ஹில்டன் ஹோட்டல், ஹைட் ஹோட்டல், திருமலை எண்ணெய்க்குதம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்துச்சபை, ரயில்வே திணைக்களம், மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உள்ளிட்ட தேசிய சொத்துகளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் அவை விற்பனை செய்யப்படவுள்ளதாக கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கூட்டு ஏதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு 2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணை கிடைத்தது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நல்லாட்சி, ஜன்நாயகம், சட்ட ஆட்சி, நல்லிணக்கம், ஊழல் மோசடிகளற்ற ஆட்சி, அபிவிருத்தியான நாடு போன்றவற்றை தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கினர். எனவே அதற்கு மக்கள் ஆணை வழங்கினர். எனினும் அரசாங்கம் அவ்வாக்குறுதிகள் எதனையும்நிறைவேற்றவில்லை.

தேர்தலின் பின்னர் பிரதம நீதியரசரை நீக்கிவிட்டு பாராளுமன்றில் குறைந்தளவான ஆதரவுள்ள ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதுடன் நல்லாட்சி என்ற விடயம் இல்லாது செய்யப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது இரண்டரை வருடங்கள் காலம் தாழ்த்தியதனால் ஜனநாயகப் பண்பிலிருந்தும் அரசாங்கம் விலகியுள்ளது.

மேலும் நாட்டில் ஒவ்வொரு தரப்பினருக்கும் மாறுபட்ட வகையில் நீதி செலுத்தப்படுகிறது. கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு ஒருவகையிலும் அரசாங்க தரப்பில் உள்ளவர்களுக்கு மற்றுமொரு வகையிலும் நீதி செலுத்தப்படுகிறது. கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் இரு வாரங்களில் வழக்குத் தாக்கல் செய்கிறார். ஆனால் மத்திய வங்கியில் பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளதுடன் அது தொடர்பிலான ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அதற்கு எதிராக சட்டமா அதிபர் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. எனவே சட்ட ஆட்சியும் இல்லாது செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் நல்லிணக்கம் பற்றிப்பேசியபோதிலும் நல்லிணக்கமும் அமுலில் இல்லை. இனவாத பிரச்சினை மீண்டும் நாட்டில் எழுந்துள்ளது. காலி ஜிந்தோட்டையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைக் குறிப்பிடலாம். அத்துடன் மத்திய வங்கி பிணைமுறி அறிக்கை ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்து. குறித்த மோசடியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் 10 உறுப்பினர்கள் வரையில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். ஆகவே ஊழல் மோசடியற்ற ஆட்சியிலிருந்தும் அரசாங்கம் தவறியுள்ளது.

அத்துடன் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது. எனினும் கடந்த மூன்று ஆண்டுகளில் 14.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளிடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளன். அக்கடன் மூலம் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் கடன் பெறப்பட்ட போதிலும் அதன்மூலம் ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த அரசாங்கம் ஆரம்பித்த வேலைத்திட்டங்களையே நல்லாட்சி அரசாங்கம் தற்போது திறந்து வைக்கிறது.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு தாரை வார்த்துக்கொண்டு வருகிறார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இன்னும் பல தேசிய சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தள விமான நிலையம், ஹில்டன் ஹோட்டல், ஹைட் ஹோட்டல், திருமலை எண்ணெய்க்குதம், காப்புறுதிக்கூட்டுத்தாபனம் என்பவற்றையும் விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம், மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உள்ளிட்ட வளங்களும் விற்பனை செய்யப்படவுள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமாகவிருந்தால் மேற்சொன்ன வளங்கள் அனைத்தும் விற்பனை செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வில்பத்து வன விவகாரத்திற்கு அமைச்சர் றிசாத்தே பொறுப்பு

## ரஞ்சன் தெரிவிப்பு

(கொழும்பு)

சுற்றுச் சூழலை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், வில்பத்து வனப் பகுதி சேதப்படுத்தப்பட்டமைக்கு, அமைச்சர் றிசாத் பதியுதீனே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

திவுலப்பிட்டிய பகுதிக்கு நேற்றுச் சென்றிருந்த வேளை, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதியமைச்சர் மேற்



கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கிடையில் மோதல்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ மாணவர்களுக்கிடையில் நேற்று முன்தினம் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரண்டு மாணவர்கள் காயமடைந்து பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

காயமடைந்த குறித்த மாணவர்கள் இருவரும் விஞ்ஞானபீடத்தில் கல்வி கற்பவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பாகவே குறித்த மோதல் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும், இது தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவு மற்றும் பேராதனை பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கனடா நாட்டு கிளையின் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் ரூபா நிதி உதவியுடன் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகள் குடும்பங்களில் பெற்றோர்களை இழந்த மற்றும் மாற்றுத் திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த சங்கானை கல்வி கோட்டத்திற்குட்பட்ட 12 பாடசாலைகளைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகளும், 4 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் தைப்பொங்கல் தினத்தன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பை உருவாக்க நல்லாட்சி தொடர வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

நல்லாட்சி அரசு நிலைத்து இருப்பதன் ஊடாகவே புதிய அரசியலமைப்பை உருவாக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் புதிய ஆட்சி வர வேண்டும் என்பதற்காக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இரண்டு கட்சிகளும் இணைந்திருக்கின்றன இந்த நிலை தொடர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் நல்லாட்சி தொடர வேண்டும் எனவும் தமிழர்களுக்கான நீதி கிடைக்கும் வகையில், அதற்கான ஒத்துழைப்பை வழங்க கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது எனவும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி மோசடி அறிக்கையை ஆராய்கிறது கையூட்டல் ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி முறி மோசடி விவகாரத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு, கையூட்டல் விசாரணை ஆணைக்குழு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை பரிசீலித்து வருகின்றது.

கடந்த 10ஆம் திகதி முறி மோசடி குறித்த ஜனாதிபதியின் அறிக்கை கையூட்டல் விசாரணை ஆணைக்குழுவின் உயர் மட்ட குழுவிற்கு கையளிக்கப்பட்டது.

இந்த பரிசீலனைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

# சு.க.தொழிற்சங்க ஒன்றுகூடலில் ஜனாதிபதி







(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்க ஒன்றுகூடல் இலங்கை மன்றத்தில் நடைபெற்றதுடன் அதன் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர தொழில் சங்கத்தின் பொதுச் செயலாளர் லெஸ்லி தெய்வேந்திரவினால் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் வரவேற்கப்பட்டதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா விசேட உரையாற்றினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தற்போதைய அரசாங்கத்தில் பங்கு வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தெரிவித்தார்.

தொழிலாளர்களுக்கு வழங்கப்படாதிருந்த பல்வேறு வரப்பிரசாதங்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் முன்னொருபோதும் இல்லாத வகையில் விரிவாக சேவையாற்றி வருவதாக தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர ஆகியோரும் இதன் போது கருத்து தெரிவித்தனர்.

மேலும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் அற்ற அரச நிறுவனக் கட்டமைப்பினையும் தூய்மையான அரசியல் இயக்கத்தினையும் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் செயற் பாட்டிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்கள் என்றும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# இன,மத முரண்பாடுகளைக் குறைப்பதற்காக 25மாவட்ட நல்லிணக்க குழுக்கள் ஒன்றுகூடல்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற வகையில் இன, மத முரண்பாடுகளை மாவட்ட மட்டத்தில் குறைப்பதற்காக மாவட்ட நல்லிணக்க குழுக்களை ஸ்தாபித்தார். இது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

25 மாவட்ட நல்லிணக்க குழுக்களிலிருந்து 200 இற்கும் மேற்பட்ட பன்மத சமயத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்களின் பிரதிநிதிகள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர்கள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடி நல்லிணக்கத்திற்கான உபாயங்கள், இடையீடுகள் பற்றியும் நடுவுநிலை வகித்தல், பேச்சுவார்த்தை மற்றும் முரண்பாடுகளை தீர்ப்பதன் மூலம் இன, மத பதற்றங்களையும் பிரச்சினைகளையும் எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும் பற்றி கலந்துரையாடினர்.

இந்நிகழ்ச்சியானது தேசிய நல்லிணக்கம் தொடர்பான பிரகடனத்தையும் நல்லிணக்கம் தொடர்பான 7 நற்பண்புகளை வாசித்தலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டுக்கான நல்லிணக்கத்திற்கான முன்னெடுப்புகளை அடையாளம் காணல், பிரச்சினைகள் மற்றும் சவால்களை பரிசீலனை செய்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் போன்றவை சம்பந்தமாக 25 மாவட்டங்களை பிரதிநிதிப்படுத்திய 250 அங்கத்தவர்கள் கலந்துரையாடினர்.

ஒழுங்காக கூடுதல், பதற்றங்களை தடுத்தல், இன, மத முரண்பாடுகள் தொடர்பான தரவுகளைப் பேணுதல், மத தலங்கள் தாக்கப்படுவதை தடுத்தல், வெறுப்புணர்வுகளை தூண்டக்கூடிய பேச்சுக்களை தடுத்தல், சமூகவலைத்தளங்களினூடாக பரவுகின்ற எதிர்மறையான பிரச்சினைகளை தூண்டக்கூடிய செய்திகள் பரவாமல் தடுத்தல், சமாதான ஊடகவியலை ஊக்குவித்தல், நல்லிணக்கத்திற்கான நற்பண்புகளை மற்றும் அறநெறிகளை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஞாயிறுதின அறநெறிப் பாடசாலைகள், இளைஞர்கள் மத்தியில் பரப்புதல் போன்ற விடயங்கள் பற்றி இக்கருத்தரங்கில் கலந்துரையாடப்பட்டது என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இடைவெளிகளை இனங்காணுவதோடு நல்லிணக்க குழுக்களுக்கு தேவையான வன்முறையற்ற முறையில் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைகள் பற்றிய திறன்களையும் பயிற்சிகளையும் வழங்குவது இந்நிகழ்வின் மற்றுமொரு நோக்கமாகும்.

நல்லிணக்க குழுக்கள் ஒருமைப்பாடு, நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரைஸ் கட்சசன், கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினன், நல்லிணக்க பொறிமுறையின் செயலாளர் நாயகம் மனோதித்தவெல, ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி உனாமக்கோலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவிலிபியூஸ் சொக்குபோவா, பிரித்தானிய உயர்ஸ்தானிக அலுவலகத்தின் முதற் செயலாளர் போல் கிறீன், GIZ நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கிறிஸ்டொப் பயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்படுத்தலுடனான "இலங்கையில் நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்தல்" நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது. (இ)





யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் சிலை திறப்பு விழாவும் கல்லூரி அதிபர் வி.ரி.ஜெயந்தன் தலைமையில் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 9ஏ பெறுபேற்றைப் பெற்ற மாணவியை பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

(படங்கள்:-சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சியல்ல மோசடி நிறைந்த ஆட்சி

# மைத்திரி -ரணில் தரப்பில் கள்வர்களே நிரம்பியுள்ளனர்

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் யாழில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் அதிக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியில் இருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு ஒன்றையும் செய்யவில்லை. மாறாக ஊழல் நிறைந்த மோசடியான வினைத்திறனற்ற சபைகளாக தான் இவை இருந்தன எனச் சாடியுள்ள ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தற்போது ஆட்சியில் உள்ள மைத்திரி-ரணில் ஆகிய இரண்டு கும்பல்களிலும் கள்வர்களே நிரம்பியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள ஜே.வி.பியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுகின்றோம். நாட்டில் உள்ள கட்சிகளில் இலஞ்ச ஊழல் அற்ற கட்சியாக ஜே.வி.பி. மட்டும் தான் உள்ளது. மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சியாகவும் எமது கட்சி தான் உள்ளது.

எமது பாராளுமன்ற உறுப்பினர்களே மக்களுடைய பிரச்சினை களை பாராளுமன்றத்தில் பேசுகின்றார்கள். அதனால் தான் வடக்கு மக்களுடைய பிரச்சினைகளை அரசின் காதுகளுக்கு கொண்டு செல்ல வடக்கு தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

தற்போதுள்ள சூழ்நிலையில் நாடு பாதகமான நிலைக்கு சென்று கொண்டுள்ளது. தற்போது இருக்கின்ற கூட்டாட்சி என்பது மோசடி நிறைந்த ஆட்சியாக உள்ளது. கூட்டில் இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் ஆகிய இரண்டு கும்பல்களிலும் இருக்கின்றவர்கள் முழு கள்வர்களாக தான் உள்ளார்கள். இந்த நிலையில் எமது கட்சி மக்களுடைய விடுதலைக்காக, விடிவுக்காக போராடி வருகின்றது. வடக்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தான் வைத்திருந்தது.

ஆனால் அவற்றை பயன்படுத்தி மக்களுக்கு எதுவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு செய்யவில்லை. தற்போது தேர்தலை முன்னிறுத்தி வீதிகள் அமைக்கின்றார்கள். மின்குமிழ்கள் போடுகின்றார்கள். இவை தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மக்களுடைய நலன்களுக்காக வடக்கில் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ள எம்மை சிங்கள கட்சி என்று கூட்டமைப்பினர் கூறுகின்றனர். ஆனால் பாராளுமன்றத்தில் மக்களுக்கு பாதகமான தீர்மானங்கள் வரவு-செலவு திட்டம் நிறைவேற்றப்படும் போது அவற்றுக்கு நாங்கள் எதிர்த்தோம் ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. இதே போன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் காவடி தூக்குகின்றனர். இவ்வாறு அரசுடன் ஒட்டியிருப்பவர்கள் தான் எம்மை சிங்கள கட்சிகள் என்று கூறுகின்றார்கள். இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது மோசடிகளை மறைப்பதற்கு நாடு துண்டாடப்பட போகின்றது என இனவாதத்தை தூண்டும் வகையில் தெற்கில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைப்பதில் தோல்வி கண்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர், நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கு தொடர்பில்லாத புதிய அரசியலமைப்பு பற்றி பேச ஆரம்பித்துள்ளனர்.

நாம் வடக்கு மக்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி அவர்களுடைய பிரச்சினைகளை தெற்கிற்கு கொண்டு சென்று தீர்ப்பதற்குரிய வழிகளை ஏற்படுத்துவதன் முதல் கட்டமாக வடக்கில் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

ஆகவே வடக்கு மக்களுடைய குரலாக ஜே.வி.பி ஒலிப்பதற்கு மக்கள் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். என தெரிவித்தார். (இ-4)

# முஸ்லிம் கட்சிகள் இடையே மோதல் வேட்பாளர் உள்ளிட்ட மூவர் படுகாயம்

(ஏறாவூர்)

வாழைச்சேனை - செம்மண்ணோடை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரு கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதலில், உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் உட்பட மூவர் தாக்கப்பட்ட நிலையில், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது. 'குறித்த பிரதேசத்தில் வடிகான்களை வாழைச்சேனை பிரதேசசபை வாகனத்தை கொண்டு சுத்திகரிப்பு செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்த போது, அந்த இடத்திற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் ஐக்கிய தேசிய முன்ணியில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் செம்மண்ணோடை வட்டார தலைவர் ஆகிய இருவரும் சென்றனர்.

இதனையடுத்து, எமது கட்சியின் ஊடாக, பிரதேச சபையில் இருந்து வாகனத்தை கொண்டு வந்து, நாங்கள் சுத்திகரிப்பு வேலை செய்கின்றோம். நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செம்மண்ணோடை வட்டார வேட்பாளரின் ஆதரவாளர்கள் கேட்டதில் இரு தரப்பினருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

இந்த வாக்குவாதம் முற்றியதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர் சீமெந்து கல்லால் தலையில் தாக்கியதாகவும், அதனை தடுக்க முற்பட்ட வேட்பாளரும் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும் இதனால் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறையாக பதிவாகியுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## கற்பகதரு சங்கங்களுக்கான சுழற்சி முறைக் கடன் நாளை

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபையினரால் கற்பகதரு சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான தென்னைசார் கைத்தொழில் மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான சுழற்சி முறைக் கடன் வழங்கும் நிகழ்வானது நாளை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கும் உடுவில் பிரதேச செயலகத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் கரவெட்டி கமநலசேவை நிலையத்தில் பிற்பகல் 3 மணிக்கும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் 10 கற்பகதரு சங்கங்களின் 100 அங்கத்தவர்களுக்கு 24 இலட்சத்து 5 ஆயிரத்து 500 இனை சுழற்சி முறைக்கடனாக வழங்கவுள்ளோம் என தென்னைப் பயிர்ச் செய்கை சபை பிராந்தியமுகாமையாளர்தேவைகுந்தன் அறிவித்துள்ளார்.(இ-7)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 20ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி வசந்தமண்டப பூசை இடம் பெற்று விநாயகப் பெருமான் திருவீதி உலா வருவார். (இ-8)

## நிராகரிக்கப்பட்ட 14 மனுக்களும் 19-ம் திகதி விசாரணைக்கு வரும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான 14 மனுக்களையும் எதிர்வரும் 19ஆம்திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது. (இ-7)

## தரம் -6 மாணவர்கள் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வரணி மத்திய கல்லூரியின் தரம் 6 மாணவர்களுக்கான வர வேற்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 8மணியளவில் பிரதான மண்டபத்தில் அதிபர் ப. செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் மக்கள் வங்கி பதவிநிலை உத்தியோகத்தர் திருமதி யாழினி காண்டீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

## இராஜயோக நிலைய திறப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை மாலை 3மணியளவில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், கௌரவ விருந்தினராக யாழ். வலயக்கல்வி பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட செயலக சமூக சேவைகள் திணைக்கள இணைப்பாளர் கிரிசாந்தி விக்னேஸ்வரன் மற்றும் புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் யுகராஜா ஜெலீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# கடற்படை புலனாய்வு பிரிவின் மற்றொரு உறுப்பினர் கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரின் விவகாரம் தொடர்பில் கடற்படையின் புலனாய்வு பிரிவின் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவின் கூட்டு கொள்ளை தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட 11 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் திருகோணமலை கடற்படை முகாமின் கன்சைட் எனும் நிலத்தடி சித்திரவதை கூடத்திற்கு அருகில் கறுப்பு நிற பொலித்தீனால் சுற்றப்பட்ட சடலங்கள் என சந்தேகிக்கப்படுவனவற்றைக் வாகனமொன்றில் ஏற்றிச் சென்றதை அவதானித்ததாக இவ்விவகாரத்தின் பிரதான சாட்சியாளர் லெட்டினன் கொமாண்டர் சீ.கே. வெல கெதர குற்றப்புலனாய்வு பிரிவுக்கு வாக்குமூலம் அளித்திருந்தார். இந்நிலையில் சடலங்கள் என சந்தேகிக்கப்படும் கறுப்பு பொலித்தீனால் சுற்றப்பட்டவற்றைக் வாகனத்தில் ஏற்றியதாகக் கூறப்படும் காமினி எனப்படும் கடற்படை சிப்பாயே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவின் குறித்த உயர் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

குற்றப்புலனாய்வு பிரிவின் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவிசெனவிரத்ன, பிரதி பொலிஸ்மா அதிபர் சுதத் நாகமுல்ல, பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர ஆகியோரின் மேற்பார்வையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் திசேராவின் வழிநடத்தலில் கூட்டுக்கொள்ளை தொடர்பிலான விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரி பரிசோதகர் நிசாந்த சில்வா தலைமையிலான பொலிஸ் குழுவினரே சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன், டிலான், சாஜித் ஆகிய 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் வெவ்வேறு தினங்களில் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் கொழும்பு சைத்திய வீதியில் உள்ள கடற்படை வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் திருமலை கடற்படை முகாமின் கன்சைட் சித்திரவதை கூடத்தில் அடைத்து வைக்கப்பட்டு கப்பம் கோரப்பட்டமை விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

அதன்படி விசாரணை செய்து வரும் குற்றப்புலனாய்வு பிரிவினர் ஏற்கனவே கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட 7 பேரை கைது செய்தனர். அவர்கள் கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே தற்போது 8 ஆவது சந்தேக நபராக மற்றொருவர் கைதாகியுள்ளார்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:20 செவ் 2 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/8153 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 23 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8188 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்A/L/தனியர்தொழில்<br>தொ.இ: B/8154 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8191 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/8155 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>தகைமை/தொழில்:BSc, ACCA, MBA/தனியார் தொழில்<br>தொ.இ: G/8196 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/8156 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/8198 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1307

Search for people, places and things Nagendram Home

### ஐங்கரன்

சிக்கன் இல்லாமகூட வாழலாம்



ஆனால் சிக்கல் இல்லை என்றால் வாழ்க்கையே இல்லை

### கணேசன்

கேவலம் தோல்வி நம்மள ஜெயிக்க முடியும் போது



நம்ம தோல்வியை நாம ஜெயிக்க முடியாதா என்ன

### ஆறுமுகன்

கடவுளே 2017 யும் ஒண்டிக்கட்டையாவே ஓட்டிட்டேன்



2018 ஆவது ஒரு செம கட்டையா அனுப்பி விடுப்பா... என் தெய்வமே...

### ஆதவன்

குழந்தைகள் மட்டுமே நேற்றைய பிரச்சினைக்கு



இன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை...

### அருணன்

இனி ஜென்மத்துக்கும் திரும்பப் போகவே கூடாதுன்னு நினைத்தாலும் ரோசம் கெட்டு போகும் இடம் ஒன்று மாமியார் வீடு இன்னொன்று Face Book




### அருள்

டெய்லி நீச்சல் அடிச்சா ஒல்லியா ஆகலாம்னு சொல்லுறாங்க



அப்புறம் ஏன் திமிங்கிலம் குண்டா இருக்கு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசோடு ஒட்டி வால்பிடித்துக்கொண்டு அதிகாரப் பகிர்வைப் பெறமுடியாது

## தமிழர் சமூக ஜனநாயக கட்சி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சமஷ்டி, சுய நிர்ணயம், ஐக்கிய நாடுகள் சபையில் தமிழினப் படுகொலைக்கு நீதி என்ற வாக்குறுதிகளை வழங்கி மக்கள் ஆணையை பெற்று பதவிக்கு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இது வரை எதையும் பெற்றுக் கொடுக்கவில்லை என தெரிவித்துள்ள தமிழர் சமூக ஜனநாயக கட்சி, அதிகார பகிர்வை பெற வேண்டும் என்றால் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மாறாக அரசோடு ஒட்டியிருந்து அரசுக்கு வால் பிடித்துக் கொண்டு பதவி சுக போகங்களை அனுபவிப்பதால் கிடைத்து விடாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலில் மெழுகுவர்த்தி சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழர் ஜனநாயக கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் பத்திரிகையாளர் சந்திப்பும் நேற்றுக்காலை யாழ். வை. எம்.சி. ஏ. மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது மேற்படி கட்சியின் தலைவர் சுகு மற்றும் வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜபெருமாள் ஆகியோர் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இதில் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கருத்து தெரிவிக்கையில்,

பொதுமக்களின் அடிப்படை நலன்களுக்கு சேவையாற்றவும், ஊழல் மோசடி



கள் இல்லாத உள்ளூராட்சி சபைகளை உருவாக்கவும், ஊர்மனைகள் நோக்கி பொருளாதார முன்னேற்றங்கள் பரவவும், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட பராமரிக்கப்படவும், எமது தேசமெங்கும் சுத்தமும் சுகாதாரமும் பசுமையும் நிலவ வேண்டும் ஆகிய குறிக்கோள்களை பிரதானமாக முன்னிறுத்தியே தேர்தலில் போட்டியிடுகின்றோம். மேலும்தமிழர் உரிமை போன்ற அரசியல் பிரச்சினைகளையும் முன்னிறுத்தியுள்ளோம்.

இந்தத் தேர்தலுக்கும் புதிய அரசியலமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத நிலையில், தாங்கள் இந்த தேர்தலில் தோற்றுவிட்டால் அரசியல் தீர்வு வராது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மக்களை அச்சுறுத்துவது என்பது ஆபத்தான ஒன்றாகும். முன்னைய தேர்தல் காலங்களில் எல்லாவற்றையும் பெற்றுத் தருவோம் எனக் கூறி மக்கள் ஆணையை பெற்ற கூட்டமைப்பினர் இது வரை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

அதிகாரப் பகிர்வு பற்றி பேசுகின்ற கூட்டமைப்பினர் தம்மால் கொண்டுவரப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சருடைய அதிகாரங்களை இல்லாது செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு அதிகார பகிர்வுக்கு எதிராக செயற்படுகின்ற கூட்ட மைப்பினர் எவ்வாறு மக்க ளுக்கு அதிகாரங்களை பெற்று தரப்போகின்றார்கள்? அதிகா ரப் பகிர்வு வேண்டும் என்றால் போராட வேண்டும், நாடாளுமன்றில் போராட வேண்டும், ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மக்கள் பிரதிநிதிகள் போராட வேண்டும்.

ஆனால் தங்களுடைய பதவியில் பாதுகாப்பாக இருந்து கொண்டு அரசுக்கு வாலும் பிடித்து கொண்டு அதிகார பகிர்வு என்று பேசினால் அது கிடைத்து விட போவதி ல்லை. 7 கோடி ரூபா வாகனம், வசதி மிக்க வீடுகள் என சலுகைகளை தான் இந்த கூட்டமைப்பினர் பெற்றுக்கொள்வதில் குறியாக இருக்கின்றனரே தவிர மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் ஏமாற்று வேலைகளைச் செய்கின்றனர். கடந்த காலங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 30இற்கு மேற்பட்ட சபைகளை கைப்பற்றியிருந்தது.

ஆனால்இவற்றை வைத்து கொண்டு தமிழ் மக்களுக்கு இவர்கள் என்ன செய்தார்கள் என்று அனைவரும் சிந்திக்க வேண்டும். ஊழல்மோசடிகள் மிக்க செயற்றிறனற்ற சபைகளாக தான் அவை இருந்தன. தாங்கள் குளிரூட்டிய அறையில் இருந்து கொண்டு மக்களிடம் தேசியம் கதைப் பதில் தான் இவர்கள் குறியாக இருக்கின்றனர். அற்ப சொற்ப அதிகாரங்களாவது எங்களி டம் இப்போது இருக்கின்றது என்றால் அதற்கு போராட்ட இயக்கங்களே காரணம்.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியது போல நல்லவர்களைத் தேர்வு செய்யுங்கள். இந்தத் தேர்தல் மாற்றத்துக்கான தேர்தலாக இருக்கட்டும். மாற்றம் நல்லதாக இருக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# பகிடிவதைகளுக்கு இனி இடமில்லை

## -தென்கிழக்கு பல்கலை உபவேந்தர்-

(கொழும்பு)

"தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில், இனி எவ்விதமான பகிடிவதைகளுக்கும் இடமளிக்கப்படமாட்டது" என, தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜீம் தெரிவித்தார்.

2016/2017ஆம் கல்வி யாண்டுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப் பீடத்துக்கு அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு, பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சிரேஷ்ட மாணவர்களில் சிலர் கனிஷ்ட மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்த முனைகின்றனர். அவ்விடயத்தில் கனிஷ்ட மாணவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.

"பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படுகின்ற பகிடிவதையால் கல்வி சீரழிந்து செல்வதோடு, உயர் கல்விக்கும் அரசாங்கத்துக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன."ஒரு பட்டதாரியை உருவாக்குவதற்கு அரசாங்கம் மில்லியன் கணக்கில் செலவிடுகிறது. மக்களின் வரிப் பணத்தில் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள், கல்வி என்ற இலக்கை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். பெற்றோர்களின் ஆசையை நிறைவேற்ற 4 வருடத்துக்குப் பின்னர் சிறந்த ஒரு. பட்டதாரியாக வெளியேறவேண்டும் அத்துடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவதோடு நாட்டின் இறைமையையும் பாதுகாக்க வேண்டும்.

"அரசாங்கம், எமது கல்விக்கு கூடுதலான பணத்தை செலவு செய்து வருகின்றது. அதனை நாம் துஷ்பிர யோகம் செய்யக்கூடாது. இதனை சரியான முறையில் பயன்படுத்தி எமக்குத் தேவையான கல்வியைப் பெற வேண்டும்.

"நாட்டில், எந்தப் பல்கலைக்கழத்திலும் இல்லாத இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப் பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் மட்டுமே அமைந்துள்ளது. இது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். பட்டதாரியாக வெளியேறுகின்ற வர்கள் சமூகத்தலைவர்களாக மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# என்னைக் குறை கூறி நல்லாட்சி நகர்கிறது

(கொழும்பு)

தன்னைக் குறைகூறி அரசாங்கம் செய்யும் குறைகள் மறைக்கப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

மாலபே பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தற்போது ஆட்சி செய்யும் நல்லாட்சி அரசாங்கத்தைப் போல பழிவாங்கும் அரசாங்கம் ஒன்றை தான் இது வரை பார்த்ததில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.



மேலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறுகளை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் விடக் கூடாது என அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், பழைய தவறுகளை திருத்திக் கொண்டு புதுமையான ஒரு அரசியல் கலாசாரத்தை உருவாக்க அனைவரும்இணைய வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். (இ-7)

# இளைஞர்கள் கடத்தல் விவகாரம்; வேட்பாளர் இருவருக்கு தொடர்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு - கல்லடியில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர்களில் இருவர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் என, காத்தான் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில், சுயேட்சையாக போட்டியிடும் கஜமோகன் மற்றும் கவிதாஸ் ஆகியோர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இளைஞர்களை பிறிதொரு இடத்துக்கு கடத்திச் சென்று கொண்டிருந்த வேளையில், மட்டக்களப்பு - மாமாங்கம் பார் வீதியில் வைத்து நேற்று முன்தினம் காலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கடத்தப்பட்ட இரு இளைஞர்களும் மீட்கப்பட்டதுடன், கடத்தலில் ஈடுபட்ட மேற்படி இரண்டு வேட்பாளர்கள் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட இரண்டு கார்கள் மற்றும் இளைஞர்களை தாக்கிய சிலாகை மற்றும் தடி என்பவைகளையும் கைப்பற்றியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை என்பனவற்றில் சித்தியடைந்த மாணவர்களையும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மயிலங்காடு சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.


(படங்கள்: சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆத்திரம் அழிவைத் தரும்



அது ஒரு கிராமம். அது காட்டை ஒட்டிய வனப்பகுதி. பிராணிகளிடம் பிரியமுள்ள ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் காட்டிற்கு வேட்டைக்கு போனான். அழகிய புள்ளி மான் ஒன்றை பிடித்து வந்தான்.

மானின் அழகில் மயங்கிய அவன் மாமிசத்திற்காக கொல்லவில்லை. வீட்டில் வளர்த்து வந்தான். ஒருநாள் மான் மாயமாய் மறைந்து விட்டது. ஆனால் அது ஓடவில்லை. காணாமல் போய்விட்டது.

அவனுக்கோ ஆத்திரம். இந்த மானை யார் பிடித்து போயிருப்பார்கள். அவன் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் கோபமாக உருவெடுத்தது.

உடனே கடவுளைத் துதித்தான். கடவுளே எனக்கு தரிசனம் தா...! என்று

கடவுளும் வந்தார்...!

பக்தா என்னை அழைத்த தின் காரணம் என்ன? கடவுள் கேட்டார்.

அறிவாளி பக்தன் என்ன கேட்கணும். நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ அபகரித்துச்சென்று விட்டார்கள். அந்த மான் எனக்கு வேண்டும் என்று தானே கேட்டிருக்க வேண்டும். ஆனால் கேட்கவில்லை. கோபம் கண்ணை மறைத்தது.

தெய்வமே நான் ஆசையாய் ஒரு மான் வளர்த்தேன். அந்த மானை காணவில்லை. அந்த மானை திருடியவன் யாராக இருப்பினும், அவன் முன்னே வரவேண்டும். அவனை என் கோபம் தீர அடிக்க வேண்டும்.

இதுதான் பக்தன் கேட்ட வரம்.

வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தரும் கடவுள் பக்தனின் கோரிக்கைக்கு தயங்கினார்.

பக்தா... உன் மானை திருப்பித் தருகிறேன். அது காணாமல் போனதற்கு காரணமானவர் யார்? என்று கேட்காதே.

இல்லை... என் மனம் எவ்வளவு கலங்கி இருக்கிறது என்பது எனக்குத்தான் தெரியும். அதனால் அவனை பழி வாங்காமல் விடமாட்டேன், என்று பிடிவாதமாக கேட்டான்.

சரி... நீ கேட்கும் வரத்தை தருகிறேன். பின்னால் என் மீது வருத்தப்படக்கூடாது.

வருத்தம் வராது.

சரி... தந்தேன் வரம். உன் மானை திருடி சென்றவர் யாரோ, அவர் உன் பின்னால் நிற்கிறார். தண்டித்துக்கொள். வரத்தை தந்த கடவுள் மறைந்து விட்டார்.

பக்தன் திரும்பிப்பார்த்தான். அங்கே நின்றது சிங்கம்.

பழிவாங்கும் கோபம் மறைந்தது. பயம் பிடித்துக் கொண்டது. கை,கால் எல்லாம் நடுங்கத் தொடங்கியது. கண் மண் தெரியாமல் ஓட தொடங்கினான். கடவுளே என்னை காப்பாத்து.

கடவுள் சிரித்தார். ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டுத்தானே. அவன் கதை முடிந்தது. இங்கே அவன் அறிவு வேலை செய்யவில்லை. ஆத்திரம் கடைசியில் அழிவைத் தந்தது.

சரி... எனக்குத் தெரிந்த வரையில் நீங்க கோபக்காரர் இல்லை. சரிதானே.

## 01.2018 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1877-பாப்பாண்டவர் பதினோராம் கிரெகரி தனது ஆட்சியை ரோமுக்கு மாற்றினார்.

❖1524- இத்தாலிய நாடுகாண்பயணி ஜியோவன்னி டா வெரசானோ சீனாவுக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார்.

❖1595- பிரான்சின் நான்காம் ஹென்றி ஸ்பெயின் மீது போரை அறிவித்தான்.

❖1648- இங்கிலாந்தின் லோங் நாடாளுமன்றம் முதலாம் சார்ல்சுடனான தொடர்புகளை அறுத்தது. இதன்மூலம் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர் இரண்டாம் கட்டத்தை அடைந்தது.

❖1773- கப்டன் ஜேம்ஸ் குக் அண்டார்க்டிக் வட்டத்தை அடைந்த முதல் ஐரோப்பியன் ஆனான்.

❖1899- பசுபிக் பெருங்கடல் பகுதியில் வேக் தீவை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது.

❖1917- கன்னித் தீவுகளுக்காக ஐக்கிய அமெரிக்கா $25 மில்லியனை டென்மார்க்கிற்குக் கொடுத்தது.

❖1928- லியோன் ட்ரொட்ஸ்கி மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

❖1945- இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் போலந்தின் வார்சா நகரைக் கைப்பற்றினர்.

❖1945- சோவியத் படைகள் நெருங்கியதை அடுத்து அவுஷ்விட்ஸ் வதை முகாமில் இருந்து நாசிகள் வெளியேற ஆரம்பித்தனர்.

❖1946- ஐ.நா பாதுகாப்பு அவை தனது முதலாவது கூட்டத்தை நடத்தியது.

❖1973- பேர்டினனண்ட் மார்க்கோஸ் பிலிப்பைன்சின் நிரந்தர ஜனாதிபதி ஆனார்.

❖1991- வளைகுடாப் போர் ஆரம்பித்தது.

❖1998- ஐக்கிய அமெரிக்கத் தலைவர் பில் கிளின்டன் தன்னைப் பாலியல் வதைக்கு உட்படுத்தியதாக போலா ஜோன்ஸ் குற்றஞ்சாட்டினார்.

**பிறப்புகள்**

❖1504- ஐந்தாம் பயஸ் (திருத்தந்தை) (இ. 1572)

❖1706- பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், எழுத்தாளர், அரசியல் வாதி (இ. 1790)

❖1905- தத்தாரய ராமச்சந்திர கப்ரேக்கர், இந்தியக் கணிதவியலாளர் (இ. 1986)

❖1917- ம. கோ. இராமச்சந்திரன், தமிழக நடிகர், இயக்குநர், தமிழ்நாட்டின் 5வது முதலமைச்சர் (இ. 1987)

❖1922- தோன்சே ஆனந்த் பை, இந்திய அரசியல்வாதி, வங்கியாளர் (இ. 1981)

❖1936- அருணாசலம் தங்கத்துரை, இலங்கை அரசியல்வாதி, வழக்கறிஞர் (இ. 1997)

❖1945- ஜாவேத் அக்தர், இந்தியக் கவிஞர், இசையமைப்பாளர்

❖1962- ஜிம் கேரி, கனேடிய-அமெரிக்க நடிகர்

❖1964- மிச்செல் ஒபாமா, அமெரிக்க சட்டவறிஞர், செயற்பாட்டாளர், அமெரிக்காவின் 46ஆவது முதல் பெண்மணி

❖1977- என். சொக்கன், தமிழக எழுத்தாளர்

❖1985- சிமோன் சைமன்சு, இடச்சுப் பாடகர்

**இறப்புகள்**

❖1940- செ. இராசநாயகம், இலங்கைத் தமிழ் வரலாற்றாளர், எழுத்தாளர் (பி. 1870)

❖1961- பத்திரிசு லுமும்பா, கொங்கோ சனநாயகக் குடியரசின் 1-வது பிரதமர் (பி. 1925)

❖1997- கிளைட் டோம்பா, புளூட்டோவைக் கண்டுபிடித்த அமெரிக்க வானியலாளர் (பி. 1906)

❖2005- மு. மு. இஸ்மாயில், தமிழக நீதியரசர், தமிழறிஞர், எழுத்தாளர் (பி. 1921)

❖2007- ஆர்ட் புச்வால்ட், அமெரிக்க ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி. 1925)

❖2010- எரிக் செகல், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1937)

❖2012- எம். எஸ். பொன்னுத்தாய், தமிழகப் பெண் நாதஸ்வரக் கலைஞர்

❖2014- சுனந்தா புஷ்கர், இந்திய-கனேடியத் தொழிலதிபர் (பி. 1962)

❖2014- சுசித்ரா சென், வங்காளத் திரைப்பட நடிகை (பி. 1931)

❖2016- கரு. அழ. குணசேகரன், தமிழக எழுத்தாளர் (பி. 1955)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 240 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 250 | 200 | 140 |
| தக்காளி | 60 | 100 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 35 |
| கோவா | 50 | 100 | 80 | 50 |
| கரட் | 120 | 180 | 200 | 70 |
| பூசணி | 80 | 60 | 80 | 80 |
| புடோல் | 80 | — | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 140 | 150 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 220 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 180 | 120 | 140 |
| லீக்ஸ் | 150 | — | 240 | 220 |
| பீற்றூட் | 100 | 150 | 100 | 100 |
| கறிமிளகாய் | 160 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | 1200 | — | — |
| போஞ்சி | 160 | 200 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | — | 80 | 80 |
| கீரை -1பிடி | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 50 | 100 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 75 | 95 |
| இராசவள்ளி | 160 | 150 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 280 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 50 | 60 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தைப்பொங்கலுக்குள் நிரந்தரத் தீர்வு கிடைக்குமாம்

## எதிர்க்கட்சித் தலைவர் எதிர்பார்ப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்குவந்துமூன்று ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை, அடுத்த தைப்பொங்கலுக்குள் எமக்கான நிரந்தர அரசியல் தீர்வுகிடைக்க வேண்டும் என ஜனாதிபதி, பிரதமருக்கு வலியுறுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய தைப்பொங்கல் பண்டிகை நிகழ்வு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்களைப் பொறுத்தவரையில் தைப் பொங்கல் மிகவும் முக்கிய நிகழ்வாகும். தமிழர் அனைவரும் புனிதமாக கொண்டாட வேண்டிய ஒரு நிகழ்வு. எமது மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு அறுவடைக்கான காலத்தில் இயற்கை எமக்கு கொடுத்த ஒத்துழைப்புக்காக இயற்கைக்கும்சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாககொண்டாடிவருகின்றனர். எமது மக்கள் ஆழ்ந்த கலாசார பாரம்பரியத்திற்கு உரித்தானவர்கள். தமது கலாசாரத்தை பாரம்பரியத்தை முன்னேற்றி இந்த நாட்டில் நீண்ட காலம்வாழ்ந்து வருகின்றனர். ஆனால் எமது மக்கள் எமது நாட்டில் இன்றும் சமமான ஒரு அந்தஸ்தை பெற்று வாழக் கூடிய சூழல் உருவாகவில்லை. நான் இங்கு வரமுன்னர் .லக்ஷ்மர் கதிர்காமர் நிறுவனத்தில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தேன். இந்தியாவின் முக்கிய அமைச்சர்களின் ஒருவரான ரவி சங்கர் பிரசாத் வந்திருந்தார். அவர் சில முக்கிய காரணிகளை சுட்டிக் காட்டினார். அரசியல் சாசன ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் இந் தியா ஏற்படுத்தியுள்ள வளர்ச்சி பற்றிக் கூறினார். இந்தியாவும் இலங்கையை போலவே சமாந்தர காலங்களில் சுதந்திரம் பெற்றது. ஆனால் கடந்த 70 ஆண்டுகளில் அரசியல் சாசன ரீதியாக, ஜனநாயக ரீதியாக இந்தியா பாரிய முன்னேற்றங்களை கண்டுள்ளது.

அந்த நாட்டில் வெவ்வேறு மொழிகள், கலாசாரம், சமய மக்கள் வாழ்ந்து வந்தாலும் அனைவரும் அங்கீகரிக்கப் பட்டு சம அந்தஸ்துடன் சம பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால்இலங்கையில்அவ்வாறான ஒரு நிலைமை இன்னும் ஏற்படவில்லை. கல்வி, விஞ்ஞான, பொருளாதார ரீதியில் நாம் முன்னேற்றம் காணாதுள்ளோம். எமது முயற்சிகளை மக்களின் நன்மைக்காக பயன்படுத்தாது மக்கள் மத்தியில் வேற்றுமையை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துவது பாரிய சிக்கலாக மாறியுள்ளது. இந்த நிலைமை மாற வேண்டும். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த மூன்று ஆண்டுகளில் சில கருமங்கள் நடந்துள்ளன. அதை நாங்கள்மறுக்க வில்லை. ஆனால் இவை ஒரு முடிவுக்கு வரவேண்டும். அரசியல் சாசன ரீதியாக முடிவுக்கு வரவேண்டும். இந்த நாட்டில் மக்கள் சம பிரஜைகளாக சம உரிமைகளுடன் வாழ வேண்டியது மிகவும் அவசியமாகும். ஜனாதிபதியும் பிரதமரும் இந்த கருமங்களை முன்னெடுக்கவிரும்புகின்றனர். அதனை நிறைவேற்ற வேண்டும். அடுத்த ஆண்டு தைப்பொங்கல் விழாவின் போது நிலைமைகள்மாறியிருக்க வேண்டும். அதுவே தமிழ் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# சாதாரண தர மாணவியின் சடலம் வீட்டிலிருந்து மீட்பு!

(ஏறாவூர்)

ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவு கொம்மாதுறை பாரதியார் வீதியை அண்டியுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை மாணவியின் சடலத்தைத் தாங்கள் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியைச் சேர்ந்த கந்தலிங்கம் ரெஸ்மியா (வயது-15) என்ற க.பொ.த சாதாரண தரத்தில் கற்ற மாணவியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மாணவியின் மரணம் குறித்து ஏறாவூர் பொலிஸார் விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# காணாமல் போன தாய் கொழும்பில் கண்டுபிடிப்பு



(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைக்குடா பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் காணாமல் போயிருந்த 60 வயது தாய் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில்வைத்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமது தாய் காணாமல் போனது பற்றி தகவல் பரிமாறப்பட்டதையடுத்து, உடனடியாக அவர் கொழும்பிலுள்ள ஒரு வீட்டில் பராமரிக்கப் பட்டு வருவதாக அவ்வீட்டார் தகவல் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்தே தமது தாயை கண்டு பிடித்து அழைத்து வந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

புன்னைக்குடா வீதியை அண்டி வாழும் சுமத்திரா தங்கவேல்(வயது 60) என்ற 5 பிள்ளைகளின்தாய்காணாமல் போனது பற்றி அவரது பிள்ளைகள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம்முறைப்பாடு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# ஜனாதிபதி - பிரதமருக்கு இடையில் அதிகாரப் போராட்டம் வலுவடையும்

## வாசுதேவ நாணயக்கார ஆரூடம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்று வரும் நீண்டகால பனிப்போர் தேர்தல் பெறுபேறுகளுடன் வெடிக்க ஆரம்பிக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர்வாசுதேவ நாணயக்காரதெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்உரையாற்றுகையில், அரசாங்கத்துக்குள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் நீண்ட காலமாக அதிகார பனிப்போர் இடம்பெற்று வருகின்றது. பிரதமர், ஜனாதிபதியை முந்திக் கொண்டு அரசாங்கத்தின் பிரதான அதிகாரமுடையவராக செயற்பட முயற்சிக்கின்றார். அதேபோன்று ஜனாதிபதியும் பிரதமரை முந்திக் கொண்டு அரசாங்கத்தின் அதிகாரங்களை செயற்படுத்த முயற்சிக்கிறார். இதன் பிரகாரம் பிரதமர் பாராளு மன்றத்தினூடாக அரசாங்கத் தின் சில அதிகாரங்களை தனக்கு கீழ் கொண்டு வந்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் இடம்பெற்று வரும் இந்த பனிப்போரானது நீண்ட காலம் செல்வதற்கு முன்னர் வெடிக்க ஆரம்பிக்கும். இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது எமது கடமையாகும். இதன்மூலம் இந்த அரசாங்கத்தை வீழ்த்தும் போராட்டம் வெளிப்படும். உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் அரசாங்கத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் பாரியதொரு தோல்வி ஏற்படு வது உறுதியாகும். இதனால் நாட்டுக்குள் பாரிய அரசியல் குழப்பம் ஏற்படுவது யதார்த்தமாகும்.

மக்களின் ஆணையில்லாத அரசாங்கம் என்ற போராட்டத்தை மக்கள் நாடுபூராகவும் மேற்கொள்வதை தவிர்க்க முடியாமல்போகும். இதன் மூலம் இந்த அரசாங்கம் வீட்டுக்கு செல்லும் நிலை ஏற்படும். ஜனாதிபதி, பிரதம ருக்கு இடையில்இடம்பெறும்அதிகார போராட்டமும் இதற்கு வாய்ப்பாக இருக்கின்றது. இந்த அதிகார போராட்டத்தின் மற்றுமொரு அங்கமாகவே ஜனாதிபதி தனது பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதி. மன்றில் வினவியது.

ஜனாதிபதி தனக்கு 6 வருடங்கள் பதவியில் இருக்கலாமா என்றுதான் உயர் நீதி மன்றில் கேட்டிருந்தார். ஜனாதிபதிக்கு இதனை 6 வருடங்களாக்கும் தேவை இருந்தது. அதேபோன்று பிரதமருக்கு இதனை வருடத்துக்கு வரையறுக்க தேவையாக இருந்தது. ஏனெனில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்கள் என தீர்ப்பானால்பாராளுமன்ற தேர்தல் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதியின் காலம் 5 வருடங்கள் என தீர்ப்பானால் ஆரம்பமாக ஜனாதிபதி தேர்தலே நடத்தப்பட வேண்டும். இந்நிலையில் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தி ஜனாதிபதியை பிரச்சினைக்கு உட்படுத்த வேண்டிய தேவை பிரதமருக்கு இருந்தது. அதற்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற தேவை ஜனாதிபதிக்கு இருந்தது. இந்நிலையிலேயே உயர்நீதிமன்றம் தனது தீர்மானத்தில் 5 வருடங்களே பதவி வகிக்கலாம் என தெரிவித்துள்ளது. இதனால் அரசாங்கத்துக்குள் எதிர்வரும் தினங்களில் மேலும் அதிகாரப் போராட்டம் வலுவடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வெளிநாட்டவர்கள் நூதனத் திருட்டு

(கொழும்பு)

மாரவில - கடுனேரி எரி பொருள் நிரப்பு நிலையத்தில் 28,000 ரூபாவை மோசடியான முறையில் பெற்றுக் கொண்ட இரு வெளி நாட்டவர்கள் குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 14ஆம்திகதி மாலை குறித்த எரி பொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் ஐந்து கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை பற்றி அங்கிருந்த ஊழியரிடம் வினவியுள்ளார்.

இதனையடுத்து, மற்றைய சந்தேகநபரும் பல்வேறு கேள்விகளை சம்பந்தப்பட்ட ஊழியரிடம் கேட்டுள்ளார்.

பின்னர், இலங்கையிலுள்ள அதிக பெறுமதியுடைய் பணம் பற்றி விசாரித்த அவர்கள், அவற்றைப் பார்க்க வேண்டும் எனவும் குறித்த ஊழியரிடம் கூறியுள்ளனர்.

இதற்கமைய, அந்த ஊழியரிடம் இருந்த 28,000 ரூபா பணத்தை மிக நூதன மாக முறையில் அவர்கள் அபகரித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அங்கிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியிருந்ததோடு. நிதி மோசடியில் ஈடுபட்ட இருவரும் தப்பிக்க மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, சம்பந்தப்பட்ட இரு வெளிநாட்டவர்களும் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் சிலாபம் பகுதியிலுள்ள துணிக் கடை ஒன்றிலும் இதேபோன்று கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.(இ-7)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில். கூட்டு எதிரணி வேட்பாளர் கோத்தா



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவார் என பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கம் வாக்காளர்களை அச்சுறுத்தி வாக்குகளை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக பாராளுமன்றஉறுப்பினர்நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2018-12.02.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்






## புகழ் சேரும்!

பொதுப்பலன்

உங்களுக்கு இந்த தை மாதம் தனிச்சிறப்புமிக்க மாதமாக அமையப்போகிறது. செய்கின்ற முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திடீர் வரவு தித்திக்கும். எதிர்கொள்ளும் தொழிலில் வருமானம் குவியும். இதுவரை விலகியிருந்த உறவினர்கள் இனி விரும்பி வந்து இணைவார்கள். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். நல்ல வாய்ப்புகள் அடுத்தடுத்து வந்து சேரும் மாதமிது.

உத்தியோகம்

நீண்ட நாட்களாக விண்ணப்பித்து எந்த வேலையும் கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது நல்ல வேலை கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், மீண்டும் அதே வேலையில் இணைந்து பணியைத் தொடருவார்கள். தொழில் புரிபவர்களுக்கு நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடியே ஆதாயம் கிடைக்கும். வியாபார விரோதிகள் விலகுவர். பங்குச்சந்தையில் சுமாரான இலாபம் வந்து சேரும்.

உடல்நலம்

இராசிநாதன் சூரியன் ரோக ஸ்தானத்தில் கேதுவுடன் இருப்பதால், சிறுசிறு உடல் உபாதைகளைச் சந்திக்க நேரிடும். ஆனால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. மருத்துவச் செலவுகள் குறையும். உணவுப் பழக்க வழக்கத்தின் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள்.

குடும்பம்

குடும்ப ஒற்றுமை கூடும். கணவன்-மனைவி இருவரும் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். எதிர்பாராத வருமானம் வந்து மகிழ்ச்சிப்படுத்தும். பிள்ளைகளின் கல்யாணம் சம்பந்தமாக சீர்வரிசைப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். அர்த்தாஷ்டமச் சனி விலகியதால், சொந்த வீடு வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்யாணப் பேச்சுகள் கைகூடும். நகை வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. வாகன மாற்றம் செய்வது நல்லது.

பணவரவு

வங்கிச் சேமிப்பு உயரும். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவீர்கள். கூட்டாளிகளை விலக்கிவிட்டு தனித்து இயங்க முற்படுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் மூலம் பொருளாதார நிலை உயரும்.

குருவின் பார்வை

மாதத்தொடக்கத்திலேயே அர்த்தாஷ்டமச்சனி விலகி 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறது. ஜீவன ஸ்தானத்தில்இராசிநாதன்சூரியன்பிரகாசிக்கிறார். குருவின் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே நீண்ட நாளாக நடைபெறாமல் இருந்த சுபகாரியங்கள் இப்பொழுது நடைபெறும். எதிர்பார்த்த தொகை வந்து சேரும். ஸ்தம்பித்து நின்ற தொழில் நடைபெறும். பொன், பொருள் குவியும்.

விருச்சிக செவ்வாய்

ஜனவரி 20ஆம் திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால், உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். சொத்துகளால் ஆதாயம் உண்டு. புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சகோதர பாசம் கூடும்.

புதன் சஞ்சாரம்

ஜனவரி 22 ஆம் திகதி மகரத்திலும், பெப்ரவரி 8ஆம் திகதி கும்பத்திலும் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். தனலாபாதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணப் புழக்கம் அதிகரிக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். அருளாளர்களின் ஆலோசனை உங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும்.

சுக்ரன் சஞ்சாரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்ப இராசியில், சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த காலகட்டத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

வழிபாடு

பிரதோஷ நாளில் நந்தியை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடி வரும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றம், வாகன மாற்றம் ஏற்படக் கூடும். உடல் நலம் சீராகும். கணவன்-மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தடைப்பட்ட பதவி உயர்வு வந்து சேரும்.

கலைத்துறை

திறமை பளிச்சிடும் நேரம் இது. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இசைத்துறையில் உள்ளவர்கள் ரசிகர்களின் பேராதரவைப் பெறுவார்கள். ஒரு சிலருக்கு விருதுகள் கிடைக்கலாம். வெளிநாட்டு யோகமும் வாய்க்கலாம்.

அரசியல்

அருகில் இருப்பவர்களின் ஆதரவும், அமைச்சர்களின் ஆதரவும் கிடைக்கும். போட்டியிடும் பதவிகளில் வெற்றி வந்து சேரும். இரவு, பகல் பாராமல் உழைக்கும் உங்களுக்கு இனிய பலன் கிடைக்கும்.






## மகிழ்வான மாற்றம்!

பொதுப்பலன்

உங்களுக்கு இந்தத் தை மாதத்தில் வரும் மாற்றங்கள் இனிமையான மாற்றமாக அமையப் போகின்றது. 1,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். அவர் வலிமையிழந்து 4இல் சஞ்சரிப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடும். பண வரவுகள் திருப்தி தரும் விதத்தில் அமையும். பல நாட்களாக எதிர்பார்த்த மாறுதல்கள் வந்து சேரும்.

உத்தியோகம்

அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், மேலதிகாரிகளிடம் பாராட்டுப் பெறுவீர்கள். பணி உயர்வு பற்றிய தகவல் வந்து சேரும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். தொழில் செய்பவர்களுக்கு, அந்தத் தொழிலை விரிவு செய்யப் போட்ட திட்டம் நிறைவேறும். போட்டியாளர்கள் விலகுவர். பங்குச்சந்தையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, எதிர்பார்த்தது ஒன்று, நடப்பது ஒன்றுமாக இருக்கும்.

உடல்நலம்

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கக் கூடும். உணவுக் கட்டுப்பாடு தேவை. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. ஒரு சிலர் வெப்ப நோய்களுக்கும், ஜீரணத் தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடும்.

குடும்பம்

குடும்ப முன்னேற்றம் கூடும். இல்லத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியிலும் ஆனந்தம் ஏற்படும். இந்த மாதத்தில் தடைப்பட்ட காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். வீடு வாங்கும் முயற்சி கைகூடும். தொழில்நிமித்தமாக பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர்.

பணவரவு

பொருளாதார நிலை மிகச்சிறப்பாக இருக்கும் மாதம் இது. நிலுவையில் இருந்த பெரும் தொகை கேட்காமலேயே வந்து சேரும். உறவினர்களுக்கு உதவி செய்ய ஒரு பெரும் தொகையைக் கொடுக்க முன்வருவீர்கள். தொழிலில் வரும் ஒப்பந்தங்கள் இலாபத்தைக் கொடுக்கும்.

குரு மங்கல யோகம்

மாதத் தொடக்கத்தில் குடும்ப ஸ்தானத்தில் குருவும், செவ்வாயும் இணைந்து குரு-மங்கல யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

சனியுடன் புதன்

இராசிநாதன் புதன், சுக ஸ்தானத்தில் அர்த்தாஷ்டமச் சனியுடன் இணைந்திருப்பதால், ஆரோக்கியத் தொல்லை ஏற்படும்.

மூன்று கிரக சேர்க்கை

புத்திர ஸ்தானத்தில் சூரியன், கேது, சுக்ரனின் சஞ்சாரம் உள்ளது. எனவே பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். அவர்களின் கல்வி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கலைத்துறையில் ஈடுபட்ட குழந்தைகள் விருதுகள் பெறும் வாய்ப்பு உண்டு.

விருச்சிக செவ்வாய்

ஜனவரி 20ஆம் திகதி விருச்சிகச் செவ்வாயின் ஆதிக்கத்தால், விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவார்கள். வழக்குகள் சாதகமாகும்.

புதன் சஞ்சாரம்

ஜனவரி 22ஆம் திகதி கும்பத்திலும் புதன் சஞ்சாரம் செய்கிறார். மகர புதன் சஞ்சாரத்தால் பூர்வீகச் சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும். கும்ப புதன் சஞ்சாரத்தால் உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கலாம்.

சுக்ரன் சஞ்சாரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். சுபச்செலவு அதிகரிக்கும்.

வழிபாடு

புதன்கிழமைதோறும் மகாவிஷ்ணுவை வழிபடுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பத்தில் சுபவிரயங்கள் ஏற்படும். உங்கள் பெயரில் அசையா சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தால் ஆரோக்கியப் பாதிப்பு உருவாகும். சனி பகவானுக்குரிய பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நற்பலன்களைப் பெறலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.

கலைத்துறை

கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஒரு சிலர், மூத்த கலைஞர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பார்கள். சரிவுகளை ஈடுகட்டும் மாதம் இது.

அரசியல்

இராசிநாதன் பலம் இழந்திருப்பதால் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. பிறரை விமர்சிப்பதால் பிரச்சினைகள் ஏற்படலாம். வகிக்கும் பொறுப்புகளை தக்கவைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின் வழி நில். அஞ்ச வேண்டாம். உன் இலட்சியம் எல்லாம் உன் தேசத்தை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும். ~ ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் பிரசாரத்தில் உண்மையைப் பேசுங்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

ஊர் ஊராக நடைபெறும் இத்தேர்தல் பிரசாரத்தில் பலரும் களமிறங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பொதுவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சி என்பதற்கு அப்பால், தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் யார் என்பதுதான் முதன்மை பெறும்.

என் ஊரவர், என் உறவினர், தெரிந்தவர், உதவி செய்யக்கூடியவர் என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் வழி வாக்களிக்கின்ற நடைமுறையே மேலோங்கி இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, தேர்தல் பிரசாரத்தில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

ஏனெனில் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உண்மையைச் சொல்ல மறுத்ததால்தான் எங்கள் மக்கள் பேரிழப்பைச் சந்தித்திருந்தனர்.

குறிப்பாக, வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது விடுதலைப் புலிப் போராளிகள் கொன்றொழிக்கப்பட்டதாகவே இலங்கை அரசின் பிரசாரம் இருந்தது.

இவ்வாறாக இலங்கை ஆட்சியாளர்கள் தமிழினம் என்ற ஒரே காரணத்துக்காக சர்வதேசத்தின் மத்தியில் பொய்யுரைத்தது.

போருக்குப் பின்பும் காணாமல்போனவர்கள் தொடர்பில், உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பில், படையினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பில், முழுப்பொய்யுரைப்பதைக் காணமுடியும்.

இலங்கை அரசாங்கம் உண்மையைச் சொல்லுமாக இருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் போர்க்குற்ற விசாரணை என்பதும் மிகச் சுலபமாகிவிடும்.

ஆக, தமிழினத்துக்கு எதிராக இலங்கை ஆட்சியாளர்கள் பொய்ப்புரைப்பதன் காரணமாகவே இன்றுவரை தமிழினம் பெரும் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருகிறது.

அதேவேளை இதற்கு எதிராகத் தமிழ் மக்கள் போராட வேண்டியும் உள்ளது. இந்நிலையில் நாமே நம் இனத்துக்கு பொய்ப்புரைப்போமாக இருந்தால், எங்கள் மக்களின் எதிர்காலம் என்பது சூனியமாகிவிடும்.

எனவே யார் எந்தக் கட்சியில் நின்று தேர்தலில் போட்டியிட்டாலும் பரவாயில்லை. எங்கள் மக்களிடம் பொய்யுரைக்காதீர்கள்.

உங்கள் கட்சி சார்ந்தவர்கள் தமிழினத்துக்கு எதிராகச் செயற்பட்டால், அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் செய்வது தவறு என்பதை வெளிப்படையாகப் பேசுங்கள்.

மக்கள் உங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பிழையைச் சரி என்றும் அதர்மத்தைத் தர்மம் என்றும் வாதிட்டு விடாதீர்கள். பதவியும் பட்டமும் ஏன்? மனித வாழ்வும் சொற்ப காலத்துக்குரியவை.

உண்மையும் நேர்மையும் தர்மமுமே இந்த உலகில் நிலைத்து நிற்கக் கூடியவை.

ஆகையால், வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால், உண்மையைச் சொல்லி வாக்குக் கேளுங்கள். மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். இதுவே வேட்பாளர்களிடம் நாம் கேட்பது.

## ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியினால்தான் மைத்திரி ஜனாதிபதியானார் – இராஜாங்க அமைச்சர் திலிப்

(தங்காலை)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதலில் தனது கட்சியை தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டுமென இராஜாங்க அமைச்சர திலிப் வெதாரச்சி தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி இன்று அரசாங்கத்தை தூய்மைப்படுத்துவது பற்றி பேசுகின்றார், எனினும் அவரால் தனது கட்சியை தூய்மைப்படுத்திக்கொள்ள இதுவரையில் முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியினால்தான் இன்று ஜனாதிபதி இந்தப் பதவியை வகிக்கின்றார்.

அரசாங்கத்தை தூய்மைப்படுத்த முன்னதாக சுதந்திரக் கட்சியை தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய சாத்தியம் உண்டு.

எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்ட அமைசசர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி பெருமைமிக்க ஓர் கட்சியாகும், தங்களது தொகுதியில் வெற்றியீட்ட முடியாத நபர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றனர் என திலிப் வெதாரச்சி தெரிவித்துள்ளார். (ம)

## தேர்தல் தொடர்பாக 139 முறைப்பாடுகள்

இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக 139 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளுள் தேர்தல் விதிமுறைகளை மீறிய 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பில் 46 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதுவரை கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில், 9 வேட்பாளர்களும் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## மனைப்பொருளியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மண்டைதீவு மக்ளிர் அபிவிருத்தி நிலையத்தின் வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி நாளை 18ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மண்டைதீவு 5ஆம் வட்டாரம் அனுஷா திருமண மண்டபத்தில் வேலணை உதவிப் பிரதேச செயலர் எஸ்.சி.என். கமலராஜன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக களப்பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், சிறப்பு விருந்தினர்களாக மண்டைதீவு பங்குத்தந்தை வண. பிதா மனுவேற்பிள்ளை டேவிட், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. பஞ்சலிங்கம், கௌரவ விருந்தினர்களாக ஜே/7. ஜே/8 கிராம உத்தியோகத்தர் எம்.சசிக்காந் மற்றும் ஜே/9 கிராம உத்தியோகத்தர் என்.உதயராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

## பொதுக்கூட்டம்

யாழ்.ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இதுவரையில் எமது பாடசாலையில் பழைய மாண்வர் சங்கத்தில் இணைந்து கொண்டவர்களும் பழைய மாணவர்களாக இணையாதவர்களும் நடைபெறும் கூட்டத்திற்கு வருகை தந்து அங்கத்தவர்களாக இணைந்து கொண்டு புதிய நிர்வாகத் தெரிவிலும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபரும் சங்கத் தலைவருமான செ.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-8)

## எல்லைதாண்டிய இந்திய மீனவர்கள் 16 பேர் நெடுந்தீவுக் கடலில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 16 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

"நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு தொழிலில் ஈடுபட்டபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்திய 4 படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மலேரியா தொற்றுக் குறித்து அவர்கள் 16 பேரும் மருத்துவ சோதனைக்குட் படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படுவர்" என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தைகள் படிப்பை சீரமைப்பது எப்படி?

இன்றைய காலத்தில் சில குழந்தைகள் தாய், தந்தை, ஆசிரியர் யார் சொன்னாலும் அனுசரிக்காத நிலையுள்ளது. அது நல்லதல்ல. சிறு வயதிலேயே நாம் அனுசரித்துப் பழக வேண்டும். வயதுடன் பக்குவமும் வளர்ந்தால் நன்மை தீமைகளைக் கண்டறிந்து செயற்பட முடியும். ஓரளவிற்கு நன்றாகப் படிக்கும் குழந்தைகளை உற்சாகமூட்டி அவர்கள் மேலும் நன்றாகப் படிப்பதற்கான வழி முறைகளைச் சொல்லிக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும்.

சிலபெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை சரியாகப் படிப்பிக்கவில்லை. அதிக மதிப்பெண்கள் பெறவில்லை என்று கூறி அவர்களைத் திட்டுவார்கள். அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டுகிற பெற்றோர்களும் உண்டு. அவ்வாறு செய்தல்கூடாது. குழந்தைகளின் அறிவுத்திறன், ஆரோக்கியம், சூழ்நிலை அனைத்தையும் கணக்கில் கொண்டு அவனால் என்ன முடியும் என்பதை அறிந்து கையாள வேண்டும். *(தொடரும்)*

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நடிப்புக்காகக்கூட பொய் பேசாதே!



✦ தாமிரப்பாத்திரத்தை நாள்தோறும் துலக்க வேண்டும். இல்லையேல் அதில் களிம்பு ஏறிவிடும். மனமும் தாமிரம் போன்றது.

✦ நாள்தோறும் பிரார்த்தனை, நல்ல எண்ணங்களால் அதை துலக்க வேண்டியது அவசியம். தாய்மீதும், தந்தை மீதும் பக்தியில்லாத ஒருவனுக்கு தெய்வபக்தி ஒருநாளும் வராது. தாயும், தந்தையும் துன்மார்க்கர்களாக இருப்பினும் பிள்ளைகள் அவர்களுக்குத் தொண்டு செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள்.

✦ எல்லா மனிதர்களிடத்தும் இறைவன் இருக்கிறான். ஆனால், இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாடு. நடிப்பதற்காகக் கூட பொய் பேசுதல், திருடுதல் போன்ற பொருந்தாத செயல்களைச் செய்யக் கூடாது.

✦ நடிப்பதே நாளடைவில் நம் மனதைக் கெடுத்து விடும். பிறரிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ, அதையே பிறருக்குச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. நிச்சயம் நாம் நல்லதை மட்டுமே எதிர்பார்ப்போம். அதனால் நாமும் பிறருக்கு நல்லவை மட்டுமே செய்ய வேண்டும்.

✦ ஒருவனுடைய குணநலன்கள் அவனுடைய சகவாசத்தைப் பொறுத்து அமைகிறது. அதேபோல, தன் குணத்திற்கேற்ற நண்பர்களையே ஒருவன் நாடுகிறான். ஆக குணமும், நட்பும் ஒன்றையொன்று சார்ந்தவையாக இருக்கின்றன.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில** சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரிய கூமர சங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** உயிலங்குளத்திலிருந்து தலை மனனார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மனனார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மென்ட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டி பம் கவுஸ், பேசாலை Palmayrah House, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற் படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தேசிய அணியில் மூன்று தமிழ் வீரர்கள்



நியூசிலாந்தில் ஆரம்பமாகியுள்ள இளையோர் உலக கிண்ண போட்டியில் கனடா தேசிய அணியின் சார்பில் 3 தமிழ் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். கவின் நரேஸ் எனும் 17 வயதுடைய துடுப்பாட்ட வீரரும் கிரிஷென் சாமுவேல் எனும் 18 வயதுடைய விக்கெட் காப்பாளரும், 18 வயதுடைய எரான் பத்மநாதன் எனும் சுழல் பந்து வீச்சாளருமாக 3 தமிழர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

16 அணிகள் பங்கெடுக்கும் இளையோருக்கான உலக கிண்ண போட்டிகள் நியூசிலாந்தில் ஆரம்பமாகி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஸ்கோரர்களை உருவாக்க கருத்தரங்கும் பயிலரங்கும்

இலங்கை கிரிக்கெட் ஸ்கோரர்ஸ் சபையினால், வடமாகாணத்தில் புதிய ஸ்கோரர்களை உருவாக்கும் பொருட்டு, அவர்களுக்கான கருத்தரங்கு, பயிலரங்கு மற்றும் பரீட்சை எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன் ஆங்கிலம் மற்றும் கணனி அறிவைப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். பங்குபற்ற விரும்புவர்களை தங்கள் சுயவிபரக் கோவையுடன் கூடிய விண்ணப்பத்தை இல 24/28, கடவத்த வீதி, தெஹிவளை என்னும் முகவரிக்கு அல்லது info.scorers@gmail.com. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும், பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் விபரங்களை சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் பதிவு செய்துகொள்ள முடியும்.

பங்குபற்ற விரும்புபவர்கள் கருத்தரங்கு, பயிலரங்கு மற்றும் பரீட்சை என்பவற்றுக்கான கட்டணம் 2500 ரூபாயை, ஹற்றன் நஷனல் வங்கி, சினமொன்ஸ் கார்டின் கிளை, 076020106331 என்ற வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, அதன் பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் சிந்தக்க முனசிங்ஹ 071 773 3666, 075 522 2200, சஞ்சய ஜெயசிங்ஹ 071 828 4131, 077 610 6238 மற்றும் எஸ்.ரவீந்திரன் 071 608 1205 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

வடமாகாணத்தில் ஸ்கோரர்ஸ் என்பவர்கள் முன்னைய காலங்களில் இல்லாமல் இருந்தது. இந்நிலையில் இந்த புதிய ஸ்கோரர்களை உள்வாங்கும் முயற்சியானது மேற்கொள்ளப்படுகின்றது. உள்வாங்கப்படும் ஸ்கோரர்கள் போட்டிகளில் ஸ்கோரர்களாக பங்குபற்றும் போது, கொடுப்பனவு வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யோகசாந்தின் சிக்சர் மழையால் கிண்ணம் வென்றது இளங்கதிர்





கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கழகம் மறைந்த அதிபர் சிவகடாச்சம் ஞாபகார்த்தமாக நடத்திய கிரிக்கெட் சுற்று போட்டியின் இறுதி போட்டி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

12 பந்து பரிமாற்றம் 11 வீரர்கள் கொண்ட போட்டியாக அமைந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இளம் கதிர் விளையாட்டுக்கழகம் முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது. முதலில் களம் இறங்கிய புத்தூர் ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் ஆரம்பத்தில் தடுமாறிய போதும் துவாவின் 3 ஆறு ஓட்டம் 1 நான்கு ஓட்டங்கள் அடங்கலான 32 ஓட்டங்கள் இறுதி விக்கெட் இணையின் 15 இணைப் பாட்டத்தின் உதவியோடு 81 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் கர்சன் 15 ஓட்டங்களை விட்டு கொடுத்து 3 விக்கெட்டை வீழ்த்தினார். 82 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என களம் இறங்கிய இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் யோகசாந் முதல் பந்திலேயே 6 அடித்து சிறந்த அதிரடியினை தொடர்ந்தார். மறு புறத்தில் சில விக்கெட் வீழ்ந்த போதும் யோக சாந் 8. ஆறு ஓட்டம் 1 நான்கு ஓட்டம் உட்பட 55 ஓட்டங்கள் பெற்ற நிலையில் அணியின் மொத்த ஓட்டம் 80 ஆக இருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மேலதிக இரு ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டால் வெற்றி பெற்று சிவகடாச்சம் ஞாபக வெற்றி கிண்ணத்தையும் பணப்பரிசில்களையும் மகுடம் சூடியது இளம் கதிர் விளையாட்டுக்கழகம்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் அதிபர் இராஜசேகரம் கலந்து சிறப்பித்தார். சிறந்த துடுப்பாட்ட வீரர் புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் துவாவும் சிறந்த பந்து வீச்சாளர் இளம்கதிர் விளையாட்டு கழகத்தின் கர்சனும் ஆட்ட நாயகனாக அதிரடி அரைசதம் கடந்த யோகசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# ஜெயசூரியவுக்கு அறுவைச்சிகிச்சை



இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரியாவுக்கு அறுவைசிகிச்சை நடந்துள்ளது.

சமீபத்தில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த சனத் ஜெயசூரியாவின் புகைப்படங்கள் வைரலாகின.

இந்நிலையில் அவருக்கு அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள மருத்துவமனையில் முழங்கால் மாற்று அறுவைசிகிச்சை நடந்துள்ளது. (க)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் மைதானம், ஆடுகளம் என்பவற்றை அவசரமாக சீர்செய்ய வேண்டியிருப்பதாக அதிபர் சதா நிமலன் அவர்கள் பழையமாணவர் சங்கத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினர் தாமாக பொறுப்பேற்று உடனடியாக மைதானத்தை சீராக்கும் பணியை ஆரம்பித்துள்ளனர். தி.கோஷிகன், கு.உமாகரன், க.க.வாசன் ஆகியோரின் மேற்பார்வையில் மைதானம் சீராக்கும் பணி நடைபெறுவதை படத்தில் காணலாம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால் மூலவாக்கு...

மூலவாக்களிப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் இடம்பெறவுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் பணிகளுக்கான அதிகப்படியான தபால்மூல வாக்காளர்கள் எண்ணிக்கை குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பிரதித் தலைவர் எச்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

இதன்படி குருநாகல் மாவட்டத்தில் தபால மூல வாக்காளர்கள் தொகை 67 ஆயிரமாக பதிவாகியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக கண்டி மாவட்டத்தில் 48 ஆயிரம் பேரும், அநுராதபுர மாவட்டத்தில் 45 ஆயிரம் பேரும் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, இம்முறை தேர்தலில் 5 இலட்சத்து 60 ஆயிரத்து 20 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பிரதித் தலைவர் எச்.எம். மொஹமட் மேலும் தெரிவித்தார். (ம)

## இன, மதங்களை பய...

னிலை வகிப்பதாக இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான பப்ரல் தகவல் வெளியிட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய மற்றும் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களும் போட்டியிடுகின்ற நிலையில் வாக்காளர்கள் அவதானமாக தெரிவு செய்ய வேண்டும் என்றும் அந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

மார்ச் 12 இயக்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளினால் கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இன்று இன, மதங்களையும் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவும், பிரசார நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. விசேடமாக வடக்கில் யாழ்ப்பாணத்தில் மதத்தை அடிப்படையாக முன்னிலைப்படுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லா இடங்களிலும் இடம்பெறுகின்றது என்று நான் கூறவில்லை.

இன,மத, குலங்களையும் தேர்தலுக்காக பயன்படுத்துகின்றனர். இப்படிப்பட்ட விடயங்களைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெறுவோர் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் சேவை செய்வார்களா? இதுகுறித்து மக்கள் தத்தமது மனச்சாட்சியைத் தொட்டு வினவிக்கொள்ள வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் இப்படிப்பட்ட 9 பேர் தொடர்பாகவும், கேகாலை மாவட்டத்தில் 7 பேர், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 6 பேர், இரத்தினபுரி மாவட்டத்தில் 5 பேர் தொடர்பிலும் எமக்கு முறைப்பாடு கிடைத்திருக்கிறது.

தங்களது தொகுதியிலும் இப்படிப்பட்ட நபர்கள் இருக்கிறார்களா என்பதை வாக்காளர்கள் அவதானித்து அறிந்துகொள்ள வேண்டும். கொலைக் குற்றங்கள் எதிர்கொண்டுள்ள அறுவர், பாதாள உலகைச் சேர்ந்த ஐவர் என எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இப்படிப்பட்டவர்களின் நிலையை அறிந்தும் ஏன் சில தொகுதி அமைப்பாளர்களும், கட்சித் தலைவர்களும் தேர்தலில் களமிறங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை என்றார். (ம)




## கூட்டத்தின் இடைநடு...

உரையொன்றை ஆற்றிய ஜனாதிபதி பின்னர் கூட்டத்திலிருந்து இடைநடுவே எழுந்து சென்றுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னை விமர்சிப்பது தொடர்பிலும், தனக்கு அறிவிக்காமல் அரசாங்கத்தின் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் ஜனாதிபதி கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி அந்த உரையை நிகழ்த்தியுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை பத்திரங்களை கலந்துரையாட முன்னரே ஜனாதிபதி வெளிநடப்பு செய்துள்ளதாக அமைச்சரவை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சில அமைச்சர்கள் சென்று அமைச்சரவை கூட்டத்திலிருந்து வெளியேறிய ஜனாதிபதியை மீண்டும் கூட்டத்துக்கு அழைத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

## பிரதமர் ரணிலுக்கு...

இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் பந்துல கூறியுள்ளார்.

மகிந்தவின் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தின் போது மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் மற்றும் தற்போது வெளியாகியுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் பந்துல மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மத்திய வங்கி ஊழலுடன் பிரதமர் நேரடியாக தொடர்புபட்டுள்ளமை அம்பலமாகிவிட்டதாகவும் இதனால் அவர் பதவி விலகவேண்டும் எனவும் கூட்டு எதிர்கட்சியினர் கோரிக்கையினை முன் வைத்து வருகின்றனர்.

அதேபோன்று எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மாற்றி புதிய பிரதமரை ஜனாதிபதி நியமிக்கவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பின்னர் ஜனாதிபதியின் செயற்பாடுகள் எவ்வாறு அமையப்போகின்றது என்ற எதிர்பார்ப்புகள் அரசியல் வட்டாரங்களை பரபரப்படைய வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆண் ஒருவரின் சடல...

இச்சம்பவத்தின் போது, வட்டக்கச்சியை சேர்ந்த இராசேந்திரம் - சர்வானந்தம் (வயது 22) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புலன் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-15-281-312-315)

## நாடாளுமன்றத்தில்...

யில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது கூட்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தினைக் குழப்பும் வகையில் செயற்பட்டதுடன், மோதலிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பேரவையின் கலந்து...

தமிழ் மக்கள் பேரவையின் கருத்தமர்வும் கலந்துரையாடலும் பேரவையின் இணைத்தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் மற்றும் கருத்தமர்வு நேற்று மாலை நான்கு மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. இதன் போது சி.வி.விக்னேஸ்வரன் தலைமை உரையுடன் கருத்தமர்வை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து **வடகிழக்கு தமிழர் தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம்** எனும் தலைப்பில் பேராசிரியர் முத்துகுமாரசாமி சொர்ணராஜா ( சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர்) உரையாற்றினார்.

இதன் பின்னர் **இடைக்கால அறிக்கை மாயைகளை கட்டுடைத்தல** என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் உரையாற்றினார். இதன் பின்னர் முதலமைச்சர் தொகுப்புரையையும் ஆற்றியிருந்தார். அத்தோடு கேள்வி பதில்கள் வழங்கும் கலந்துரையாடலும் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈபிஆர்எல்எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் மதத் தலைவர்கள், கட்சிகளினதும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் பிரதிநிதிகள், பொது மக்கள் என வீரசிங்கம் மண்டபம் முழுவதுமாக பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-4-9)

## மாணவி படுகாயம்...

யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று பகல் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது புகையிரத பாதையில் புல் மேய்ந்து கொண்டிருந்த இரு பசுமாடுகள் புகையிரதத்துடன் மோதுண்டு பல மீற்றருக்கப்பால் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்திலேயே அவை உயிரிழந்துள்ளன.

இதன்போது தூக்கி வீசப்பட்ட பசுக்களிலொன்று மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக நின்றிருந்த மாணவியுடன் மோதி விழுந்தது.

இதனால், யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த மாணவி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம)

## தமிழ்த் தலைமைகள்...

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கருத்தமர்வு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பொது மக்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதும் உரையாற்றும் போதும் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும்அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

அரசியல் விடயங்கள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வு கலந்துரையாடல்களை தமிழ் மக்கள் பேரவை அனைத்து மட்டங்களிலும் விஸ்தரிக்குமா என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

ஆம். அதைத்தான் தற்போது ஆரம்பித்துள்ளோம். மாவட்டம் தோறும், கிழக்கு மாகாணம், முக்கிய நகரங்களில் நடத்தவுள்ளோம். இது மக்கள் இயக்கம். மக்களோடு உறவாடி அறிவை பகிர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான இடைக்கால அறிக்கையை எவ்வாறு தடுக்கலாம் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்,

அதற்கான வழிமுறையை மேற்கொண்டு வருகிறோம். மக்கள் ஒரு இயக்கமாக பரிணமித்து, அரசியல் தீர்வு தொடர்பாக மக்கள் கரிசனை கொண்டுள்ளார்கள், ஓரிருவர் கொழும்பில் இருந்து கூறுவது மக்களின் [illegible] இல்லை என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

அதற்கும் ஒரு விமர்சனம் இருக்கிறது. அதாவது இவ்வாறு செய்தால் தருவதும் தராமல் போய்விடுகிறது என தெரிவிக்கப்படுகிறது. தரத் தேவையில்லாததை தருவதால் எமக்கு என்ன நன்மை கிடைக்கப்போகிறது.

எமக்கு தேவையான ஒன்றை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர ஏதோ ஒன்றை பெற்று விட்டோம் என்றால் அதனால் எமக்கு எந்த நன்மையும் இல்லை.மேலும் 20 வருடங்களில் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறைவாக இருக்கும் எங்களை பிரதிநிதித்துவப் படுத்துவபவர்கள் வடகிழக்கு மாகாணத்துக்கு வெளியில் இருந்து வருபவர்களாதான் இருப்பார்கள் அதை நாம் மறக்கக்கூடாது.

தற்போது நாம் ஒரு தீர்வினை பெற்றுவிட்டோம் என்ற மனப்பாங்கில் நாம் இருப்போமானால் அதன் அடிப்படையில் பின்னணியில் இருக்கும் பல விடயங்கள் எமக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு நட்டத்தை ஏற்படுத்தும் என்பதை உணர வைக்க வேண்டும். அதையே தற்போது செய்கிறோம்.

இடைக்கால அறிக்கையை தடுக்கலாம் என்றால், அந்த இடைக்கால அறிக்கைக்கு நாமே மும்முரமாக இருக்கும் போது தடுப்பது கடினம் தான். எமக்கு எதிரானவர்களை தடுப்பது இலகு. எம்மோடு இருப்பவர்களை தடுப்பது கஷ்டம்.

மேலும் மதம் சம்பந்தமான விடயத்தை பற்றி பகிரங்கமாக கூறி வருகிறேன். சரித்திர ரீதியாக பார்க்கும் போது ஒரு காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பௌத்தர்கள் இருந்தார்கள். பக்தி இலக்கியம் வந்த காலத்தில் பௌத்தத்தை கைவிட்டு விட்டார்கள். தமிழ் மக்கள் கைவிட்ட ஒரு மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பது எப்படி என்று கேள்வி எழுப்பியுள்ளேன்.

இது ஒரு முக்கியமற்ற விடயம் என்ற முறையில் எமது தலைமைத்துவம் அது பரவாயில்லை என கூறுவது பிழை என கூறுகிறேன்.

நாம் கைவிட்ட ஒன்றை மீண்டும் எமக்கு திணிப்பதற்கும் தெற்கில் இருந்துவந்து வடக்கு கிழக்கில் பௌத்த ஆலயங்கள் கட்டுவதும் எம்மை ஆக்கிரமிக்கும் செயலாக காண்கிறேன். அரசியல் யாப்பில் இதையெல்லாம் கவனத்தில் எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிவுக்கு 2009ல் வந்திருப்பினும் இனப்பிரச்சினை அதனால் தீர்க்கப்படவில்லை. அதனால்தான் அதிகாரப்பரவலாக்கம் தேவையுடையதாகின்றது. தற்போதும் 13வது திருத்தச்சட்டம் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தியேயுள்ளது.

ஆனால் அது பெரும்பான்மையினரின் பெருந்தயவை முன்வைத்தேயாக்கப்பட்டுள்ளது. அதனால்தான் 1992ன் 58வது இலக்கச் சட்டமான மாவட்ட செயலாளர்கள் பற்றிய அதிகாரமாற்றச் சட்டத்தை இயற்றக் கூடியதாக இருந்தது. ஒற்றையாட்சி எனும் போது முன்னர் கொடுத்த அதிகாரங்களைப் பறித்து இவ்வாறான சட்டங்களைக் கொண்டு வரலாம். காரணம் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரம் பெரும்பான்மையினரின் கைவசமே தொடர்ந்திருக்கும்.

மாகாணசபைகளின் அதிகாரத்தின் கீழிருந்த மாவட்டச் செயலர்கள் திடீரென்று இந்தச் சட்டம் இயற்றப்பட்டதும் மத்திக்குரியவர்கள் ஆகிவிட்டார்கள். இதனால் இன்று வடமாகாணத்தில் இரட்டை நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. ஒன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண உறுப்பினர்களின் நிர்வாகம், மற்றையது மத்திய அரசாங்கத்தின் முகவர்களின் நிர்வாகம். இங்கு இரு முகவர்கள் சேர்ந்தும் சேராமலும் அவர்கள் நிர்வாகத்தை நடாத்தி வருகின்றார்கள். ஆளுநரும் மத்தியின் முகவர்ரே. அரசாங்க அதிபரும் அவர்களின் முகவரே.

ஆகவே அதிகாரப் பரவலாக்கம் என்றபோது நாம் எதிர்பார்த்தது நம்மை நாமே ஆண்டு வருவதையே. ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் என்ற போர்வையில் எமக்குக் கிடைத்தது வேண்டியபோது மத்தியின் ஊடுருவல்களே. இவ்வாறு ஊடுருவல்கள் தொடர்ந்து இருந்தால் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படப் போகின்றவர்கள் போருக்கு முன்னர் பாதிக்கப்பட்ட அதேமக்களே. இதனால்தான் ஒற்றையாட்சியைக் களைந்து சமஷ்டி ஆட்சியை (04-ம் பக்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

முதலியார் வீதியில் (கச்சேரி நல்லூர் வீதி அருகாமை) வீட்டுடன் கூடிய 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
077 959 1097

(2423)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress

(C-1239)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வைத்திய கலாநிதி இ.கனகலிங்கம்



தோற்றம்
12
06
1942

மறைவு
28
01
2017

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
மிளிர்ந்த எம் அப்பாவே!
எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்த எம் அப்பாவே!
பொன்னான வாழ்வுதனை எமக்களித்து
கூடிக் குலம் மகிழ்ந்திருந்து,
ஓராண்டு சென்றாலும் ஒவ்வொரு
நொடியும் வாழ்கிறோம் - உம்
நினைவை நெஞ்சில் சுமந்து,
உங்களை இழந்த துயரை நாம்
ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றோம்.

(C-1245)

அல்வாய் மேற்கு,
திக்கம்.
- குடும்பத்தினர்


## பணிநிலை வெற்றிடம்

● யாழ் நகரில் நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் தேவை. O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

● லொத்தர் கடைகளுக்கு ரிக்கட் விற்பனையாளர்கள்தேவை. சுன்னாகம், யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, கே.கே.எஸ் ஆகிய இடங்களுக்கு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 516 4928, 021 221 5777

(2439)

இதோ! 3-6 மாத தொழிற்பயிற்சியுடன்
சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், அவுஸ்ரேலியா, கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, செல்லும் ஏற்பாடு!

டுபாய், கட்டார், குவைத், சவுதி, மாலைதீவு, ஓமான், பங்களாதேஷ், மலேசியாவில்
உடனடி வேலைவாய்ப்புக்கள்
ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு
அழையுங்கள்:
0777 324 004 | 077 36 16 798

9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 www.sikaram.lk

(C-1235)


## ஆண் ஒருவரின்...

ஞர் ஒருவரின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு நடைபெற்றிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

ஆயினும், நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை வீதியால பயணித்த பொது மக்கள் பாலத்தின் கீழ் உள்ள தண்ணீரில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சடலம் ஒன்றும் காணப்படுவதை அவதானித்து விட்டு கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

27☛


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
(C-1128)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

அண்ணா
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1243)

## வேலைக்கு ஆட்கள் தேவை

மோட்டார் சைக்கிள் சேவிஸ் நிலையத்தில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்கள், உடன் தேவை.
தங்குமிடம் கொடுக்கப்படும்.

- மெக்கானிக்
- Electrician
- சேவிஸ்மன்

RAGAN SERVICE
HERO DEALER

சாமியன் அரசடி, நெல்லியடி.
தொடர்பு : 021 226 1747
077 699 6501

(C-1244)


## நாடாளு...

சிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, பிணை முறி அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தவுடன்அதனைநாடாளுமன்ற இணையத் தளத்திலும் வெளியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே குறித்த பிணைமுறி அறிக்கை அண்மை

27☛

# மரண அறிவித்தல்

## கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கெனடி

(எதியோப்பிய பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் மற்றும் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்)



யாழ்ப்பாணம், காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் மனோகரன் கெனடி 10.01.2018 புதன்கிழமை எதியோப்பியாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் (ஆசிரியர்) - சிவயோகம் (அதிபர்) தம்பதிகளின் அன்பு மகனும், நயினாதீவைச்சேர்ந்த காலஞ்சென்ற மரியசந்தானம் (பிராந்திய முகாமையாளர் காப்புறுதி கூட்டுத்தாபனம்) மற்றும் பூமணி (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாநிதி நதிராவின் (கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்) அன்புக் கணவரும், கலாநிதி திருமதி வீரமங்கை யோகரத்தினம் (ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக் கழகம்), பிரேமதாஸ் குமாரசிறி (ஆங்கில ஆசிரியர் - யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற ரஞ்சித்குமாரசிறி மற்றும் திருமதி வீரமனோகரி ஸ்ராலினா (ஆசிரியர்), காலஞ்சென்ற விஜயராஜசேகரன்குமாரசிறி மற்றும் அருள்முகன் சாயிபாபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகரத்தினம் (பொறியியலாளர்), யோகேஸ்வரி, சாந்தி (பிரான்ஸ்), கோபிச்சந்திரன் (ஆசிரியர்), கலிஸ்ரா (ஜேர்மனி), மணிமலர் - குணசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஜனிகா - ரமேஸ் குமார், சாயிசந்திரன், லக்ஷ்மன் ஆகியோரின் மாமனாரும், நோபல் ரட்ணசிறி, ஜஸ்மினி, விஜயதர்சினி, விஜயடயானா, சயந்திகா, கரோலினா, ஸ்ராலினா, தாரகா, கெவின் ஆகியோரின் சிறிய தந்தையும், அபிஷேக்கின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2018 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் நீலிப்பந்தனையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(2436)

நீலீப்பந்தனை, காரைநகர். தகவல் : குடும்பத்தினர்
077 611 2664, 077 946 9547, 075 837 3921

# ஈராண்டு நினைவலைகளில்...



அமரர் யோ.சிவகௌரி

திதி : தை வளர்பிறை பிரதமை
17.01.2018

ஈராண்டு ஓடியது ஆனால்
ஈரம் என்றும் ஆறவில்லை
ஈசனவன் அள்ளி விட்டான்
எம் அன்பு செல்வத்தை...
அவள் ஆத்மா
கேதார நாதனின் பாதகமலத்தில்
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(C-1246)

மலர்வு : 20.10.1986
உதிர்வு : 09.02.2016

இல.37/3 கணேசபுரம்,
கிளிநொச்சி.
- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org